# தமிழரசு

செப்டம்பர் 2007
விலை ரூ.10/-




நாள் : 21.8.2007
பொதுவுடைமை வீரர்

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
ஆவணி - புரட்டாசி செப்டம்பர் 2007
மலர் : 39 இதழ் : 3

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர்.ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.ராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்**
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.


தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது**
**வாஅய்மை வேண்ட வரும்**

தூய்மை என்பது பேராசையற்ற தன்மையாகும். அத்தூய்மை வாய்மையை நாடுவோர்க்கே வாய்க்கும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


❖ பட்டணங்களிலே உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்குத் தரவேண்டும்
- மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரை ....... 3

❖ என்னை பெரியார் பழக்கியது. அண்ணா பயிற்றுவித்தது உங்களுக்கு உழைப்பதற்காகத்தான்! - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ....... 8

❖ தமிழ் வாழும் மற்றவர்களையும் வாழ வைக்கும்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ....... 14

❖ அண்ணன் ஜீவானந்தம் பெயரால் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டுவோம்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ....... 20

❖ 2006-2007ஆம் ஆண்டில் ரூ.20 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கணினி மென்பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் முன்னிலை
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகவல் ....... 26

❖ நோய் நொடிகளின்றி தூய்மையாக வாழ, போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருக்க புதிய புதிய நகரங்கள் அமைந்தாக வேண்டும்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ....... 29

❖ மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் உயர்கல்வி நிறுவனங்களை திறக்க வேண்டும்
- மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம் ....... 35

❖ பதிவு மூப்பு அடிப்படையில் முதன்முதலாக 5,098 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு ....... 47

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்வுகள்**

❖ அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் கணினி ....... 54

❖ பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.89.14 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்து உரை ....... 55

❖ தஞ்சை நகராட்சியில் ரூ.70 கோடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ....... 59

❖ மதுரை - அரசு இராசாசி மருத்துவமனைக்கு ரூ.22 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை ....... 60

❖ தமிழக அரசு மக்களுடைய எண்ணங்களையும் தேவைகளையும் உணர்ந்து செயலாற்றி வருகிறது - நாமக்கல்லில் நடைபெற்ற அரசு விழாவில் நலத்திட்டங்களை தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும் ஆற்றிய உரை ....... 64

❖ நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசுதான், தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு
- மாமல்லபுரத்தில், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட விழாவில் ஆற்றிய உரை ....... 68

❖ பார்வையற்ற 38 பேருக்கு அரசுப் பணி - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார் ....... 73

❖ அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி சென்னைப் பெருநகர்ப்பகுதி இரண்டாம் முழுமைத் திட்டம் அமையும் - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் ....... 75


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* மாமல்லபுரத்தில் நடந்த பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (3.9.2007)

*இரண்டாம் பக்க அட்டை :* பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (21.8.2007)

*நான்காம் பக்க அட்டை :* மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (18.8.2007)



"எங்களுடைய மொழியும்
கலாச்சாரமும்
காப்பாற்றப்பட வேண்டும்.
இந்தியக் கூட்டாட்சிக்குள் எங்கள்
மாநிலத்திற்குரிய அரசியல்
உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
எங்களுடைய பொருளாதார
முன்னேற்றத்திற்கு
உறுதி மொழி தேவை"

**- பேரறிஞர் அண்ணா**



பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்து
மாலையணிவித்தார்கள். (ஏற்காடு - 15.9.2007)



# பட்டணங்களிலே உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்குத் தரவேண்டும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் உரை**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை **3.9.2007** அன்று தொடங்கி வைத்து மாமல்லபுரத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :–

இன்று மாலையிலேயிருந்து மாமல்லபுரம் வட்டாரத்தில் மக்களின் எழுச்சியையும் அவர்கள் முகத்தில் பொங்குகின்ற மகிழ்ச்சியையும் காணுகின்ற வாய்ப்பைப் பெற்று அந்த மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்ள உங்களையெல்லாம் சந்திக்கின்ற, இந்தப் பந்தலிலே உங்களைக் காணுகின்ற பெரிய வாய்ப்பைப் பெற்றமைக்காக பெருமையடைகின்றேன். மாமல்லபுரம் ஏதோ இன்று மாலையிலேதான் நான் வந்த ஊரல்ல. மாமல்லபுரத்திற்கும் எனக்கும் ஏறத்தாழ ஒரு **60** ஆண்டு கால தொடர்பு உண்டு. **1950** ஆம் ஆண்டு வாக்கில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும் அவருடைய சகோதரர் எம்.ஜி. சக்கரபாணி அவர்களும், இயக்குனர் காசிலிங்கம் அவர்களும் இந்த மாமல்லபுரத்திலே அரசு விருந்தினர் விடுதியிலே தங்கி எம்.ஜி.ஆர். நடிப்பதற்காக "நாம்" என்கின்ற ஒரு சமூகப் புரட்சிப் படத்தை நான் எழுதிய போது இந்த வட்டாரத்திலே எந்தளவிற்கு நான் பழகியிருக்கின்றேன், எவ்வளவு நண்பர்களை நான் அன்றைக்கே பெற்றிருக்கின்றேன் என்பதையெல்லாம் விரிக்கின் பெருகும். எனவே விரிவஞ்சி விடுக்கின்றேன் .

இன்று கூட நான் மாலையிலே சொல்லிக் கொண்டு வந்தேன் . இங்கே எத்தனையோ சிற்பங்கள் இருக்கின்றன. எத்தனையோ பழங்காலத்து வரலாற்றுக் காலத்து அடையாளச் சின்னங்கள் இருக்கின்றன. ரதங்கள் இருக்கின்றன. குகைகள் இருக்கின்றன. இப்படியெல்லாம்

இருந்தும்கூட, இங்கே "புலிக்குகை"என்கின்ற ஒரு இடத்தை மரங்கள் அடர்ந்த ஒரு இடத்திலே அமைக்கப்பட்டிருந்த அந்த புலிக் குகையைத் தேடிக் கண்டுபிடித்து அதை புகைப்படமாக எடுத்து வெளியிடச் செய்வதற்கு நானும் எம்.ஜி. சக்கரபாணியும் தான் அன்றைக்கு காரணமாக இருந்தோம் என்பதை நண்பர்களிடத்திலே கூட நான் மாலையிலே சொன்னேன்.

## மகாபலிபுரமா? மாமல்லபுரமா?

மாமல்லபுரம் – இது மாமல்லபுரமா? மகாபலி புரமா? இந்தப் பிரச்சினைக்கு நாம் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். இன்றைக்கு காணுகின்ற முடிவுதான் என்றைக்கும் தொடர வேண்டும். இப்பொழுது தம்பி ஸ்டாலின் சொன்னாரே நாம் எடுக்கிற முடிவுதான் பேருந்து நிலையம் எது என்று தீர்மானிக்கும் என்று. அப்படி ஒரு முடிவு எடுத்து இதுதான் பேருந்து நிலையம் என்று கட்டிவிட்டால் பிறகு அதுதான் பேருந்து நிலையமாக, எப்படி இருக்க வேண்டுமோ அதைப்போல மகாபலிபுரமா? மாமல்லபுரமா? இந்த இரண்டில் எது சரி? என்ற ஆராய்ச்சிக்கு நாம் இடம் அளித்து எந்த முடிவு எடுக்கிறோமோ அந்த முடிவை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும். எந்த முடிவை எடுப்போம் என்றால், தமிழாய்ந்த தமிழர்கள் ஆய்ந்தெடுத்த முடிவு என்றால், அது மாமல்லபுரம் என்ற முடிவாகத்தான் இருக்க முடியும். இரண்டு நாளைக்கு முன்பு கூட ஏடுகளிலே வந்த செய்திகளை பார்த்திருப்பீர்கள். ஓணம் பண்டிகை என்ற ஒரு பண்டிகையை மலையாள மொழி பேசுகின்ற மக்கள் கொண்டாடுகிறார்கள். அந்த ஓணம் பண்டிகை எப்படி வந்தது? யாரால் வந்தது? ஏன் வந்தது? என்பதற்கான காரண காரிய விளக்கங்களை தாங்குகின்ற ஒரு அச்சிலேற்றப்பட்ட ஒரு துண்டுத்தாளை நான் பார்க்க நேரிட்டது. அந்த துண்டுத் தாளிலே உள்ள விஷயங்களை நான் படித்த பிறகு அது பற்றிய புத்தகத்தையே வாங்கிப் படிக்க கேரள மாநிலத்திலேயிருந்து ஆங்கிலப் புத்தகங்களை வரவழைத்து அதற்கான சான்றுகளை படித்துப் பார்த்தேன். என்ன சான்று என்றால், மகாபலி என்று அழைக்கப்பட்ட மன்னன், புராணிகர்களுடைய கருத்துப்படி அவர் தமிழருமல்ல, மலையாளியுமல்ல, ஒரு ராட்சசன். அவன் கேரளத்திலே அரசு புரிந்தான். நான் சொல்வதல்ல, நம்முடைய தமிழகத்திலே உள்ள புராணங்கள், இப்படி சொல்லிக் கொண்டிருக்கின்றது. அவன் அங்கே அரசு புரிந்தான். அவனுடைய ஆட்சியில் தேவர்களுக்கெல்லாம் தீமை செய்தான். அதனால் தேவர்கள் வெகுண்டு, மகாவிஷ்ணுவிடத்திலே சென்று நீதான் எங்களை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டார்கள். உடனே மகாவிஷ்ணு பயப்படாதீர்கள். நான் வாமனா அவதாரம் எடுத்து அதாவது குள்ள உருவம் கொண்டு மகாபலி சக்கரவர்த்தியை ஏமாற்றி அவனை வெல்லுகிறேன். அவனை யுத்தத்தால், போரால், ஆயுதங்களால் யாரும் தோற்கடிக்க முடியாதென்றால் என்னுடைய தந்திரத்தால் தோற்கடிப்பேன் என்று மகாவிஷ்ணு புறப்பட்டுவிட்டார்.

## ஓணம் பண்டிகை

ஒரு குள்ளமான பிராமண வடிவிலே வந்தார். யார் எதைக் கேட்டாலும் கொடுக்கக் கூடிய வள்ளல் மகாபலி சக்கரவர்த்தியிடத்திலே சென்று எது கேட்டாலும் "கொடுப்பாயா?" என்று கேட்டார். "தருவேன்" என்றான். "அப்படியானால் ஒன்றும் அதிகம் வேண்டாம். எனக்கு ஒரு மூன்று அடி மண் கொடு போதும்" என்று கேட்டார். உடனே சக்கரவர்த்தி, "இவ்வளவு பெரிய ராஜ்யத்தில் எத்தனையோ கல் தொலைவு பரப்பளவு உள்ள இந்த மண்டிலத்தில் மூன்றடி மண்தானா பிரமாதம், எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான். உடனே அந்த குள்ளமான பிராமணர், தன்னுடைய பாதத்தை கீழே ஊன்றி "ஒன்று" என்று அளந்தார். அதில் உலகத்திலே பாதியை அளந்தார். மறுபடியும் "இரண்டு" என்று அளந்தார், உலகத்திலே இன்னொரு பாதியையும் அளந்து விட்டார். அளந்துவிட்டு மன்னரைப் பார்த்துக் கேட்டார், இரண்டடி முடிந்து விட்டது மகாபலி, மூன்றாவது அடி மண் எங்கே என்று கேட்டார்? மூன்றாவது அடிக்கு மண் இல்லாவிட்டால் என் மண்டை இருக்கிறது என்று தலையை குனிந்தார். அவனுடைய தலையிலே காலை வைத்து மகாபலி சக்கரவர்த்தியை ஒரே அழுத்தாக அழுத்திய மகாவிஷ்ணு, பிராமண உருவிலே, குள்ள உருவிலே இருந்த மகாவிஷ்ணு அவனை கொன்றுவிட்டார் என்றும், அப்படி மகாபலி சக்கரவர்த்தி சாகும் போது அய்யனே நான் இறந்தாலும்கூட ஆண்டுக்கு ஒரு முறை என்னுடைய மக்களைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு வரம் தா என்று கேட்டார். பரவாயில்லை வரம் தருகிறேன் என்று வரம் கொடுத்தார், அந்த வரத்தை நிறைவேற்றுகிற நாள்தான் ஓணம் பண்டிகை என்று தமிழ்நாட்டிலே உள்ள புராணங்கள் சொல்லுகின்றன.

## திராவிடமொழி உணர்வு

ஆனால் கேரளத்திலே இருக்கிற புராணங்கள் என்ன சொல்லுகிறது என்றால், இங்கே தமிழ்நாட்டு புராணத்தை புராணிகர்கள் எழுதியது. கேரளத்துக் கதையை, ஏதோ கொஞ்சம் பகுத்தறிவு உள்ளவர்கள் எழுதியது. கேரள மக்களை புரிந்தவன் எழுதியது. மான உணர்வு உள்ளவன் எழுதியது. மனித உணர்வு உள்ளவன் எழுதியது. மலையாள உணர்வு உள்ளவன் எழுதியது. கேரளமும் கலி தெலுங்கும், கவின் மலையாளமும் திராவிட மொழி என்கின்ற காரணத்தால் திராவிட மொழி உணர்வு உள்ளவன் எழுதியது. அவன் என்ன எழுதினான், அவன் எழுதியது இன்றைக்கும் கேரளத்திலேயிருந்து வெளிவருகின்ற கதைகளாக நமக்கு கிடைக்கின்றன. அவன் எழுதியதுதான் கேரளத்திலே "மாவலி", 'மகாபலி'




அல்ல. ''மாவலி'' என்று ஒரு மன்னர் இருந்தார். ''மாவலி'' என்றால் தமிழ் புரிந்தவர்களுக்கு சொல்கிறேன் , 'வலி' என்றால் வலிமை. மாவலி என்றால் பெரிய வலிமை. பெரிய வலிமை கொண்டவன் 'மாவலி' மன்னன் . அந்த மாவலி மன்னன் கேரளத்திலே ஒரு பகுதியை ஆண்டான். அவன் ஆண்டபொழுது மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். நல்லாட்சி நடத்தினான் . நல்லாட்சி நடத்தினால் சில பேருக்கு பொறுக்குமா? இங்கே அம்மையார் யசோதா சொன்னாரே, அதைப் போல சில பேருக்குப் பொறுக்கவில்லை. ஆகவே எல்லோரும் சென்று மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள். இவன் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்றானே, இப்படியேவிட்டால் இவனை ஜெயிக்கவே முடியாதே, நிரந்தரமாக மன்னனாக ஆகிவிடுவானே. என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். பொறுங்கள், நான் பார்க்கிறேன் என்று சொல்லி, மகாவிஷ்ணு அந்த மன்னனை அழித்தார். இதுதான் மாவலி கதை. அவன் அழியும் போது கேட்டுக் கொண்டான், மகாவிஷ்ணுவைப் பார்த்து, நான் உன்னுடைய தந்திரத்தால், சூழ்ச்சியால் அழிக்கப் படுகின்றேன் . இருந்தாலும் பரவாயில்லை, என்னுடைய மக்களை நல்லாட்சி நடத்தி வாழவைத்தேன். அப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களை ஆண்டுக்கு ஒருமுறை நான் காண்பதற்கு எனக்கு ஒரு வரம் தா என்று கேட்டான். அந்த வரத்தை மகாவிஷ்ணு அவனுக்கு வழங்கினான் . அதுதான் ஓணம் பண்டிகை. ஒவ்வொரு ஆண்டும் ஓணம் பண்டிகை அன்று அவன் வெளியிலே வந்து, அரண்மனையிலேயிருந்து வெளியே வருவான், மக்களைப் பார்ப்பான் , அப்படி மன்னன் வருகிறான் என்பதற்கு அடையாளமாக கேரள மாதர்கள் எல்லாம் தங்களுடைய வீட்டு வாசல்களில் கோலங்கள் இட்டு, வாழை, கமுகு போன்ற மரங்களையெல்லாம் நட்டு, பூ வைத்து, மஞ்சள் தெளித்து வரவேற்பார்கள். இது கேரளத்து வரலாறு. ஆக மகாபலி வேறு, மாவலி வேறு. ஆனால் மாவலி என்று அழைக்கப்படுகிறவன் திராவிட மன்னன் . தமிழ் மன்னன். நல்லாட்சி நடத்தியவன் மக்களை நல்ல முறையிலே வாழ வைத்தவன். மக்களுக்கு நல்லாட்சி கொடுத்தவன். மக்களுக்கு அமைதியான வாழ்வைத் தந்தவன். அந்த அமைதியான வாழ்வைத் தந்து, மக்களை அவன் காப்பாற்றுகிறான் என்ற காரணத்தால் பொறாமை கொண்டவர்கள் அவனை வீழ்த்தினார்கள் என்பது தான் கதை. அந்த மாவலி கதையை எப்படியோ கொண்டு வந்து மகாபலி கதையோடு சேர்த்து இரண்டையும் ஒன்றாகப் போட்டு குழப்பி மாமல்லன் வேறு, மாவலி வேறு, மகாபலி சக்கரவர்த்தி வேறு என்று இல்லாமல் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி இதுதான் மகாபலி கதை என்று ஒரு பெரிய தகராறை இன்றைக்கு புராணிகர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

### மாமல்லன்

நான் உங்களுக்கு சொல்லுகின்றேன் உண்மையான சரித்திரத்தை. மாமல்லன் நரசிம்மவர்மனின் பெயர் தான் – புனைப்பெயர் தான் மாமல்லன். மகேந்திரவர்மன் இந்த பல்லவ பூமியை ஆண்டவன். அவனுடைய மகன் நரசிம்மவர்மன். மகேந்திரவர்மன் இந்த பல்லவ பூமியை ஆண்ட போதுதான் – தம்பி ஸ்டாலின் இங்கே சொன்னாரே சாளுக்கியர்களுடைய படை எடுப்பைப் பற்றி. சாளுக்கிய மன்னன் புலிகேசி காஞ்சிபுரத்தை

பிடிப்பதற்காக வந்து காஞ்சிபுரம் கோட்டையைச் சுற்றி வளைத்து, மகேந்திரவர்மன் தோல்வியுற்றான் என்கின்ற ஒரு பிரச்சாரத்தை செய்து காஞ்சிபுரத்தை வென்று விட்டோம் என்று சொன்னான், அந்த புலிகேசி சாளுக்கிய மன்னன். ஆனால், அதை பொய்யாக்கி மகேந்திரவர்மன் மீண்டும் புலிகேசி மீது படை எடுத்தான். புலிகேசி தோற்று ஓடினான். அப்படி தோற்று ஓடிய புலிகேசியை — மகேந்திரவர்மனுடைய மகன் நரசிம்மவர்மன் துரத்திச் சென்று அவனை தோற்கடித்து அவனுடைய தலைநகரம் வாதாபி வரை சென்று வாதாபியிலே அவனை வீழ்த்தி வெற்றிப் பேரிகை கொட்டினான். அப்படி வெற்றி பெற்று விட்டு வாதாபி நகரத்தை அவன் சுற்றி வந்த போது தான் அவனுடைய தளபதி பரஞ்ஜோதி என்பார் அங்கே ஒரு

என்றால் மாமல்லபுரத்திலே சிற்பியாக இருந்து திருவள்ளுவர் சிலை செய்தாரே அவர் நம் ஊர் 'கணபதி'. ஆனால் இந்த கணபதி வாதாபியில் இருந்து இங்கே வந்த கணபதி. எனவே நரசிம்மவர்மனுக்கு எப்படி மாமல்லன் பட்டம் வந்தது என்றால், அவன் மற்போரில் சிறந்தவன். அவனை மல்யுத்தத்தில் யாரும் தோற்கடிக்க முடியாது. பல யுத்தங்களில் ஈடுபட்டு நரசிம்மவர்மன் வெற்றிபெற்ற காரணத்தால், அவன் தந்தை அவையைக் கூட்டி அவையோர் சார்பில் — புலவர்கள் சார்பில் — அறிஞர்கள் சார்பில் — வீரர்கள் சார்பில் தன்னுடைய மகன் நரசிம்மவர்மனுக்கு சூட்டிய பட்டம் தான் மாமல்லன் ஆகும்.

அந்த மாமல்லன் என்ற வீரப் பெயர் தான் அவன் ஆண்ட இந்த பூமிக்கு மாமல்லபுரம் என்று வழங்குகிறதே



விசித்திரமான ஒரு சிலையை பார்த்தார். அந்த சிலைக்கு மனித முகம் இல்லை. யானை முகம். மனித கால், மனித கை, அந்த யானை முகத்திலே துதிக்கை. இதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. இந்த சிலையை நம்முடைய தமிழ்நாட்டில் கொண்டுபோய் வைத்தால் எல்லோரும் அதிசயமாக பார்ப்பார்கள் என்று அந்தச் சிலையை கொண்டு வந்து தமிழ்நாட்டிலே காஞ்சிபுர அரண்மனையிலே வைத்தார். அதைப் பார்த்து பல்லவ மன்னர்களெல்லாம் பரவசப்பட்டார்கள். இது புதிய சிலையாக இருக்கிறதே என்று ஆச்சர்யப்பட்டார்கள். அதுதான், வாதாபி கணபதி! இன்றைக்கும் இசை நிகழ்ச்சிக்குப் போனால் கணபதி ஸ்தோத்திரத்தை பாடுகிறார்களே 'வாதாபி கணபதி' என்று. இந்த கணபதி நம்மூர்க்காரார் அல்ல. இவர் வாதாபியிலே பிறந்தவர். வாதாபியிலே சிலையாக இருந்தவர். அந்தச் சிலையை இங்கே கொண்டுவந்தார்கள். நம்மூர் கணபதி யார்

அல்லாமல், மகாபலியும் இல்லை, புடலங்காயும் இல்லை, பெரியார் சொல்வதை போல எந்த வெங்காயமும் இல்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக இந்த சரித்திரம் எப்படியெல்லாம் நார் நாராக கிழிக்கப்பட்டு நம்முடைய நாகரிகம், பண்பாடு, வரலாறு உண்மைநிலை இவைகளையெல்லாம் ஒழிக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தான் இதை சொல்லுகின்றேன். அப்படிப்பட்ட மாமல்லபுரத்தை நான் தினந்தோறும் காணுகிற, வாரம் ஒருமுறை காணுகின்ற என்னுடைய நண்பர்கள் எம்.ஜி.சக்கரபாணி, எம்.ஜி.ராமச்சந்திரன் இவர்களோடு வந்து காணுகின்ற அந்த வாய்ப்பை "நாம்" என்கின்ற படக்கதை எழுதும்போது பெற்றிருந்தேன். அதுமுதல் மாமல்லபுரம் என்றால் எனக்கு ஒரு இன்பக்கனவு. இந்த

மாமல்லபுரத்தை வரலாற்றுப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக ஆக்கவேண்டும் என்று அன்றைக்கே கண்ட கனவு. அதை நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு தான் ஆக்க வேண்டும் என்ற நிலைமையிருந்திருக்கிறது.

## சுற்றுலா மையம்

இப்படிதான் பூம்புகார் கடற்கரை ஓரத்தில் இருந்து எத்தனையோ மாலைநேரங்களில் உட்கார்ந்து கதைகளை கேட்டிருக்கின்றோம். அப்போது கண்ட கனவுதான், இப்போது காவிரிப்பூம்பட்டினத்தை பூம்புகாராக பார்க்கிறோம். அதைப் போலதான் இந்த மாமல்லபுரத்தை சுற்றுலா மையமாகக் காணவேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிக்கொள்ளத்தான், நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். நான் இறுமாப்போடு சொல்வதாக யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. இன்றைக்கு சென்னையிலே இருந்து அழகான சாலை, வேகமாக வரக்கூடிய சாலை அமைந்திருக்கிறது என்றால் அந்த சாலையை அமைக்க காரணமாக இருந்தவன் நான். இரண்டு கட்டங்களாக முதலமைச்சராக இருந்த போது அந்த சாலையை இங்கே அமைத்தவனே இந்த கருணாநிதி தான் என்பதை மாமல்லபுரம் மக்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். அது மேலும் மேலும் பெருகி அந்த எண்ணம் வளர்ந்து அந்த கனவு நனவாகக் கூடிய காலம் இன்றைக்குக் கனிந்திருக்கின்றது. அந்த எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய வகையிலே இன்று மாலையிலே தம்பி ஸ்டாலின் மற்றும் நம்முடைய அரசு அதிகாரிகள் இவர்களெல்லாம் என்னை அழைத்துக்கொண்டு போய் எனக்குக் காட்டினார்களே, குன்னப்பட்டு என்ற அந்த ஊர். அந்த ஊரைப் பார்த்ததும் மெய் மறந்து போனேன். குன்னப்பட்டு ஏதோ குக்கிராமமாக இருக்கும் என்று கருதித் தான் அங்கே சென்றேன். இந்த வட்டாரத்து மக்களெல்லாம் ஏறத்தாழ 90 சதவிகிதம் பார்த்தால் குக்கிராம் மக்களாகவே இருப்பார்கள். நம்முடைய மூர்த்தியைப் பார்த்தால் கிராமத்தான் என்று தான் சொல்கின்றோம். அவரை பட்டணவாசி என்று யாரும் சொல்ல முடியாது. அதைப்போல, மூர்த்தியைப் போல நம்முடைய ஆறுமுகத்தைப் போல, இந்த வட்டாரத்திலே வாழுகின்ற மக்கள் கிராமத்து மக்கள். இங்கு வாழ்ந்து பல ஆண்டு காலமாக இங்கே அவர்கள் வசித்து அவர்களுடைய பழக்க வழக்கம் நாகரிகங்கள் இவைகளெல்லாம் தோய்ந்திருக்கின்ற இந்தப் பகுதி. இன்று மாலையிலே தம்பி ஸ்டாலின் என்னை அழைத்துக் கொண்டு போய் காட்டியபொழுது நம்முடைய அதிகாரிகளெல்லாம் – உள்ளாட்சித் துறையைச் சார்ந்த அதிகாரிகளெல்லாம் அங்கே வந்து அவைகளையெல்லாம் எடுத்துக்காட்டியபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அதனுடைய பெருமைகளையெல்லாம் எடுத்துப் பேசிய போது இந்த குன்னப்பட்டு எந்தளவுக்கு முன்னேறியிருக்கின்றது என்பதை நான் பார்த்து வியந்து போனேன்.

## மாதிரி கிராமம் – குன்னப்பட்டு

ஒரு குளத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். அழகான குளம். அதைப்போல, இறந்து போனவர்களுடைய உடலை எரிப்பதற்கு ஒரு அருமையான இடத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அது பார்ப்பதற்கு வியப்பாக இருக்கிறது. ஒரு கிராமத்திலே இப்படிப்பட்ட சுடுகாடா? மயானமா? என்று மலைத்துப்போகின்ற அளவிற்கு உருவாக்கியிருக்கின்றார்கள். அது மாத்திரமல்ல, ஒரு நூல் நிலையம் இருக்கிறது. அது மாத்திரமல்ல, அங்கே மருத்துவமனை இருக்கிறது. அதுமாத்திரமல்ல, மக்கள் தொடர்பு கொள்ளக் கூடிய அளவிற்கு அங்கே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பணியாற்றக்கூடிய இடங்களெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு சாலைகள் உருவாகி இருக்கின்றன. தண்ணீர் தேங்கியிருக்கின்ற குளம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதைப்பார்த்த பொழுது குன்னப்பட்டு ஒரு மாதிரி கிராமமாக தமிழகத்திலே இனி உருவாகக் கூடிய கிராமங்களெல்லாம் குன்னப்பட்டு போல உருவாகுமேயானால் அது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாக இருக்கும் என்று நான் எண்ணிக்கொண்டேன். அதைப்பார்த்ததும் எனக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. அது சுயநலமாகக் கூட இருக்கலாம். நான் பிறந்த ஊர் திருக்குவளை இப்படி ஆக வேண்டாமா? குன்னப்பட்டுப்போல என்று எண்ணிக் கொண்டேன். அதை ஆக்க வேண்டும். ஆக்குவார்கள், என்னுடைய நண்பர்கள். நம்முடைய அமைச்சர்கள், நம்முடைய அதிகாரிகள் என்ற அந்த நம்பிக்கையோடுதான் நான் கார் ஏறினேன், இங்கு வந்தேன். இங்கும் இப்பொழுது எதிர்பார்க்கின்றேன். இப்படிப்பட்ட கிராமங்கள், கிராமங்கள் இல்லாவிட்டால் நம்முடைய அம்மையார் யசோதா சொல்லியதைப் போல, காந்தியடிகள் சொன்னார்கள். கிராமங்கள்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான முதுகெலும்புகள் என்று. அந்த முதுகெலும்பை வளர்க்க வேண்டும், அந்த கிராமங்கள் இன்னும் நாகரிகம் பெற வேண்டும், பட்டணங்களில் உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்குத் தர வேண்டும். அப்பொழுது தான் நாம் இந்தியாவை கட்டிக்காக்க முடியும். இந்தியாவினுடைய ஒற்றுமையைக் கட்டிக்காக்க முடியும். இந்தியாவினுடைய பொருளாதாரத்தை சமத்துவமாக ஆக்க முடியும். இந்தியாவிலே ஏழ்மையைப் போக்க முடியும். இந்தியாவிலே எங்கு சென்றாலும் இந்தியன், இந்தியன் என்று சொல்லக்கூடிய அந்த உணர்வை வளர்க்க முடியும். அப்படிப்பட்ட இந்தியாவை காண கிராமங்கள் முன்னேற வேண்டும். அந்த முன்னேற்றத்திலேதான் நான் சொன்ன உண்மைகள் முகிழ்க்கும் என்று கூறி, அதற்கான முதல் முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழகத் தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சகத்துக்கு என்னுடைய பாராட்டுக்களை, நன்றிகளை தெரிவித்து விடைபெறுகிறேன். ✶



# என்னை தந்தை பெரியார் பழக்கியது பேரறிஞர் அண்ணா பயிற்றுவித்தது உங்களுக்கு உழைப்பதற்காகத்தான்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை**

கடலூரில் நடைபெறுவது ஒரு அரசாங்க விழாவா அல்லது ஒரு பெரிய மாநாடா மாநாடாக இருந்தாலும்; ஒரு வேளை மாவட்ட மாநாடா ? மாநில மாநாடா என்று ஐயுறத்தக்க வகையில் பல்லாயிரக்கணக்கிலே இந்த பந்தலிலே குழுமி இருக்கிறீர்கள் என்பது மாத்திரமல்லாமல்; பந்தலிலே இடமில்லாமல் பந்தலுக்கு வெளியேயும் நீங்கள் காத்திருந்து கருத்துக்களை கேட்க உங்களுடைய ஆவலை காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு முன்னால் இங்கு பேசிய நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்களும், அதிகாரிகளும் நடைபெறுகின்ற இந்த ஆட்சியின் மாட்சியை எடுத்து இயம்பி இருக்கிறார்கள். அப்படிச் சொல்லாவிட்டால் நாளைக்கு யாரோ ஒருவர் நேற்றைய தினம் கருணாநிதியும் மற்றவர்களும் வந்து ஒரு மாபெரும் பந்தலிலே மகத்தான விழாவை நடத்தி மக்களுக்கு இவ்வளவு சாதனைகளை புரிந்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு போனார்களே – அதெல்லாம் வெறும் வாய்வீச்சு என்று உங்களிடத்திலே சொல்லமுடியும். ஆனால் இது வாய்வீச்சு அல்ல – செயல்தான் என்பதை உங்களுடைய வீட்டிலே இருக்கின்ற – தொலைக்காட்சிப் பெட்டி – உங்கள் வீட்டிற்கு வருகின்ற இலவச எரிவாயு அடுப்பு – நீங்கள் தீர்த்த ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன் இவைகளெல்லாம் எடுத்துச் சொல்ல காத்திருக்கின்றன.

இந்தக் காரியங்களை ஏறத்தாழ ஓராண்டு காலத்தில் இந்த அரசு உங்கள் அத்தனை பேருடைய உதவியோடும், ஆதரவோடும் இந்த மேடையிலே



வீற்றிருக்கும் தோழமைக் கட்சிகளுடைய நட்புணர்வோடும் செய்து முடித்திருக்கிறது என்பதை நான் நன்றி உணர்வோடு இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கு பேசிய நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள், நண்பர்கள், என்னுடைய தம்பிமார்கள், அவர்களுடைய தொகுதிகளுக்கு இந்த அரசின் சார்பிலே செய்யப்பட்ட காரியங்களை – அரிய சாதனைகளை எடுத்துச் சொல்லிவிட்டு, அதற்கு நன்றி கூறியதோடு நிறுத்தாமல், மேலும் காரியங்களைச் செய்துகொடு என்று சில கோரிக்கைகளை இங்கே வைத்துவிட்டுத்தான் அமர்ந்திருக்கிறார்கள். "நான் எழும் போது எல்லாம் சட்டமன்றத்தில் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார் முதலமைச்சர் கலைஞர்" என்று இங்கே கூறிய வேல்முருகன் கூட இங்கேயும் கோரிக்கை வைக்காவிட்டால் அவருடைய பேச்சு நிறைவுபெறாது என்று எண்ணி, இங்கேயும் ஒரு கோரிக்கையை வைத்தார். நல்லவேளை – அவர் கோரிக்கை வைத்த போது அதுபற்றி கலந்து பேசி அறிவிக்க என் பக்கத்திலே உயர்கல்வித் துறை அமைச்சர் தம்பி பொன்முடி இருந்த காரணத்தால் நான் அந்தக் கோரிக்கை என்னாயிற்று என்று அவர் எதிர்பார்ப்பதற்கு முன்பு – நீங்களும் அதைப் பற்றி சிந்திப்பதற்கு முன்பு அதைப் பற்றி சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

**புதிய பொறியியல் கல்லூரிகள்**

இன்று காலையிலே தான் நான் சென்னையில் இருந்து புறப்பட்டு இங்கே வருகின்ற வழியில் வேறு எதுவும் நாங்கள் பேசவில்லை. இரண்டு அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவது என்றால் அவர்கள் சேமலாபங்களை பற்றிப் பேசி உங்களுடைய கடை எப்படி நடக்கிறது, வியாபாரம் எப்படி நடக்கின்றது என்று பேசுவதில்லை. அது எங்களுக்கு அவசியம் அல்ல; இன்னும் என்ன செய்யலாம் இந்த சமுதாயத்திற்கு, இந்த மாநிலத்திற்கு என்று அந்தக் கேள்விக்கு விடையளிக்கத்தான் எங்களுடைய பேச்சு அமையும். அப்படி அமைந்த பேச்சில் பொன்முடி காலையிலே வரும் பொழுது என்னிடம் சொன்னார்.

நாம் ஏற்கெனவே தமிழகத்திலே கலைக் கல்லூரிகள் சிலவற்றை புதிதாக அமைப்பது என்று முடிவு செய்திருக்கின்றோமே; அதைப்போல தமிழ்நாட்டில் வருகிற ஆண்டு – 25 பொறியியல் கல்லூரிகளை அமைத்தால் என்ன அண்ணா என்று என்னிடத்திலே கேட்டார். நல்ல யோசனை; நிச்சயமாக அதைச் செய்யலாம்–எந்தெந்தப் பகுதிகளிலே எந்தெந்த ஊர்களிலே அந்தப் பொறியியல் கல்லூரிகளை அமைக்கலாம் என்பதைப் பற்றி யோசிப்போம் என்று சொன்னேன்.

பிறகு என் பேச்சு நின்றது–மேடைக்கு வந்தோம், வேல்முருகனுடைய பேச்சைக் கேட்டோம், அப்போது

நான் சொன்னேன் பொன்முடி இடத்திலே; இதோ ஒரு கோரிக்கை வந்திருக்கிறது, இந்த கோரிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு பொறியியல் கல்லூரி ஒன்றை பண்ருட்டியிலே அமைத்து விடலாமே என்று பொன்முடியிடத்திலே கேட்டேன். அவர் நல்ல யோசனை, பண்ருட்டி மாத்திரம் அல்ல, மூன்று பொறியியல் கல்லூரிகளை இந்த வட்டாரத்தில் திண்டிவனத்திலே ஒன்று, விழுப்புரத்திலே ஒன்று, எடுத்துக்காட்டியதைப்போல தி.மு.கழக ஆட்சி தொடர்ந்து மீண்டும் உங்களால் உருவாக்கப்பட்டு, அப்படி உருவான காரணத்தால் உங்களுடைய அன்பான ஆதரவோடு தோழமைக் கட்சியினுடைய துணையோடு உங்களை வழிநடத்திச் செல்கின்ற அரசுக்குத் தலைவனாக நான் ஆக்கப் பட்டிருக்கிறேன். அப்படி அரசுக்குத் தலைவனாக இருக்கின்ற நான்—அந்த அரசின் சார்பில்



பண்ருட்டியில் ஒன்று என்று மூன்று ஊர்களை ரொம்ப கஷ்டப்பட்டு சொன்னார். அதிலே விழுப்புரம் பெயரை சொல்லும் போதுதான் கொஞ்சம் இழுத்துச் சொன்னார். ஏனென்றால் அந்த பெயரைச் சொல்லாவிட்டால் இவர் பெயர் நிலைக்குமோ, நிலைக்காதோ என்ற சந்தேகம் அவருக்கு; அந்த இரண்டு பெயரைச் சொல்லி விழுப்புரத்தை நிலைக்க வைத்துவிட்டார்.

ஆக இந்த வட்டாரத்தில் உள்ள மக்களுக்கு விழுப்புரம். பண்ருட்டி, திண்டிவனம் ஆகிய இந்த மூன்று இடங்களில் அடுத்த ஆண்டில் நிச்சயமாக பொறியியல் கல்லூரிகள் அமைக்கப்படும் என்பதை இங்கே எதிர்பாராத நிலையில் அல்ல, இங்கே கோரிக்கை வைத்த நம்முடைய தம்பி வேல்முருகன் அவர்களுக்கு நான் உறுதி அளிக்க விரும்புகிறேன்.

**உங்களுடைய வேலைகளைச் செய்கின்றேன்**

தமிழ்நாட்டில் கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக நீங்கள் எல்லாம் இங்கே உங்களுக்காகச் செய்கின்ற பணிகளெல்லாம் உங்களுக்கு எடுத்துப்போடுகின்ற நன்கொடைகள் அல்ல. வழங்குகின்ற பரிசுகள் அல்ல. உங்களால் நியமிக்கப்பட்ட நான் உங்களுடைய வேலைகளை ஒழுங்காகச் செய்கின்றேன். அப்படி செய்கின்ற போதுதான் நிறைவேறிய கோரிக்கைகள் இவை என்பதை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் தி.மு.கழக ஆட்சியில் என்னென்ன சாதனைகள் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை இங்கே நம்முடைய இந்த விழாவினுடைய தலைவரும், எங்கள் கட்சியினுடைய இந்த மாவட்டத்தின் செயலாளரும், அமைச்சருமான தம்பி பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார், அவரே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார். இந்த ஓராண்டு கால அரசாங்கத்தினுடைய சாதனைகளை எடுத்துச் சொல்ல ஒரு விழாவினை நடத்துகிறோம் என்றால் அந்த விழா நடத்துவதற்கு நான் கடந்த வாரம் தான் தேதி கொடுத்தேன். இந்த ஒரு வார காலத்தில்

இவ்வளவு பெரிய மாநாட்டை பன்னீர்செல்வம் இங்கே கூட்டியிருக்கிறார் என்றால், அவர் தனிப்பட்ட முறையிலே கூட்டியது அல்ல என்றாலும் அரசின் துணையோடு, அரசின் உதவியோடு, அருமைத் தோழர்களுடைய உதவியோடு, இந்த வட்டாரத்தில் உள்ள நண்பர்கள் உதவியோடு, அவர் இதைச் செய்திருக்கிறார் என்றாலும் கூட அதிலே அடங்கி இருக்கின்ற, உள்ளீடாக இருக்கின்ற உணர்வை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஓராண்டு காலத்தில் ஒரு ஆட்சியில் அளப்பரிய சாதனைகள்! ஒன்றா இரண்டா? வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் அரிசி விலை இன்றைக்கு என்ன என்ற அந்த கேள்விக்கு கிடைக்கின்ற பதிலே போதும்–கிலோ அரிசி 2 ரூபாய்க்கு தருகின்ற ஒரு ஆட்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் தி.மு.கழக ஆட்சியைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது நீங்கள் காண முடியுமா?–முடியாது. ஆனால் என்ன பேசப்படுகிறது சிலரால்? ஓராண்டு ஆகின்றது இந்த ஆட்சி வந்து, எங்களுக்கு என்ன செய்து விட்டது இந்த ஆட்சி? என்று இன்றைக்குப் பேசப்படுகிறது.

அப்படிப் பேசுகின்ற நேரத்தில் நான் சிரிக்கத்தான் செய்கிறேன். ஏளனமாக இல்லை, வருத்தமாக– என்ன செய்வது நான் எவ்வளவுதான் கஷ்டப் பட்டாலும் இந்த மக்களுக்காக பணியாற்றினாலும் பாடுபட்டாலும், நம்முடைய தொண்டுக்குக் கிடைக்கின்ற பரிசு இதுதானா? இது என்ன பெரிய காரியங்கள்? என்று பேசுகிறார்களே, அதுதான் நமக்குக் கிடைத்த பரிசு என்று நான் அதற்காக வேதனைப்படுவதுமில்லை, வருத்தப்படுவதுமில்லை –யாரிடமும் கோபப் படுவதுமில்லை– இதையாவது சொன்னார்களே என்று நான் நிம்மதி அடைகிறேன்; அமைதி அடைகிறேன். இன்னும் சொல்லப்போனால் இதைவிட இன்னும் அதிகமாக மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றால் அது மக்களுடைய தேவையைத்தான், மக்களுடைய நிலைமையைத் தான் உணர்த்துகிறதே அல்லாமல் வேறல்ல.

## நீயும் மனிதன்தான்; மண்ணன்று

இந்த நாட்டு மக்கள் ஆண்டாண்டு காலம் அடிமைப்பட்டிருந்தவர்கள்; ஒரு காலத்திலே மன்னர்களுக்கு, மகாராஜாக்களுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தார்கள். முடியாட்சிலே–அதற்குப் பிறகு வந்த ஆட்சிகளில் ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அதற்குப் பிறகு சாம்ராஜ்யங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அதற்குப் பிறகு அயல்நாட்டுக்காரர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அண்ணல் காந்தியடிகளுடைய அகிம்சா போராட்டத்திற்குப்பிறகு இந்தியாவிலே பல வீரர்கள் மாண்டு மடிந்து ரத்த வெள்ளத்திலே உருவாயிற்றே சுதந்திரச் செடி–அந்த சுதந்திரச் செடி பூத்துக் காய்த்து அதனுடைய பயனை அனுபவிக்கின்றவர்கள் ஏழை, எளியவர்கள் அல்ல, அடிமைப்பட்ட மக்கள் அல்ல. அன்றைக்கு ஓரத்திலே ஒதுக்கி விடப்பட்ட மக்கள் அல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் அல்ல, தொடாதே–தீட்டு தூர விலகிப் போ என்று துரத்தப்பட்ட அந்த மக்கள் அல்ல. அவர்கள் நெருங்கி வந்துவிடவில்லை.

அவர்களை நெருங்கி வரச் செய்ய–அவர்களை உயர்த்தி உட்கார வைக்க–நீயும் "மனிதன்தான்; மண்ணன்று–புழு அன்று–பூச்சி அன்று–நீயும் உயிரினம்தான்" என்று உணர்வூட்டி அவர்களை உட்கார வைக்கவேண்டிய இடத்திலே உட்கார வைத்து அதற்காக என்ன விலை கொடுக்க வேண்டுமோ, எத்தனை உயிரைக் கொடுக்க வேண்டுமோ அத்தனை உயிரையும் கொடுக்கக் தயாராக இருக்கின்ற ஒரு இயக்கம்–அந்த இயக்கத்தினுடைய தலைவன்–தந்தை பெரியாரால் வழி நடத்தப்பட்ட, அறிஞர் அண்ணா அவர்களால் வழிநடத்தப்படுகின்ற நாங்கள், இன்றைக்குத் தருகின்ற உழைப்புதான் அதற்குத் தருகின்ற விலைதான்–நாங்கள் தருகின்ற இந்த இழிவுப் பிரச்சாரத்தைத் தாங்கிக் கொள்கின்ற மனப் பக்குவம்தான்; இன்றைய தினம் இவ்வளவு செய்கிறோம்–இதை மக்கள் சிந்திக்கிறார்களா இல்லையா என்று கூட நாங்கள் கவலைப்படவில்லை. இதற்காக மக்கள் நன்றி காட்டப்போகிறார்களா இல்லையா? அதைப்பற்றியும் நாங்கள் கவலைப்படப் போவதில்லை.

## நன்றியை எதிர்பார்த்து எந்தக் காரியங்களையும் செய்யவில்லை

ஒருமுறை நான் சொன்னேன். தஞ்சை மாவட்டத்தில் ஒரு விழாவிலே பேசும்போது சொன்னேன். எனக்கு முன்னால் பேசிய தம்பி எல்.கணேசன் சொன்னார்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருகின்றீர்கள்; நீங்கள் கட்டித் தருகின்ற வீடுகளைப் பார்த்து அகில இந்தியரீதியிலே இந்திரா காந்தி பெயரால் வீடுகளை கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், நீங்கள் கட்டுகின்ற வீடுகளில், தமிழ்நாட்டில் பார்க்கிறோம், அந்த வீட்டுச் சுவர்களில் கருணாநிதி ஒழிக என்று

அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்களாக ஆனவர்களே எழுதி வைத்திருக்கிறார்கள் பார்த்தீர்களா; இவர்களுக்குப் போய் ஏன் செய்கின்றீர்கள் என்று எல்.கணேசன் பேசினார். அவர் பேசிய பிறகு நான் பேச எழுந்தேன். அப்போது சொன்னேன் "தம்பி கணேசன் இப்படி வருத்தத்தோடு சொன்னார்–நான் கட்டித் தருகின்ற இலவச வீடுகளில் "கருணாநிதி ஒழிக" என்று எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னார், நான் அதற்காக கவலைப் படவில்லை; அப்படி எழுதும் போதும் என் பெயரை மறந்துவிடாமல் எழுதியிருக்கிறார்களே என்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொன்னேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இதையும் சொல்லிவிட்டு இன்னும் ஒன்றையும் சொன்னேன். இன்றைக்கு நான் இந்தக் காரியங்களைச் செய்யும்போது நன்மைகளைச் செய்யும்போது அதைப்பற்றி யாரும் கவலைப்படாமல் இருந்தால் அதைப்பற்றி யாரும் சிந்திக்காமல் இருந்தால் இது எப்படி வந்தது; ஏன் வந்தது; யாருடைய உழைப்பால் வந்தது, யார் நடத்திய போராட்டத்தால் வந்தது என்பதைப்பற்றியெல்லாம் அடிபட்டுக் கிடந்த மக்கள் சிந்திக்காமல் இருந்தால்; நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்–ஒரு வகையில் விவசாயி உழைக்கின்ற நேரத்தில் அவனுக்குத் தேவையான நேரத்தில் மழை வந்தால், அந்த மழைக்கு அவன் செலுத்துகின்ற நன்றியே அலாதி. ஆனால், அவன் விரும்புகிற நேரத்திலே மழை வராமல் எப்போதோ வந்தால் அதைப்பற்றி அவன் கவலைப்படமாட்டான்.

அதைப்போலத்தான் இன்றைக்கு இந்த மக்கள் இந்த வீடுகளையெல்லாம் கட்டித் தருகின்ற நேரத்தில், இந்த அரசின் சார்பிலே தி.மு.க ஆட்சியின் சார்பிலே கட்டித்தருகின்ற நேரத்தில், நீங்கள் என்னை வாழ்த்தினாலும், வாழ்த்தா விட்டாலும்; நீங்கள் வாழ்த்துகின்ற நேரத்தில் அந்த வாழ்த்தைக்கேட்க யார் இருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள்; மழை உரிய நேரத்தில் வரும்போது விவசாயி மகிழ்ச்சி அடைவான். வானத்தை அண்ணாந்து பார்த்து வானத்தை வாழ்த்துவான். அந்த மேகங்கள் மழையைத் தந்ததற்கு நன்றி கூற நினைப்பான். ஆனால் அவன் நன்றி கூறுகின்ற நேரத்தில் அந்த மேகங்கள் இருக்காது. அவைகளெல்லாம் மழையாகப் பொழிந்து கலைந்துபோய் இருக்கும். அதைப்போல எனக்கு தமிழ்நாட்டு மக்கள், ஏழை எளிய மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், அடிமைப்பட்டுக் கிடக்கின்ற மக்கள் நன்றி கூற வரும்போது அந்த மேகங்கள் இல்லாததைப் போல, நான் ஒரு வேளை இல்லாமல் போயிருக்கலாம்–ஆனால் நான் அதற்காகக் கவலைப்படவில்லை. நன்றி–கூறுகின்ற இயல்பு அவர்களுக்கு இருக்கின்றது. மனிதனுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள தமிழனுக்கு இருக்கிறது என்ற அந்த உணர்வு வெளிப் பட்டால் போதும் என்றுதான் அன்றைக்கு சொன்னேன். ஆகவே நன்றியை எதிர்பார்த்து எந்த காரியங்களையும் செய்யவில்லை. நம்முடைய கடமையை நான் செய்கிறேன்.

இந்த நாளில் இந்த விழாவில் தலைமைச் செயலாளர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல **330–400** கோடி ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்றால் இவைகளையெல்லாம் இந்த அரசினுடைய தலைமைப் பொறுப்பிலே இருக்கின்ற நான் மக்களிடத்தில் நன்றியை எதிர்பார்த்து வழங்குகின்றேன் என்று பொருள் அல்ல.

நீங்கள் என்னை இங்கே உட்கார வைத்தீர்கள்; மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை; உட்காரவைத்த மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நான் செய்கின்றேன். அந்தக் கடமையைச் செய்யாவிட்டால் நீங்கள் என்னை தண்டிக்கக் கடமைப்பட்டவர்கள்; அதை நான் மறந்து விடவில்லை. அந்த உணர்வோடுதான் நான் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் உழைக்க வேண்டும், பாடுபட வேண்டும், பணியாற்ற வேண்டும் என்ற ஆசை இருக்கிறது.

### 20 சதவிகித இடஒதுக்கீடு

இங்கே பேசிய சில பேர்கள் சொன்னார்கள். "நிரந்தர முதல்வர்" என்று வாழ்த்தினர். எதுவும் நிரந்தரம் அல்ல. யாரும் நிரந்தரம் அல்ல–நிரந்தரம் அல்ல என்பது தான் நிரந்தரம். இதைத்தான் காரல்மார்க்ஸ் அழகாகச் சொன்னார் "மாற்றம் என்பதுதான் மாற்றம் இல்லாதது" என்று. அதைப்போல யாரும் நிரந்தரம் அல்ல. ஒருவர் போகும் போது வைத்துவிட்டுப் போகின்ற புகழ் இருக்கிறதே; நன்றி இருக்கிறதே; வைத்து விட்டுப் போகின்ற சாதனை இருக்கிறதே; மக்களை வாழ வைப்பதற்காக பட்ட பாடு இருக்கிறதே; அதை நீங்கள் பசுமையாக நினைத்துக் கொண்டிருப் பீர்களானால்; அதை விட வேறு கடவுள் இல்லை.

என்னை தந்தை பெரியார் பழக்கியது; பேரறிஞர் அண்ணா பயிற்றுவித்தது, உங்களுக்காக– உழைப்பதற்காகத் தான்; உங்களிடத்திலே லாபம் பெறுவதற்காக அல்ல; உங்களைப் பயன்படுத்தி பெயர் பெறுவதற்காக அல்ல; நான் பிறக்கும்போதே மாபெரும் கலைஞன், மக்கள் புகழ் பெற்ற கலைஞன், மக்கள் புகழ்கின்ற ஒருவன் என்று அடையாளம் இட்டுக்கொண்டு பிறந்தவன் அல்ல. நான் பிறக்கும்போது முதலமைச்சர் என்று முகத்தில் விலாசம் போட்டுக் கொண்டுபிறந்தவன் அல்ல. நான் பிறக்கும்போது சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லிக்கொண்டு பிறந்தவன் அல்ல. நான் பிறக்கும்போது சாதாரண குடும்பத்தில் தஞ்சை மாவட்டத்தில் எங்கேயோ ஒரு குக்கிராமத்திலே; திருக்குவளை என்ற கிராமத்திலே பிறந்த ஒரு சாதாரண சாமான்ய குடும்பத்திலே பிறந்தவன் நான். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தவன், இன்னும் சொல்லப்போனால் மிகவும் பிற்படுத்தப்பட்ட, மிக மிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தவன்–அப்படிப் பிறந்த காரணத்தினாலேதான் இந்த வட்டாரத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை கைதூக்கி விட வேண்டும் என்று போராடியபோது பல முதலமைச்சர்கள் செய்யாத காரியத்தை; அந்தக் கோரிக்கையை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிதம் என்கின்ற அந்த இடஒதுக்கீட்டை நிலைநாட்டிக் கொடுத்துவிட்டு இன்றளவும் அதற்காகப் போராடுகின்ற வல்லமையை நானும் பெற்றுநீங்களும் பெறக்கூடிய அந்த நிலைமை உருவாக்கியவன்தான் நான். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த காரணத்தால்தான் நான் என்னை உணர்கின்றேன், என்னுடைய சமுதாயத்தை உணர்கிறேன்; என்னுடைய சமுதாயத்தை உணர்கின்ற காரணத்தால் எனக்கு அடுத்து இருக்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயங்கள், தீண்டத்தகாதவர்கள் என்றெல்லாம் ஒதுக்கப்பட்ட சமுதாயம், தலித் என்று சொல்லப்படுகின்ற சமுதாயம்; இந்தச் சமுதாயத்திலே இருக்கின்றவர்கள் எல்லாம் இன்றைய தினம் இங்கே வந்து பேசினார்கள் என்றால் செல்வப் பெருந்தகையும், இரவிக்குமாரும், இங்கே வந்து பேசினார்கள் என்றால் அவர்களுடைய பேச்சினைக் கேட்கும்போது நான் எண்ணிக் கொண்டேன். இவர்கள் இன்றைக்கு நம்மோடு வந்து அமர்ந்திருக்கிறார்கள்; அதிலே எனக்குப் பெருமை. அவர்களுக்குப் பெருமை அல்ல; எனக்குப் பெருமை. இங்கே வந்து பேசினார்கள்; கரகோஷம் செய்து வரவேற்றீர்கள்–அதில் பெருமை அவர்களுக்கு அல்ல; நமக்குப் பெருமை. அவர்கள் நம்மோடு இருப்பது நமக்குப் பெருமை. நாமெல்லாம் ஒன்று என்கின்ற ஒரு சமுதாய உணர்வை, சமத்துவ உணர்வை தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், அறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று, இவர்கள் வழிநின்று இன்றைக்குக் கட்டிக்காத்தோம். அத்தகைய மக்கள் சமுதாயத்தை இன்றைக்கு உருவாக்கி இருக்கின்றோம்; அவர்களுடைய கௌரவம் மாத்திரம்; அவர்களுடைய உழைப்பு மாத்திரம்; அவர்களுடைய சுயமரியாதை மாத்திரம் முக்கியமல்ல; அவர்களுக்கு வயிறு என்று ஒன்று உள்ளது; வாழ்வு என்று ஒன்று உள்ளது; அவர்களின் வயிறும் குளிரவேண்டும் என்பதை நம்முடைய கடமைகளில் ஒன்றாகக் கருதவேண்டும்.

அதற்குத்தான் இந்த ஆட்சி காப்பாற்றப்பட வேண்டும். மரியாதையைக் காப்பாற்ற– சுயமரியாதையைக் காப்பாற்ற–அவர்களின் வாழ்வைக் காப்பாற்ற–அவர்களை சமுதாயத் துறையிலும், ஆட்சித்துறையிலும், சாதாரண சாமானிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுடைய இந்த ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆட்சியைக் காப்பாற்றுவதும் காப்பாற்றாமல் விடுவதும்; பாதுகாப்பதும் பாதுகாக்காமல் பாராமுகமாக இருப்பதும் உங்கள் இஷ்டம் என்று கூறி விடைபெறுகிறேன்.

கடலூரில் 30.8.2007 அன்று நடைபெற்ற இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு இணைப்புடன் அடுப்புகள் வழங்கிய விழாவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரை.



# தமிழ் வாழும் மற்றவர்களையும் வாழ வைக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் உரை

சென்னை கலைவாணர் அரங்கில் 1.9.2007 அன்று தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் நடைபெற்ற விழாவில் கலைத்துறையில் செயற்கரிய செயல்புரிந்த கலைஞர்களுக்கு 2006 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் வழங்கினார். இவ் விழாவில், பொற்பதக்கங்களை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இன்று ஏறத்தாழ கலைமாமணி விருதுகள் 70 பேருக்கு வழங்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். இத்தனை பேருக்கு இந்த அவையில் நானும் ஆளுநர் அவர்களும் வழங்கியுள்ள இந்த விருதும், பரிசளிப்பும், பாராட்டுப் பத்திரமும் அவர்கள் இதுவரையிலே ஆற்றியிருக்கின்ற தொண்டுக்காக, அவர்கள் தமிழகத்திலே தங்களுடைய திறமையின் மூலமாக, எடுத்துக்காட்டிய கலைக்காக, இசைக்காக, காவியத்திற்காக என்று எடுத்துக் கொண்டாலுங்கூட, இவர்களைப் பார்த்து இந்த விழாவிலே அவர்கள் விருது பெறுவதைப் பார்த்து அடுத்த அடுத்த விழாக்களில் நாமும் இத்தகைய சிறப்பைப் பெற வேண்டுமென்கிற எண்ணம், வருங்காலக் கலைஞர்களுக்கெல்லாம் ஏற்பட வேண்டுமென்பதற்காகத் தான், இந்த விழா ஆண்டுதோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## இயல், இசை, கூத்து

இந்த ஆண்டு ''சின்னத்திரை'' கலைஞர்களும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட காலமாக ஒரு ஆதங்கம் இருந்தது. என்னிடத்திலே அந்த



நீண்டகாலமாக நம்முடைய கோரிக்கையாக இருந்த "தமிழ்நாடு" என்கிற பெயரை அண்ணா அவர்கள் சட்டப் பேரவையிலேயே எடுத்துச் சொல்லி, அதற்காக காங்கிரஸ் க்ட்சியின் தியாகி, சங்கரலிங்க நாடார் அறுபது நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து, இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வேண்டும் என்று கேட்ட அந்தக் கோரிக்கையை – அண்ணா அவர்கள் நிறைவேற்றினார்கள். நிறைவேற்றியது மாத்திரமல்ல, நான் உங்களுக்குச் சொல்கிறேன், காங்கிரசார், கம்யூனிஸ்ட்டுகள் என்று எல்லா கட்சிகளும் – கட்சி வித்தியாசம் இல்லாமல், சட்டப்பேரவையிலே தமிழர்கள் என்கிற ஒரே நிலையிலே அமர்ந்திருந்தபோது, அண்ணா அவர்கள் எழுந்து நின்று, நான் "தமிழ்நாடு" என்று பெயர் வைத்திருக்கிறேன், நான் செய்த சாதனைகளில் எதை மாற்றினாலும், இந்தச் சாதனையை யாராலும் மாற்ற முடியாது, அவர்களை காலம் தண்டிக்கும், தமிழ்நாட்டு மக்கள் அவர்களை விடமாட்டார்கள் 'என்று அன்றைக்குச் சொல்லி, அண்ணா அவர்கள் தான் முதலமைச்சர் என்பதை மறந்து, அந்த அவையிலேயே சொன்னார்கள், நான் மூன்று முறை "தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு" என்று சொல்வேன் . ஒவ்வொரு முறையும் நீங்கள் "வாழ்க, வாழ்க" என்று சொல்ல வேண்டுமென்று கூறிவிட்டு, அண்ணா அவர்கள்

ஆதங்கத்தை அவர்கள் வெளிப்படுத்திய போது, அதை நிறைவு செய்கின்ற இடத்தில் அப்போது நானில்லை. நான் வருவேன் என்று காத்திருந்தார்கள், வந்தவுடனே அதனை வெளியிட்டார்கள், நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், மன்னிக்க வேண்டும், கேட்டுக் கொண்டார்கள் என்பதை விட அன்புக் கட்டளையிட்டார்கள். அதனை இன்றைக்கு நிறைவேற்றிய பெரும் மகிழ்ச்சியும், பூரிப்பும் எனக்கு இருக்கின்றது. இந்த மன்றத்திற்கு எனக்கு முன்னால் பேசிய நம்முடைய ராமநாராயணன் குறிப்பிட்டதைப் போல "சங்கீத நாடக சபா" என்று தான் தொடக்கத்திலே பெயர் இருந்தது. நாம் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தமிழர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனால் தமிழ்நாட்டில் இயல், இசை, கூத்து என்று நம்முடைய தனித் தமிழில் அந்தச் சொற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஏதோ அந்தச் சொற்களில் தெய்வீகம் இல்லை, அதிலே கடவுள் கருணை இல்லை, அதிலே பக்தி ரசம் இல்லை, அது தமிழாக இருக்கிற காரணத்தால் வடமொழியாக இல்லாத காரணத்தால், அதிலே இருக்க வேண்டிய அருள் இல்லை என்ற ஒரு அபவாதம் நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு, அதற்கேற்ப சங்கீத நாடக சபா என்றே இதனை அழைத்து வந்தோம்.

## தமிழ்நாடு பெயர் சூட்டல்

தி.மு.கழக ஆட்சி தொடங்கிய பிறகு அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே





பரிதி என்பது சூரியனைக் குறிக்கும், மால் என்பது நாராயணனைக் குறிக்கும், நாராயணன் என்றால் மகாவிஷ்ணு, சாஸ்திரி என்பது கலைஞனைக் குறிக்கும். நான் கூட இப்போது ஒரு சாஸ்திரி தான். அந்த பரிதிமாற் கலைஞர் தான் நூறாண்டுகளுக்கு முன்பு போர்க்கொடி உயர்த்தினார். நம்முடைய தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வேண்டும், உலகத்திலே ஹிப்ரு போன்ற ஐந்தாறு மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து இருக்கிறது, ஆனால் நம்முடைய தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து இல்லையே என்று வருத்தப்பட்டார். அந்த வருத்தம் பல ஆண்டு காலமாகத் தேக்கத்திலே இருந்து இப்போதுதான் அண்மையில் நம்முடைய ஆட்சி தோழமை கட்சி நண்பர்களுடைய ஒத்துழைப்போடு உதயமான பிறகு, நான் டெல்லிப் பட்டணம் சென்று அங்கே அம்மையார் சோனியா காந்தி அவர்களை சந்தித்து, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்து, அதற்குப் பிறகு அந்தத் துறையின் அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களைச் சந்தித்து,

சட்டப்பேரவையிலேயே "தமிழ்நாடு" என்று மூன்று முறை ஒலிக்க, எல்லா உறுப்பினர்களும், கட்சி சார்பற்ற முறையில் "வாழ்க வாழ்க" என்று ஒலித்த அந்த ஒலி முழக்கம் இன்றைக்கும் என்னுடைய காதுகளிலே கேட்டுக் கொண்டிருக்கிறது. என்றும் மறக்க முடியாத முரசமாக கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி பெயர் சூட்டப்பட்ட இந்த மாநிலம் இங்கே தமிழை தகுந்த முறையில் உயர்ந்த முறையில், அதை நாம் செங்கோலோச்சுகின்ற முறையிலே நடத்திட வேண்டாமா என்ற கேள்விக்கு பதில் கிடைக்க ஏறத்தாழ நூறாண்டு காலமாயிற்று. தமிழுக்கு "செம்மொழி" என்ற தகுதி உண்டே, அந்தத் தகுதி எங்கே போயிற்று என்று முதன் முதலில் கேட்டவர் பரிதிமாற் கலைஞர். பரிதிமாற் கலைஞர் என்றால் அவர் வேறு ஏதோ ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர் என்று யாரும் கருதக் கூடாது, அவருடைய இயற்பெயர் சூரிய நாராயண சாஸ்திரி. சாஸ்திரியாக இருந்தாலும், அய்யர், அய்யங்காராக இருந்தாலும் அந்தக் காலத்தில் தமிழின் மீது அவர் கொண்டிருந்த பற்றுக்கு ஈடில்லை, இணையில்லை என்ற அந்த நிலைமையிலேதான் சூரிய நாராயண சாஸ்திரி தன்னுடைய பெயரை பரிதிமாற் கலைஞர் என்று தமிழ்படுத்திக் கொண்டார்.





இந்த சங்கத்திற்கு, சபாவிற்கு, மன்றம் என்று பெயரிடுவதா அல்லது வேறு பெயர் வைப்பதா என்று எண்ணியபோது தான் நான் இந்த மன்றத்திலே உள்ள நண்பர்களை யெல்லாம் அழைத்துப் பேசினேன், அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், இயல், இசை நாடகம் என்ற இந்த மூன்றும் நம்முடைய தமிழுக்கே பெருமையளிக்கக் கூடியது, ஆகவே இந்த மூன்றையும் சேர்த்து இயல் இசை நாடக மன்றம் என்று இதற்கு பெயர் வைக்கலாமென்று கேட்டேன், அப்படியே எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள், அன்று முதல் இன்று வரையில் இது இயல், இசை, நாடக மன்றமாக விளங்கி வருகிறது. அப்படிப்பட்ட இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற இந்த விழாவில் பலர் இன்றைக்கு பாராட்டப்பட்டிருக்கிறார்கள். சிறப்பிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவராக நம்முடைய இயக்குநர் பார்த்திபன் அவர்களை நன்றி சொல்லச் சொன்னால், அவர் தமிழ்நாட்டையே நான் இதன் மூலம் பெற்றுக் கொண்டேன் என்று நமக்குத் தெரியாமலே எடுத்துக் கொண்டு போய்விட்டார். பல பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள், தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டுபோக பார்த்திபன் உட்பட தமிழர்கள் அவ்வளவு பேரும் ஏமாளிகள் அல்ல என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன் .

செம்மொழி என்கிற அந்தஸ்து தமிழுக்குத் தரப்பட வேண்டும், அதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னவுடன், எனக்கு சோனியா காந்தி அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். செம்மொழி அந்தஸ்து தமிழுக்குத் தரப்பட்டு விட்டது என்ற செய்தியைச் சொல்லிவிட்டு, அவர்கள் அந்தக் கடிதத்திலே எழுதியிருந்தார்கள், இந்த அந்தஸ்து வந்ததற்கு யாராவது பெருமை பேசிக் கொள்ள வேண்டுமேயானால், அந்தப் பெருமை உன் ஒருவனுக்குத் தான் உரிமை உடையது என்று எனக்கு எழுதினார்கள். அந்தக் கடிதம்; நான் புதையலாக வைத்து போற்ற வேண்டிய ஒன்றாகும். அத்தகைய நிலைமையிலே செம்மொழித் தகுதி நம்முடைய தமிழுக்குக் கிடைத்திருக்கும்போது, அந்தத் தமிழால் நம்முடைய மன்றத்தை இசைவாணர்களை, கலைவாணர்களை — இவர்களையெல்லாம் பாராட்ட, புகழ அவர்களுக்கெல்லாம் மேலும் மேலும் ஊக்கத்தை வழங்க — அவர்களில் பலர் இயக்குநர்களாக நம்முடைய ராமநாராயணனைப் போல இருக்கிறார்கள், பலர் கவிஞர்களாக இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் செயலாளராக இருக்கின்ற இளையபாரதியைப் போல, இப்படி இருக்கின்றவர் களையெல்லாம் சிறப்பிக்க, அவர்களையெல்லாம் உயர்த்த,





அவர் நன்றி கூறியது எனக்கு – கலைஞர்களுக்கு விருது வழங்கினேன் என்று நன்றி கூறினார். ஆனால் நான் அந்த நன்றியை எனக்குக் கூறியதாக எடுத்துக் கொள்ளவில்லை. இதே மன்றத்தில் 1967 ஆம் ஆண்டு இந்த கலைமாமணி விருதை இந்த மேடையில் எனக்கு அணிவித்து, வாழ்த்துச் சொன்னவர் என்னை ஆளாக்கிய என் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள். அப்போது கூட அந்தப் பதக்கத்தை நேரடியாக என்னுடைய கழுத்திலே போடாமல், போடுவது போல பாவித்து, இரண்டு முறை எனக்கு ஏமாற்றத்தைத் தந்து, மூன்றாவது முறை தான் அதைப் போட்டார்கள். அப்படி ஒரு வேடிக்கையாக அந்தப் பதக்கம் எனக்கு அன்று அளிக்கப்பட்டது. இன்றைக்கு ஒவ்வொரு விழாவிலும் நூற்றுக்கணக் கானவர்களுக்கு, ஐம்பதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த பதக்கம் அணிவிக்கப்படுகிறது. நான் முதலில் நம்முடைய மன்றத்திற்கு தமிழ்ப் பெயர் வைக்கப்பட்டது பற்றிச் சொன்னேன். இன்று தமிழைக் காப்பாற்ற வேண்டிய, போற்ற வேண்டிய, பாதுகாக்க வேண்டிய ஒரு கட்டம் தமிழர்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. தமிழைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு, தமிழுக்கு நாங்கள் தான் காப்பாளர்கள் என்று கூறிக் கொண்டு அந்தப் பெருமையிலே நாம் ஏமாந்துவிடக் கூடாது, ஏமாற்றிவிடக் கூடாது. இன்று நான் ஒரு பத்திரிகையைப் படித்தேன். ''மாலை முரசு'' பத்திரிகை. நான் பேசுவது ஒன்றும் அரசியல் அல்ல. தமிழ் மொழியைப்பற்றி ஒரு வாதம். தனித்தமிழ் பேசுவதா, வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு வாதத்தை அந்த மாலைப் பத்திரிகை இன்று எழுப்பியிருக்கிறது. அதிலே அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ''ஆரம்பமாகப் போகிற கலைஞர் டி.வி.க்கு சில அறிவுரைகள்'' – ''தமிழிலேயே நடத்துங்கள்'' – அதாவது எனக்கு அறிவுரை கலைஞர் தொலைக்காட்சியை தமிழிலேயே நடத்துங்கள் என்பது தமிழை வளர்ப்பதற்கு, தமிழர்களை வளர்ப்பதற்குப் பயன்படவேண்டுமென்று சொல்கிறார்கள். நான் அதை நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன் . நீங்கள் யார் சொல்வது, நான் யார் கேட்பது என்கின்ற அகம்பாவம் என்னுடைய உள்ளத்திலே எந்த மூலையிலும் அரும்பாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் அவர்கள் ஆங்கிலம் கலந்து சில சொற்கள் கையாளப்பட்டதை – குறிப்பாக சன் டி.வி.க்கு தமிழ் உணர்வே கிடையாது அவர்களுக்கென்று – நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் கலகம் ஊட்டி விடுகின்ற அளவிற்கு அதிலே ஒரு கட்டுரை வந்திருக்கிறது. சன் டி.வி. என்பதே ஆங்கில கலப்பு என்றும், சன் டி.வி.யில் தமிழுக்கே இடம் இல்லை என்றும் பெரிய தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தமிழை வளர்ப்பதற்காக உற்சாகத்தோடு செய்யப்படுகின்ற – அந்த ஊக்க உணர்வோடு செய்யப்படுகின்ற காரியமா என்றால் இல்லை. ஏதோ ஒரு பகையைத் தீர்த்துக் கொள்வதற்கு பயன்படுகின்ற காரியமாகத்தான் அது இருக்கின்றது. நான் அந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்த்தேன் . சன் டி.வி.யால் தமிழ் உணர்வு அழிந்தது என்பது தலைப்பு. எல்லோருக்கும் சன் டி.வி.யிலே தொடர்பு உண்டு. நமக்கு இன்றைக்கு தொடர்பு இல்லாத காரணத்தால், அது தமிழை அழித்து விட்டதா என்ற கேள்விக்கு அவ்வளவு அவசரப்பட் டு, யாரும் பதில் சொல்ல முடியாது. கலைஞர் தொலைக்காட்சியிலாவது தமிழ் வாழுமா என்று சந்தேகப்படுகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற ஒரே பதில் – கலைஞர் வாழுகிறாரோ இல்லையோ, தமிழ் வாழும். இது தான் அவர்களுக்கு என்னுடைய பதில்.

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்பதுதான் நான் தமிழைப் பற்றிக் கூறிய ஒரு சூளுரை. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்பது. எனவே தான் தமிழ் வாழுமா என்ற கேள்விக்கே இடம் இல்லை, வாழும். மற்றவர்களையும் வாழ வைக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சன் டி.வி.யால் தமிழ்மொழி அழிந்தது என்பதற்கு நான் ஏதோ சன் டி.வி.க்கு புதிதாக வக்காலத்து வாங்குகிறேன் என்று நாளைக்குப் பத்திரிகைகளில் எப்படி செய்தி வரும் என்று எனக்குத் தெரியும். ஸ்ரீபெரும்புதூர் என்று வேண்டுமென்றே, அவ்வளவு பெரிய "ஸ்ரீ"யை போட்டிருக்கிறார்கள். பதிலுக்குப்பதில் தாக்குவதற்காக இதைச் சொல்லவில்லை. மாலைமுரசைக் கேட்டுக் கொள்கிறேன் . இனிமேல் திருப்பெரும்புதூர் என்று போடுங்கள். உங்களுடைய தமிழ் உபதேசத்தைக் கேட்டு சன்டி.வி. திருந்திக் கொள்ளும், நானும் கூட திருந்திக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் தயவுசெய்து ஸ்ரீபெரும்புதூர் என்பதை திருப்பெரும்புதூர் என்று திருத்திக் கொள்ளுங்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



ஆனால் தமிழின் பெயரால் ஒருவரைக் குற்றம் சொல்லி, ஒருவரை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி தமிழ் உணர்வே இல்லை என்று சொல்வது நல்லதல்ல. எல்லோரும் சேர்ந்து தான் தமிழைக் காப்பாற்ற வேண்டும், தமிழை வளர்க்க வேண்டும். அறிவுரை கூற வேண்டும். ஆனால் அதே "மாலைமுரசு" பத்திரிகையில் முதல் பக்கத்தில் "ஸ்ரீபெரும்புதூரில் இன்று ராஜிவ் நினைவிடத்தில் பிரதிபா பட்டீல் அஞ்சலி" என்று பெரிய கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இதிலே ஸ்ரீபெரும்புதூர் என்பது தமிழா? திருப்பெரும்புதூர் என்று அதை தமிழர்கள் எல்லாம் அழைக்கிறார்கள். நாமெல்லாம் திருப்பெரும்புதூர் என்று தான் அழைக்கிறோம். அதை

இது ஒரு வாதப்பிரதிவாதத்திற்காக எழுப்பப்பட்டதல்ல. எல்லோரும் சேர்ந்து தமிழைக் காப்பாற்ற ஒருவருக்கொருவர் பகையைக் கக்கி, தமிழைக் காப்பாற்ற முடியாது. எனவே உள்ளுணர்வோடு, யோசித்து அந்த உணர்வைப் பயன்படுத்தி, அந்த வகையில் தமிழ் வாழ வேண்டும், தமிழ் பரப்பப்பட வேண்டுமென்ற அந்த எண்ணத்தோடு பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்றைக்கு விருது பெற்ற, பரிசு பெற்ற அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து வாழ்க! வாழ்க! தமிழ் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன்.



# அண்ணன் ஜீவானந்தம் பெயரால் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டுவோம்

பொதுவுடைமைவீரர் ப. ஜீவானந்தம் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை

அரசின் சார்பில் இந்த நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை தமிழகத்திலே மூன்று இடங்களில், நகரங்களில் நடத்துவது என்று தீர்மானித்து தலைநகரத்திலே இன்றுமிக எழுச்சியோடும், சிறப்போடும், சீரோடும் இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விழா நடைபெறுகின்ற நேரமும், காலமும் எப்படிப்பட்டது என்பதை விழாவிலே நீங்கள் கேட்ட உரைகளே உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கும். அத்தகைய ஒரு அரிய நேரத்தில் இந்த விழாவை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### இது அரசு விழா!
### " அரசு விழா''

இது அரசு விழா, அரசு "விழா'' – நிச்சயமாக "அரசு விழா'' என்ற நம்பிக்கையோடு– "விழா'' என்பது பன்மை ''ப்ளூரல்'' – மாநில அரசு, மத்திய அரசு என இரண்டையும் சேர்த்துச் சொல்வதால் 'விழா' என்று சொன்னேன், தமிழ் இலக்கணம் புரிந்தவர்களுக்கு சொல்லத் தேவையில்லை. புரியாதவர்கள் புரிந்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பிறந்து நூறாண்டுகள் ஆயிற்றா என்று எண்ணும்பொழுது அவரோடு இளமைக் காலத்திலேயே பழகிய எனக்கு, என் போன்றோர்களுக்கு எத்தகைய ஆதங்கமும், பெருமூச்சும் ஏற்படும் என்பதை எங்களால்தான் உணர முடியும். அத்தகைய உணர்வுகளோடுதான் நான் இந்த மேடையிலே அமர்ந்திருக்கிறேன், உடல்நிலை சற்று சரியில்லை என்றாலும் கூட நான் வரத் தவறக் கூடாது என்ற உறுதியோடு வந்து அமர்ந்துள்ள இந்த விழாவில் சில செய்திகளை உங்களோடு பரிமாறிக் கொள்ள நான் விரும்புகின்றேன்.

நம்முடைய நண்பர் கோபு இங்கே வந்திருக்கிறார், அவர் எழுதிய கட்டுரை ஒன்றை இன்று காலை நான் படித்தேன், என் சம்பந்தப்பட்ட கட்டுரை அது.




என்னைப்பற்றி மாத்திரம் அல்ல. அண்ணன் ஜீவானந்தம் பற்றிய தொடர்புடைய கட்டுரையும்தான் அது. ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பான பழைய நினைவை இன்றைக்கு அவர் திரும்ப எதிரே நிறுத்தி அதைக் காட்சியாக்கி அவருக்கே உரிய எழுத்தாற்றலோடு ஜனசக்தி பத்திரிக்கையிலே காட்டியிருக்கின்றார்.

ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் திருவாரூரில் இருந்து இயக்கப் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்த காலகட்டத்தில் திருவாரூரிலே என்னோடு மிக அதிகமாகப் பழகிய பாண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த சுரேந்திரன் என்ற இளம் நண்பர் என்னைச் சந்தித்து அவருடைய திருமண விழாவிற்கு நான் தலைமையேற்க வேண்டும் என்று கேட்டார், அப்படியே கோபு எழுதியதை உங்களுக்கு சொல்கிறேன், நான் மறுப்பு சொல்லாமல் திருமணத்திற்கு தலைமையேற்க ஒப்புக் கொண்டேன். காரணம் இருவரும் நெருங்கிய நண்பர்கள். அது மாத்திரமல்ல. இயக்கத்தின்பால் பற்றுக் கொண்ட இளம் நண்பர் சுரேந்திரன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அளவற்ற பற்றுக் கொண்டு அதற்குக் காரணமாக நான் இருந்ததால் என்னை மணவிழாவிற்கு அழைத்தார். வருகிறேன் என்று ஒத்துக் கொண்டேன். அவருடைய அண்ணனுக்கு அன்றைக்கே திருமணம். அவருடைய அண்ணன் பெயர் பாண்டியன். அவர் கம்யூனிஸ்ட் கட்சி பற்றுக் கொண்டவர். பாண்டியன், சுரேந்திரன் என்ற சகோதரர்களில்– பாண்டியன் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் – சுரேந்திரன் தி.மு.க. பற்றாளர். இருவருக்கும் திருமணத்திற்கு தேதி குறிப்பிட்டாகி விட்டது.

**ஜீவா தலைமையில் திருமணம்**

சுரேந்திரன் திருமணத்திற்கு தலைமை ஏற்பதாகக் கேட்டு நான் ஒப்புதல். மூத்த மகன் பாண்டியன் திருமணத்திற்கு "ஜீவானந்தம் அவர்கள் தலைமை வகிப்பதாகக் கேட்டு அவரும் ஒப்புதல். இந்த தகவல் எனக்குக் கிடைக்கிறது. நண்பர்களெல்லாம், ஜீவாவைப் பற்றி பத்திரிக்கையில் எல்லாம் எழுதுவாய். கேலி பேசுவாய். அவருடைய கருத்துக்களையெல்லாம் சில நேரங்களில் விமர்சிப்பாய். இரண்டு பேரும் ஒரே மேடையில் போய் திருமணத்தில் என்ன பேசப் போகிறீர்கள்?'' என்றெல்லாம் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். எப்படி நடக்கப் போகிறது திருமணம் என்பதை உன்னிப்பாக அந்த வட்டாரமே கவனித்தது. திருமணம் எங்கே நடைபெற்றது என்றால் ஒரு பெரிய பண்ணையில் நடைபெற்றது. பாண்டி பெரிய பண்ணை என்றால் – பாண்டி மைனர் வைத்தியநாதத் தேவர் என்பவருடைய வீட்டுத் திருமணம் அது. என்ன கம்யூனிசம் என்கிறாய், மைனர் என்கிறாய், பெரிய பண்ணை என்கிறாய் என்று கேட்டால், அப்போதெல்லாம் கம்யூனிஸ்ட்கள் சில பேர் பெரிய பண்ணையிலே இருந்தாலும் கம்யூனிஸ்ட்களாக இருப்பார்கள். எப்படி குமாரமங்கலம் ஜமீன்தார் இருந்தாரே, அதைப் போல என்று வைத்துக் கொள்ளுங்களேன். நல்லகண்ணு அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

அந்தத் திருமணங்களுக்கு நான் போக வேண்டும். திருவாரூரிலிருந்து ஒரு காரை எடுத்துக்கொண்டு நான் அந்தத் திருமணத்திற்குச் செல்கிறேன், மாப்பிள்ளை சுரேந்தர் என்னை அழைத்துப் போகிறார். அதே

திருமணத்திற்கு அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பக்கத்திலே உள்ள புகை வண்டி நிலையத்திலே இறங்கி மாட்டு வண்டியில் திருமண வீட்டிற்கு வந்து இறங்கினார், இரண்டு பேரும் போய்ச் சேருவதற்குள்ளாக நான் ஒரு யோசனை சொன்னேன். இரண்டு திருமணங்களும் ஒரே மேடையில், அவர் ஒரு திருமணத்திற்கு தலைமை வகிப்பார், நான் ஒரு திருமணத்திற்கு தலைமை வகிப்பேன் – அது கம்யூனிஸ்ட் திருமணம். இது சுயமரியாதை இயக்கத் திருமணம் – சுயமரியாதை இயக்கத்திற்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் வித்தியாசம் இருப்பதாக கருதிக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட திருமண நிகழ்ச்சிகள் அது. நான் அப்போது, இரண்டு திருமணங்களையும் ஒன்றாகவே நடத்தலாம் என்றேன். எப்படி என்றார்கள். அண்ணன் ஜீவானந்தம் அவர்களே இரண்டு திருமணங்களுக்கு தலைமை வகிக்கட்டும். நான் இரண்டு மாப்பிள்ளைகளையும் வாழ்த்துகிறேன் என்று சொல்லி, இதை இரண்டு மண வீட்டாரும் ஏற்றுக் கொண்டு, நான் அந்தத் திருமண விழாவிலே வாழ்த்தினேன், அண்ணன் ஜீவானந்தம் அவர்களும் தலைமை வகித்து வாழ்த்தினார்கள்.

### அண்ணன் என்கிற உறவு

யார் அந்தக் குடும்பம் என்று தெரிந்து கொள்ள வேண்டுமேயானால், அன்று நடைபெற்ற இரண்டு திருமணங்களில் மூத்த மகன், பாண்டியன், அவருடைய மகன் தான், அண்மையிலே ரஷ்யாவிலே கேமராமேனாகச் சென்று திடீரென்று நெஞ்சடைப்பின் காரணமாக மறைந்துவிட்டாரே, ஜீவா என்ற தோழர், திரையுலகத்தைச் சேர்ந்த தோழர், அவர் இறந்து விட்டார் அல்லவா, அந்தக் குடும்பம் தான் அது. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், எவ்வளவு நீண்ட நெடிய பாரம்பரியம் உள்ள குடும்பத்திற்கு நான் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை சொந்தக்காரனாக இருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

நீங்கள் இந்த மேடையிலேயே பார்த்தீர்கள், எனக்கு பொன்னாடை போர்த்த, மாலை அணிவிக்க, வாழ்த்துச் சொல்ல, பாராட்டுக் கூற அந்தக் குடும்பமே வந்து நின்றதை நீங்கள் கண்டீர்கள். அண்ணன் ஜீவா அவர்களின் மறைவுக்குப் பிறகு எத்தனையோ நிகழ்ச்சிகள், அவைகளையெல்லாம் நான் இங்கே கூற விரும்பவில்லை, அடக்கத்தின் காரணமாக, பண்பாட்டின் காரணமாக, எத்தனையோ நிகழ்ச்சிகள், அவ்வளவு நிகழ்ச்சிகளிலும் நான் சொல்ல விரும்புகிறேன், கர்வத்தோடும், இறுமாப்போடும் சொல்கிறேன், பல நல்ல நிகழ்ச்சிகள் அந்த இல்லத்தில், நான் இல்லாமல் நடந்ததில்லை. இப்போதும் கூட மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு நம்முடைய பெரியவர் நல்லகண்ணு அவர்களுக்கு நன்றாகத் தெரியும்– அவரும் நானும் இந்தக் குடும்பத்திலே ஒரு திருமணத்தை நடத்திவைத்தோம். இப்படி நான் அண்ணன் என்று அவரை அழைக்கின்ற அளவிற்கு உறவு கொண்ட ஒரு இயக்க ஆர்வம் அவருக்கும் எனக்குமிடையே இருந்தது.

### எழுதவில்லை – பேனா முள்

ஆனால் இத்தனைக்கும் நாங்கள் இருவரும் அவ்வளவு தோழமை உணர்ச்சியோடு பழகினோமா என்றால் இல்லை. இயக்கக் கொள்கை உறவு எங்களைப் பிணைத்தது. சண்டை போட்டுக் கொண்டோம், மேடையிலே சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். எழுத்திலே சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். நான் முரசொலி வார இதழை திருவாரூரில் இருந்து






நடத்தியபோது. முதல் பக்கத்திலேயே அண்ணன் ஜீவா அவர்களைக் கண்டித்து, தாக்கி "எழுதவில்லை'' என்ற தலைப்பில் ஒவ்வொரு வாரமும் கட்டுரை எழுதுவேன். கட்டுரைக்குப் பெயர் ''எழுதவில்லை'', எழுதுகின்ற கட்டுரையாளரின் பெயர் "பேனா முள்'' என்றைக் காவது என்னைப் பார்த்து, ''என்னடா என்னைப் பற்றி இப்படி எழுதியிரு க்கிறாய்'' என்று கேட்டால் நான் எழுதவில்லை. பேனா முள் அல்லவா எழுதியது என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு இரண்டு பேருக்குமிடையே பழக்கம் உண்டு.

அவருடைய சிந்தனையாற்றல், அவருடைய சீற்றம், அவருடைய வேகப் பேச்சு, மேடையிலே பேசும்போது ஜீவானந்தம் என்ற மனிதர் பேசுகிறாரா ?சிங்கம் உறுமிக் கொண்டிருக்கிறதா? என்றே தெரியாது, அப்படிப்பட்ட மேடைப் பேச்சுகளுக்குச் சொந்தக்காரர்.

### பெரிய பாக்கியம் –பெரும்பேறு

ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு முறை எனக்கு பரமக்குடியில் இருந்து திரும்பும் வழியில் இராமனாதபுரம் திருப்பத்தூர் அருகில் ஒரு பாலத்தில் என்னுடைய கார் மோதி கண்ணிலே பெருத்த அடிபட்டது. ஒரு விபத்து. அந்த விபத்திற்குக் காரணம் இரவு 3 மணிக்கு மேல் நான் பரமக்குடியிலிருந்து திரும்பியதுதான். சென்னையிலிருந்து கார் மூலமாக பரமக்குடி பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள சென்று – 11 மணிக்கு நான் கூட்டம் பேச வேண்டுமென்று அறிவித்திருந்தும்கூட – நான் போய்ச் சேர்ந்த நேரம் 3 மணி. அப்போது நான் கேட்டேன். "இவ்வளவு கூட்டம் இருக்கிறதே'' என்று நான் கேட்டபோது, ''அது மாத்திரமல்ல, உங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது'' என்றார்கள், என்ன என்று கேட்டேன். ''இங்கிருந்து ஒரு பர்லாங் தொலைவில் அந்தக் கூட்டத்தை ஒரு இடத்தில் அமர்ந்து பொதுவுடைமை வீரர் ஜீவானந்தம் அவர்கள் உங்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று சொன்னார்கள். அதை விட பெரிய பாக்கியம், அதை விடப் பெரும் பேறு, அந்தக் காலத்திலே வளருகின்ற ஒரு பேச்சாளனுக்கு இருக்க முடியுமென்று கருதுகிறீர்களா? அந்தப் பாக்கியம் நமக்குக் கிடைத்ததே என்று நினைத்துக் கொண்டே பேசிவிட்டு திரும்பினேன். 3 மணிக்குப் புறப்பட்டு திரும்பி வருகிற வழியிலே தான் திருப்பத்தூருக்குப் பக்கத்திலே கார் விபத்துக்கு உள்ளாகி நான் பெரும் ஆபத்திற்கு ஆளானேன், அதனால் தான் இப்போது உங்களிடையே இருக்கிறேன், அது வேறு விஷயம்.

### தியாக உருவம்

இதை ஏன் சொல்கிறேன் என்றால், அவர் அவ்வளவு நேரம் அப்போது ஏன் உட்கார்ந்திருந்தார் என்பதற்கும் காரணம் உண்டு. அப்போது இராமாயணப் போட்டி தமிழ்நாடு முழுவதும் கம்பராமாயணத்திற்கு எதிராக பேரறிஞர் அண்ணா அவர்கள் "கம்பரசம்'' போன்ற கட்டுரைகளை எழுதினார், அதைப் பிரச்சாரம் செய்கின்ற பணியிலே மாணவர்களாகிய நாங்கள் எல்லாம் ஈடுபட்டிருந்தோம். அப்போது அதை எதிர்த்து, மூர்த்தன்யமாக எங்களைத் தாக்கிய பெருமை மறைந்த ஜீவா அவர்களுக்கு உண்டு. நீங்கள் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர் கம்பராமாயணத்தை எப்படியெல்லாம் பாராட்டிப் பேசுகிறார் என்று கேட்க நான் கூட்டங்களில் ஒளிந்து கொண்டு கேட்பதுண்டு. அதைப் போல அவர்

நான் எப்படி கம்பராமாயணத்தைத் தாக்கிப் பேசுகிறேன் என்பதைக் கேட்க பரமக்குடி கூட்டத்தில் ஒரு இடத்தில் அமர்ந்து கேட்டிருக்கிறார். நான் எப்படி தாக்கிப் பேசுகிறேன் கம்பராமாயணத்தை என்று கேட்க அண்ணனும் – அதைப் போல அவர் எப்படி கம்பராமாயணத்தைப் பாராட்டிப் பேசுகிறார் என்பதைக் கேட்க தம்பியும் – இந்த இலக்கிய சந்தையிலே ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட நேரம் தான் எங்களை இன்றைக்கு உங்களிடையே – அந்தச் சந்திப்பிலே ஏற்பட்ட பெருமிதம்தான், விளைவுதான் இன்றைக்கும் அவரை நினைக்கவும், அவரைப் போன்ற தியாகிகள், தேசப் பற்றாளர்கள், நாட்டுப் பற்றாளர்கள், எதைப் பற்றியும் கவலைப்படாமல், இங்கே சென்னார்களே, தன்னுடைய மகளைக் கூட 17 ஆண்டுகள் கழித்துத்தான் பார்த்தாரென்று, அப்படிப்பட்ட தியாக உருவத்தை அற்ப ஆயுளிலே நாம் இழந்திருக்கிறோம்.

**ஜீவானந்தம் மறையவில்லை**

பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் 39 வயதிலும், 49 வயதிலும், 56 வயதிலும் மறைந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவை 59ஆவது வயதிலே பறி கொடுத்தோம், இல்லையென்றால் இன்றைக்கும் இன்னும் எத்தனையோ செழிப்புகளை, எத்தனையோ முன்னேற்றங்களை, ஏற்றங்களை நாடு கண்டிருக்க முடியும், அதைப் போல ஜீவா அவர்கள் இன்றைக்கும் இருந்திருந்தால் – இன்றைக்கு என்றால் 100 ஆண்டுகள் முடியாது – அவ்வளவு பேராசைப் பட வில்லை நான் – மேலும் பத்து, பதினைந்து ஆண்டுகள் 90 வயது வரை வாழ்ந்திருப்பாரேயானால் எத்தனையோ அரிய கருவூலங்கள், இலக்கியத்திற்கு கிடைத்திருக்கும், எத்தனையோ ஆராய்ச்சி புதையல்கள் நம்முடைய காவியத்திற்கு, நம்முடைய கலைக்கு, நம்முடைய நாட்டிற்கு, நம்முடைய மொழிக்குக் கிடைத்திருக்கும்.

அவர் அளித்த உறுதி தான் – அவர் எழுப்பிய முழக்கம் தான் 1955 ஆம் ஆண்டு நம்முடைய நல்லகண்ணு அவர்கள் எடுத்துக்கட்டியதைப் போல், சட்டப்பேரவையில் 29–9–1955 அன்று "நான் தமிழன், என்னுடைய மொழியே இந்த ராஜ்யத்தில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும் நியாய மன்றத்திலும், நிருவாகத் துறையிலும் தமிழ்மொழியே இயங்க வேண்டும். உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்க வேண்டும். கல்வியில் தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும்'' என்று பேசியவர் அண்ணன் ப. ஜீவானந்தம் அவர்கள் என்பதை 27–1–2007 அன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு நான் பதிலளிக்கும்போது எடுத்துக் குறிப்பிட்டேன் என்றால் ஜீவானந்தம் மறையவில்லை, வாழ்ந்து கொண்டிருக்கிறார், வாழ்ந்து கொண்டிருப்பது மாத்திரமல்ல, தான் சொன்னதை யெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

"நான் தமிழன்,
என்னுடைய மொழியே
இந்த ராஜ்யத்தில் ஆட்சிமொழியாக
இருக்க வேண்டும்.
கல்விக் கூடங்களிலும்,
ஆட்சி மன்றத்திலும்,
நியாய மன்றத்திலும்,
நிர்வாகத் துறையிலும்
தமிழ்மொழியே இயங்க வேண்டும்.
உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான்
வழக்குமொழியாக இருக்க வேண்டும்.
கல்வியில் தமிழே போதனா மொழியாக
இருக்க வேண்டும்"
என்று பேசியவர் அண்ணன்
ப. ஜீவானந்தம்

"சொன்னேன், இடையிலே வந்தவர்கள் செய்யவில்லை, நீ செய் தம்பீ!'' என்று ஆணையிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதைத் தவிர அதற்கு வேறு என்ன அர்த்தம்? அதை ஆணையாக ஏற்றுத் தான் இன்றைய தினம் அதை கட்டளையாக ஏற்று அவற்றையெல்லாம் இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட மாவீரர், தன்னுடைய குடும்பத்தைப் பற்றி எண்ணாமல், நாட்டைப் பற்றி எண்ணியதும், வீட்டைப்பற்றிக் கருதாமல் நாட்டைப் பற்றி கருதியதும் – அவர் மறைந்த போது நான் எழுதிய ஒரு கவிதையை இங்கே நம்முடைய நல்லகண்ணு அவர்கள் நினைவுப்படுத்தினார்கள்.

**அறுபதுகளில் அண்ணன் ஜீவானந்தம் பற்றி நான் எழுதிய கவிதை!**

1963 ஆம் ஆண்டு ''நம்நாடு'' பத்திரிகையில் ஜீவா அவர்களைப் பற்றி நான் எழுதிய கவிதை இது.

'நாமணக்கும் நல்ல தமிழ் மணக்கும்
நாஞ்சில் என்ற பேர் மணக்கும்
பாமணக்கும் பூதப்பாண்டி யெனும் ஊர்
மணக்கும்
பண்பாளர் ஜீவா புகழ் பாடுகின்ற வாய்
தேன் மணக்கும்!

ஆட்டம் போடும் வாலிபத்தின் – பனி
மூட்டம் கலையா வயதினிலே
நாட்டம் கொண்டார் பொது வாழ்வினிலே!

தோட்டம் நிறையப் பூ இருந்தும்
தொலைவில் பறந்த வண்டினைப் போல்
தொண்டே என்றன் வாழ்வென்று
சுற்றிப் பறந்தார் நாட்டினிலே
வீட்டில் சிலநாள் தங்கிடுவார் – சிறைக்
கூட்டில் பலநாள் வதங்கிடுவார்!

மேடையில் முரசு கொட்டிடுவார் – வாழ்வின்
கோடையில் பயணம் சென்றிடுவார்!
'தாமரை' மலரைத் தந்திடுவார் – அதில்
தமிழாம் அமுதை உண்டிடுவோம்!

கையை ஓங்கிப் பேசிடுவார் – அங்கே
கடும்புயல் வீசக் கண்டிடுவோம்!
வாரீர் என்று அழைத்திடுவார் – அந்த
வாஞ்சை கண்டு சிலிர்த்திடுவோம்!

குன்றாம் அவர்தம் தோளெங்கே?
குன்றா அவர்தம் திறமெங்கே?
நன்றாம் அவர்தம் குணமெங்கே?
நாட்டுக் குழைக்கும் பண்பெங்கே?
வீரம் செறிந்த முகம் எங்கே?
விழிகள் கொட்டும் ஒளி எங்கே?

குருதியெலாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப்புலியைக்
கொள்கையிலே உறுதிகொண்ட
தமிழ்க் கவியைக்

கொளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு எனக்கேட்டுக்
குமுறுகின்றார் நாட்டுமக்கள்!
வாழ்க ஜீவா! வாழ்க என்றும்!'

என்ற இந்தக் கவிதையை அன்று எழுதினேன். இன்றும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் என்னை உணர்ச்சி மயமாக ஆக்கிடத் தவறுவதில்லை. அந்த அளவிற்கு நான் அவரிடத்திலே பாசம் கொண்டிருந்தேன்.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் இந்த இயக்கத்தில் எல்லோருடனும், அண்ணன் தம்பி, அக்காள் தங்கைகள் என்றுதான் பழகிக் கொண்டிருந்தாலுங்கூட, ''அண்ணா'' என்று ஒருவரைத் தான் அன்றும் அழைத்தேன், இன்றும் குறிப்பிடுகிறேன், "அய்யா'' என்று ஒருவரைத்தான் அன்றும் அழைத்தேன், இன்றைக்கும் குறிப்பிடுகிறேன். அண்ணா, அய்யா என்று இருவரை அழைத்தது போக, அண்ணன் என்று பட்டுக்கோட்டை அழகிரிசாமியை அழைத்தேன், அண்ணன் அழகிரி என்று. அந்த அண்ணனுக்கு அடுத்தபடியாக அண்ணன் ஜீவானந்தம் என்று அழைத்தது நம்முடைய ஜீவா அவர்களைத்தான். இந்த அண்ணனைத் தான் இன்றைக்கு நாம் நினைவு கூர்கிறோம்.

அந்த அண்ணன் பெயரால் இந்த நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டுவோம் என்று உறுதி பூணுகிறோம். அந்த அண்ணனுக்கு நினைவு போற்றுகிற இந்த நேரத்தில் நாட்டு ஒற்றுமைக்கு என்ன சொல்கிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். நீங்களும் நானும் சேர்ந்து அந்த ஒற்றுமைக்கான வழியை நம்முடைய ஒற்றுமையின் மூலம் காட்டுவோம். யார் யார் ஒற்றுமை உடன்படாமல் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் நம்முடைய ஒற்றுமையைக் கண்டு நீங்கள் தானே பத்திரிகை நடத்துகிறீர்கள் "ஜனசக்தி'' என்று – ஜனசக்தி திரண்டால், அதன் கீழே எல்லா சக்திகளும் அடங்கும், தீயசக்தியை அடக்குவோம், ஜனசக்தியை எழுப்புவோம் என்று இந்த மாமேடையிலே நம்முடைய தலைவர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த மேடையிலே உறுதி எடுத்துக் கொள்வோம் என்று கூறி, ''ஜீவா புகழ் வாழ்க'' என்றுரைத்து விடை பெறுகிறேன்.

**சென்னை கலைவாணர் அரங்கில்**
**தமிழக அரசின் சார்பில்**
**21.08.2007 அன்று நடைபெற்ற**
**பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்**
**பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவில்**
**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை.

# 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.20 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கணினி மென்பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் முன்னிலை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தகவல்

மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 23.8.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் வடிவம் வருமாறு:

1997–ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் நடைபெற்றபோது ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் இந்தியாவில் தமிழகமே என்ற பெருமையைப் பெற்றது. அதே ஆண்டில் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான "மாநில அளவிலான பணி முனைப்புக் குழு" அமைக்கப் பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையின் 1996–2001ஆம் கால கட்டத்தில் பல முன்னோடி யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**டைடல் பூங்கா**

1999–ஆம் ஆண்டில் "தமிழ்நெட் 99" என்னும் பெயரில், கணினியில் தமிழைப் பயன்படுத்துதல் குறித்த பன்னாட்டு மாநாடு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து யுனிகோட் கண்சோர்டியத்தில் தமிழகமும் ஒரு முழுமையான உறுப்பினராக இணைந்தது; தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது; சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செய்றகைக்கோள் தரை நிலையங்கள் அமைத்திட இந்திய மென்பொருள்

தொழில்நுட்பப் பூங்காவிற்கு (STP I) தமிழ்நாடு அரசு வட்டியில்லாக் கடன்களை வழங்கியது.

எணினிப் (Digital) புரட்சியினால் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மக்களிடையே ஏற்பட்டுள்ள இடைவெளியை இணைத்திடும் பாலமாக "கிராமப்புற இந்தியாவைப் பேணுவதற்கான நுழைவு" (Sustainable Access to Rural India) எனப்படும் சிறந்த திட்டம் அக்கால கட்டத்தில் தொடங்கப் பட்டது; தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது; வழித்தட உரிமைக் கொள்கை (Right of Way Policy) உருவாக்கப்பட்டது; துணிகர முயற்சிக்கான முதலீட்டு நிதி (Venture Capital Fund) நிறுவப்பட்டது; 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய பல பணிகள் அப்பொழுது மேற்கொள்ளப் பட்டன. அந்நாளில் ஆற்றிய பணிகளுக்கெல்லாம் மணிமுடிச் சாதனையாக – முத்தாய்ப்பாகச் சென்னையில் "டைடல் பூங்கா"வும், சிறுசேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவும் அமைக்கப்பட்டன. எனவே 1996 முதல் 2001 வரையிலான காலத்தில் அப்போதைய தமிழக அரசுதான் இன்று தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிக்கு வித்திட்டது எனக் கூறினால் அது மிகையாகாது.

**தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்**

ஐந்தாவது முறையாக நான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெங்களூருக்கு நானே நேரடியாகச் சென்று அங்குள்ள பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைப் பார்வையிட்டேன்; வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழில் நிறுவனங்களின் தலைவர்களுடன் விரிவாக விவாதித்தேன். அதன்மூலம் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மென்பொருள் ஏற்றுமதி தமிழகம் முன்னிலை பெற்றிருப்பதை அறிந்து பெருமிதம் கொண்டேன்.

2006–2007 நிதியாண்டில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட மென்பொருள் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 20 ஆயிரம் கோடிக்கு அதிகம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் உவகை அடைகிறேன்.

"இன்போஷிஸ்", "டி.சி.எஸ்", "விப்ரோ", "காக்னி சண்ட்", "சத்யம்", "எச்.சி.எல்" ஆகிய நிறுவனங்கள் பெரிய அளவிலான தகவல் தொழில்நுட்ப வளாகங்களைத் தமிழகத்தில் அமைக்கின்றன. ஐ.பி.எம். நிறுவனம் சென்னையில் அதன் உலக விநியோக மையத்தை ஏற்படுத்த இருப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது.

**தமிழகம் தலைமை ஏற்கும்**

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுக்கான சிறப்புத் தொழில் மையங்கள் பல நிறுவனங்கள் தமிழகத்தில் அமைக்கப்படுகின்றன. இவை தவிர, 61 மில்லியன் சதுரஅடிப் பரப்பில் தமிழகத்தில் தகவல் தொழில்



நுட்பத் தொழில் பிரிவுகள் உருவாக்கப்படுவதற்குத் தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை காரணமாகத் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் தொழில்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள், வரும் சில ஆண்டுகளில் மேலும் பெருகிப் புகழ் சேர்க்கும், உங்கள் அனைவரின் அயராது ஒத்துழைப்புகளின் பயனாக இத்துறையில் தமிழகம் உலகில் தலைமை ஏற்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் அய்யமில்லை.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் பயன்கள் சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் மட்டுமே அமைதல் கூடாது என நான் உணர்ந்துள்ளேன். மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் பரவுதல் வேண்டும். எனவே கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லை ஆகிய நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான தொழில் மையங்களை அரசு நிறுவுகிறது. இந்த இடங்கள் அனைத்திலும் உள்ள மனிதவளங்களும், போக்குவரத்து இணைப்பு வசதிகளும், எந்த வகையிலும் சென்னைக்குக் குறைந்தவை அல்ல என்பதை நீங்கள் காணமுடியும். உண்மையில் இந்த இடங்களைத் தேர்வு செய்வதன்மூலம் கிடைக்கும் பயன்கள் கணிசமானவையாகும். அரசு இந்த இடங்கள் அனைத்திலும் உரிய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இந்த முனைப்பான முயற்சிகளுக்கு உங்கள் அனைவரது ஆதரவையும் கோருகிறேன்.

**தொழில் முனைவோரின் ஆர்வம்**

மின்னணு வன்பொருள் உற்பத்தியில் உலக நாடுகளின் இணைப்பு மையமாகத் தமிழகம் எழுச்சி பெற்று வருகிறது.

உலகின் மிகப் பெரிய வன்பொருள் உற்பத்தியாளர்களில் மோட்டோரோலா, நோக்கியா, பிளெக்ஸ்ரானிக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், சான்மினா ஆகிய நிறுவனத்தினர் தமிழகத்தில் தங்கள் தொழிற்சாலைகளை அமைத்து வருகின்றனர். இப்பிரிவில் மேலும் பல தொழில் முனைவோர் தங்கள் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்கிட ஆர்வம் கொண்டு தமிழக அரசுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர். அவர்களும் தங்கள் தொழில் திட்டங்களை விரைவில் அறிவிப்பார்கள்.

வன்பொருள், மென்பொருள் ஆகிய இரண்டின் உற்பத்திகளில் இந்தியாவின் மற்ற எந்த ஒரு மாநிலமும் இணையாக முடியாத அளவுக்குத் தமிழகம் சிறந்து விளங்குகிறது. இந்தச் சிறப்பான சாதனையை நிலைநிறுத்துவதற்காகவும், தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறையில் மேலும் முன்னேற்றம் அடைந்திட வேண்டும் என்பதற்காகவும் ஆலோசனைகளைப் பெறுவதற்காக உங்கள் அனைவரையும் இன்று அழைத்துள்ளோம். இது தொடர்பாக எங்கள் அரசு தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களுடைய கருத்துரைகளை வழங்கிட வேண்டுகிறேன்.

தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறைக் கொள்கைகளை வகுப்பதில் உங்கள் கருத்துரைகள் மதிப்பு வாய்ந்தவையாக அமையும். நாம் அனைவரும் இணைந்து தகவல் தொழில்நுட்பத் தொழில்துறையில் தமிழகத்தை உலகின் தலைமையகமாக உருவாக்கிடுவோம். தமிழக மக்கள் மகிழ அவர்கள் வாழ்வில் வளம் குவிப்போம்!

இக்கூட்டத்தில் பங்கேற்றவர்கள் விவரம் வருமாறு:

மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் – திரு. ஆ. இராசா, துணைத் தலைவர்,

உறுப்பினர்கள்:– கோபால் சீனிவாசன் (சி.ஐ.ஐ), டாக்டர் எம்.அனந்த கிருஷ்ணன் (மிட்ஸ்), என்.மகாலிங்கம் (டி.சி.எஸ்), டாக்டர் அனந்த் (ஐ.ஐ.டி), லஷ்மிநாராயணன் (சி.டி.எஸ்), டாக்டர் டி.விஸ்வநாதன் (அண்ணா பல்கலைக்கழகம்), ரஞ்சித் நரசிம்மன் (எச்.சி.எல்), லஷ்மண படிகா (விப்ரோ), அருண் (ஸ்பெல்), அருண் ஜெயின்(போலாரிஸ்), எச்.ஆர்.பினோத் (இன்போஸிஸ்), டாக்டர் டி.சுப்பு சுப்ரமணியம் (சத்யம்), அசோக் பக்தவச்சலம் (கேஜி குழு), ஏ.குருராஜ் (பிளக்ஸ்ட்ரானிக்ஸ்), பிரமோத் ஜெயின்(டெல்), பிரேமநாதன் (சி.ஐ.ஐ, திருச்சி), புருஷோத்தமன்(நாஸ்காம்), ஸ்ரீராம் ஐயர் (சி.ஐ.ஐ., சென்னை), சபியாசச்சி பத்ரா (நோக்கியா),

அலுவலர்கள்:– தலைமைச் செயலாளர், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை கூடுதல் செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர், தொழில்துறை, செயலாளர், நிதித்துறை செயலாளர், தமிழ்நாடு மின்னணு நிறுவனமேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தேசிய தகவல் மைய துணை இயக்குநர், தொழில் வழிகாட்டி நிறுவன இயக்குநர், மின் ஆளுமை இயக்குநர், இந்திய மென்பொருள் பூங்கா இயக்குநர் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.




# நோய் நொடிகளின்றி தூய்மையாக வாழ, போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருக்க புதிய புதிய நகரங்கள் அமைந்தாக வேண்டும்

அகில இந்திய கட்டுனர் வல்லுனர் சங்கம் (தென்னக மையம்) சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் 26.8.2007 அன்று நடைபெற்ற கட்டுனர் தின வெள்ளி விழா, கட்டுமானத் தொழிலாளர்களைச் சிறப்பிக்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

**அ**கில இந்திய கட்டுனர் வல்லுநர் சங்கத்தின், தென்னக மையத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்துரைக்க வந்துள்ளேன். இந்தச் சங்கத்தின் விழாக்களுக்கு நான் வருவது என்பது புதிதல்ல, ஏற்கெனவே அவர்களின் அழைப்பையேற்று, ஒரு பெரிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வைத்த கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும், சிலவற்றை நிறைவேற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதிலே மிகுந்த பெருமை அடைகிறேன்.





இன்று நடைபெறுகின்ற இந்த விழா மிகுந்த சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் "சிமெண்ட்டோடும்" நடைபெற்றால் இன்னும் உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்து விட்டுத்தான், விரைவில் "சிமெண்ட்" பற்றிய சங்கடம் தீரும் என்ற நம்பிக்கையை உங்களுக்குத் தருவதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். அதற்கான முயற்சிகளில் நம்முடைய அரசின் செயலாளர்கள், அதிகாரிகள் நான் காட்டுகின்ற வேகத்தைக் காட்டி, விரைவில் அதனைச் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. அந்த நம்பிக்கையோடு நீங்கள் இருக்கலாம் என்பதை நான் இந்த விழாவினுடைய தொடக்கக் கட்டத்திலேயே குறிப்பிடுகிறேன். உங்களுடைய முயற்சிகள் வென்றிடும், உங்களின் எண்ணங்கள் நிறைவேறிடும், நீங்கள் வைக்க நினைக்கின்ற கோரிக்கைகள் முதற்கட்டத்திலே நிறைவேறியது என்று சொல்லா விட்டாலும், சற்று ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு நிறைவேறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சங்கத்தினுடைய பெயரே "அகில இந்திய கட்டுனர் வல்லுநர் சங்கம்" என்றாலும், கட்டுமானத் தொழிலாளர்கள் எல்லாம் இந்தச் சங்கத்துடன் இணைந்து பணியாற்றுபவர்களாவர். இதிலே உள்ள சொற்களின் இணைப்பு இருக்கிறதே, அது எவ்வளவு அருமையான அழகான உணர்ச்சியுள்ள இணைப்பு என்பதை நான் உங்களுக்குப் புரிய வைக்க விரும்புகிறேன்.

**கட்டுமானத் தொழிலாளர்களிடத்திலே பற்றும் பாசமும் உண்டு**

கட்டுமானம் என்பதை இரண்டாகப் பிரித்தால் – முதலில் உங்களிடத்திலே "கட்டுப்பாடு" வேண்டும், அதற்குத்தான் "கட்டு". கட்டும் வேண்டும், மானமும் போற்றப்பட வேண்டும். இரண்டையும் போற்று கின்றவர்கள் நீங்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். கட்டும் மானமும் இருந்தால்தான், மானத்தைக் காப்பாற்றுகின்ற அந்தக் கட்டுப்பாட்டு உணர்வு இருந்தால்தான், சிறப்படைய முடியும். இந்தக் கட்டுமானத் தொழிலாளர்கள் இணைந்த, கட்டுனர் வல்லுநர் சங்கத்தின் தென்னக மையத்தைப் பொறுத்தவரையில் நான் நீண்ட நாட்களாக இதனுடைய தலைவர், நிருவாகிகள் அனைவரையும் நன்றாக அறிவேன். அவர்களைக் காணமுடியாத நேரத்தில், அவர்களையெல்லாம் கண்டதைப் போன்ற வாய்ப்பை எனக்கு தம்பி துரைமுருகன் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பார். அவர்களுக்கு தேதி தருவதிலே கூட அவர் காட்டிய ஆர்வம் சாதாரணமானதல்ல. இந்தத் தேதியைத் தருவதற்கு எனக்குள்ள சங்கடங்கள், தம்பி துரைமுருகனுக்குத் தெரியும் என்றாலுங்கூட, இந்தத் தேதியை அவர் என்னுடைய நாட்குறிப்பிலே இருந்து பிய்த்தெடுத்து அவர்களிடம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், தம்பி துரைமுருகனின் பொதுப்பணித் துறைக்கும், இந்தக் கட்டுமானத் துறைக்கும் உள்ள தொடர்பு உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், நானும் ஒரு காலத்திலே பொதுப்பணித் துறையின் அமைச்சராக இருந்தவன் என்ற முறையில், அந்தப் பற்றும்

பாசமும் கட்டுமானத் தொழிலாளர்களிடத்திலே, கட்டுனர் வல்லுநர்களிடத்திலே எனக்கு என்றைக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய பல கோரிக்கைகளை முன்பு பிரதமராக இருந்த தேவகவுடா அவர்களோடு உங்கள் மாநாடு ஒன்றிலே நான் கலந்து கொண்ட போது வைத்தீர்கள். அப்போது மொத்தம் 11 கோரிக்கைகளை வைத்தீர்கள். அதிலே மாநில அரசுக்கு சம்பந்தப்பட்ட மூன்று கோரிக்கைகளையும் அதே இடத்தில் நிறைவேற்றியதாக எனக்கு நினைவு. மீதமுள்ள எட்டு கோரிக்கைகளை தேவகவுடா அவர்கள் பிரதமர் என்ற முறையில் நிறைவேற்றுவார் என்று நான் அப்போது கூறினேன். அவர் நிறைவேற்றினாரா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது.

இப்போது இங்கே வீற்றிருப்பவர்கள், இந்த விழாவிலே கலந்து கொண்டிருப்பவர்கள் எல்லாம் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பேசி அதற்காகப் பெருந்தொகை செலவிட்டு ஆட்களை வைத்து, தொழிலாளர்களை வைத்து அந்தப் பணியை நிறைவேற்றுகின்றவர்களின் எண்ணிக்கையா என்றால் இல்லை. அந்தப் பணியை நிறைவேற்றுகின்ற பாட்டாளிகள், தொழிலாளர்கள் அத்தனை பேரும் உங்களோடு இருக்கின்ற காரணத்தால் தான் இந்த அரங்கம் நிரம்புகின்ற அளவிற்கு அவர்கள் இங்கே கூடியிருக்கின்ற காட்சியினை என்னால் காண முடிகிறது.

**கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் உதவி**

ஆகவே கட்டுமானத்தில் ஈடுபட்டிருக்கின்ற பத்துபேர், நூறுபேர் என்று நான் அலட்சியப்படுத்த முடியாமல் ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில் உங்களைச் சார்ந்தவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள் என்பதும், அந்த வாரியத்தினை இன்றைய அரசு மிக நேர்த்தியாக நடத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், 13–5–2006 அன்று இந்த ஆட்சி என் தலைமையில் ஐந்தாவது முறையாக அமைந்தது. அமைந்தது முதல் 24–8–2007 வரையில் உள்ள கணக்கைப் பார்த்தால், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 13–5–2006 முதல் 24–8–2007 வரையில் 4 இலட்சத்து 40 ஆயிரத்து 335 தொழிலாளர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த விழாவிலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கட்டுமானப் பணிகளின்போது ஏற்பட்ட விபத்துகள் என்பது இயல்பானது – அந்த விபத்துக்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல்தான் வீடு கட்டவோ, மாளிகை கட்டவோ, கோபுரங்கள் கட்டவோ, கோட்டைகள் கட்டவோ நீங்கள் துணிந்து வருகிறீர்கள். அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற உங்களுக்கு விபத்துக்களின் காரணமாக ஏற்பட்ட மரணங்களில், பாதிக்கப்பட்டு மரணம் அடைந்த 86 தொழிலாளர் குடும்பங்களுக்கு 13–5–2006 முதல் 24–8–2007 வரையில் இந்த பதினைந்து மாதக் காலத்தில் 87 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் உதவி கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் வழங்கப் பட்டிருக்கின்றது.

காயம் அடைந்த 18 தொழிலாளர்களுக்கு 7 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் உதவி வழங்கப் பட்டுள்ளது.

இயற்கை மரணங்கள் எய்திய 5,527 கட்டுமானத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 8 கோடியே 96 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் உதவி நிதியாக வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த வாரியங்களினால் என்ன பயன் என்று கேட்பவர்களுக்கு நான் பயன்களை இந்தப் பதிலின் மூலமாகத்தான் தெரிவிக்க விரும்புகிறேன்.

9,510 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் மகன், மகள் திருமணச் செலவிற்கு வழங்கப்பட்ட உதவித்தொகை மாத்திரம் 1 கோடியே 90 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்.

அதையன்னியில் உங்கள் சங்கத் தலைவர்கள் போன்றவர்கள் இன்னும் எவ்வளவோ உதவிகளை வழங்கியிருப்பார்கள். அதையெல்லாம் நான் இந்தக் கணக்கிலே கொண்டுவரவில்லை.

1,144 கர்ப்பிணிப் பெண்களின் பேறுகாலச் செலவிற்காக 50 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் இந்த வாரியத்தின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

41,680 கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்புச் செலவிற்காக வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை 6 கோடியே 32 இலட்சத்து 47 ஆயிரத்து 643 ரூபாய் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1,321 தொழிலாளர்களுக்கு – கண்ணாடி வாங்க வழங்கப்பட்ட உதவித் தொகை 6 இலட்சத்து 26 ஆயிரத்து 239 ரூபாய்.

1,239 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஒய்வூதியம் மற்றும் ஒய்வூதிய நிலுவைத் தொகை 1கோடியே 13 இலட்சத்து 9 ஆயிரத்து 139 ரூபாய்.

மொத்தம் 60 ஆயிரத்து 525 கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் பல்வேறுநலத்திட்டங்களின் கீழ் இந்த 15 மாதக் காலத்தில் இந்த அரசின் சார்பாக வாரியத்தின் சார்பாக வழங்கப்பட்ட உதவி நிதி 18 கோடியே 90 இலட்சத்து 5 ஆயிரத்து 21 ரூபாய் என்பதை நான் பெருமிதத்தோடு, பெருமையோடு, பேரானந்தத்தோடு அவர்களுக்கு உதவுகிறோம் என்ற மன ஆறுதலோடு உங்களிடத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள் முன்பிருந்த அரசிலே வழங்கப்படவில்லையா ? நான் முன்பிருந்த அரசையும், இப்போதுள்ள அரசையும் ஒப்பிட்டுக்காட்ட விரும்பவில்லை. ஆனால் கட்டிடத் தொழிலாளர்களுக்கு – கட்டிடத் தொழிலாளர் நலவாரியத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு – இந்த உவமை புரியும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

கடந்த கால அரசை உதாரணம் காட்டலாமா என்றால், ஒரு கட்டிடத்தைக் கட்டும்போது, இதை ஏன் புதிதாகக் கட்டுகிறீர்கள் என்று கேட்டால், பழைய கட்டிடம் இப்படி இருந்தது, அதனால் பழைய கட்டிடத்தைச் சீர்செய்து, இந்தப் புதிய கட்டிடத்தை எழுப்புகிறோம் என்று சொல்வதைப் போலத்தான் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் நலத் திட்ட உதவிகள் வழங்கிய ஒப்பீடு என்று பார்த்தால், 2001 முதல் 2006 வரை ஐந்தாண்டு கால ஆட்சியில் – ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் – அ.தி.மு.க. ஆட்சியில் 66 ஆயிரத்து 323 பேருக்கு, 22 கோடியே 94 இலட்சத்து 33 ஆயிரத்து 224 ரூபாய் வாரியத்தின் சார்பாக நிதி உதவி செய்யப்பட்டது. ஆனால் கடந்த 15 மாத தி.மு.கழக ஆட்சியில் – 60 ஆயிரத்து 525 பேருக்கு, 18 கோடியே 90 இலட்சத்து 5 ஆயிரத்து 21 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடத்தையும் பாருங்கள், புதிதாக எழுப்பப்பட்டுள்ள இந்தக் கட்டிடத்தையும் பாருங்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். புதிய கட்டிடத்தைப் பற்றிப் பேச வேண்டுமா வேண்டாமா என்பதை நீங்களே சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றும் உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கே பேசும்போது, ஒரு கட்டுனர் வல்லுநர் சங்கத்தின் விழாவாகக் கருதாமல், ஏதோ இலக்கிய விழா போல, ஒரு தமிழ்ச் சங்க விழா போல எனக்கு நடைபெறுகின்ற பாராட்டு விழா போல – எனக்கு ஏதோ பட்டமோ, விருதோ கொடுத்து இந்த விருதுக்கு இவன் தகுதியானவன்தானா என்பதற்காக அளிக்கின்ற சான்றுகளை அளிக்கின்ற விழா போல கருதிக் கொண்டு பேசினார். இவ்வளவும் வழங்கிவிட்டு, கோரிக்கை இல்லையென்று கருதாதே என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அதை பயமுறுத்தலாக நான் எடுத்துக் கொள்ளவில்லை, அச்சுறுத்தலாக எடுத்துக் கொள்ளவில்லை. கோரிக்கை வைப்பதால் நான் கோபப்படுகிறவனும் அல்ல, கோரிக்கை வைக்காவிட்டால்தான் வருத்தமாக இருக்கும். என்ன இவர்களுக்கு என் மீது ஏதோ காழ்ப்பு போல் இருக்கிறது, நம்பிக்கை இல்லை போல் இருக்கிறது, அதனால்தான் கோரிக்கை வைக்காமல் விட்டு விட்டார்கள் போலும் என்று நான் என்னைப் பற்றியே சந்தேகப்படுவேன். ஆனால் என்ன கோரிக்கை வைக்கப் போகிறார்கள் என்பதை தம்பி துரைமுருகன் என்னிடத்திலே சொன்னார்.

**மன்னன் கரிகாலன் பெயரில் விருது**

இங்கே நம்முடைய தொகுப்பாளர், நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் சொல்லும்போது, கட்டிடம் சம்மந்தப்பட்ட விழா என்பதால், இந்த மேடையையே ஒரு கட்டிடமாக ஆக்கிக் கொண்டு, வாசற்படி, முற்றம், அறை பிறகு நாம் போகத் தேவையில்லாத பள்ளியறை என்றெல்லாம் அவர் குறிப்பிட்டு, இன்னின்ன அறையிலே இன்னின்னது நடக்கும் என்று சொன்னார்கள். அதைப்போல என்ன கோரிக்கை என்பதை ரகசியமாக தம்பி துரைமுருகனும், ராதாகிருஷ்ணனும் பள்ளி அறையிலேதான் பேசியிருப்பார்கள் போல் இருக்கிறது. ஆண்டுதோறும் இவர்கள் இந்த அமைப்பின் சார்பாக கட்டிடக்கலை வித்தகர்களுக்கு, அதிலே சிறப்பு எய்தியவர்களுக்கு, வல்லுநர்களாக இருப்பவர்களுக்கு, புகழ் பெறுகிறவர்களுக்கு, பாராட்டப்பட வேண்டியவர்களுக்கு ஒரு பாராட்டு விருது வழங்க வேண்டும், அந்த விருதுக்குப் பெயர் – எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு கல்லணை கட்டினானே, அந்தத் தமிழ் விஞ்ஞானி, அந்தப் பொறியாளன், மன்னன் ''கரிகாலன் விருது'' என்று அதற்குப் பெயர் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, அதற்கு ஒரு காரணமும் சொன்னார்கள்.

''முதன்முதல் கருணாநிதி தன்னுடைய பெயருக்கு சிறப்புப் பெயர், புனைப் பெயராக வைத்துக்கொண்டது, ''கரிகாலன்'' என்றுதான் வைத்துக் கொண்டார், அதனால் இதற்கும் ''கரிகாலன்'' என்றே விருதுக்குப் பெயர் இருக்க வேண்டும் '' என்று கேட்டார்கள், பரவாயில்லை, நான் கரிகாலன் என்ற புனைப் பெயரில்




பல நேரங்களில் பல கட்டுரைகளை, கவிதைகளை எழுதியிருந்தாலுங்கூட இன்றைக்கு தென்னக மையத்தின் கட்டுனர் வல்லுநர் சங்கத்திற்காக கரிகாலனை உங்களுக்கு தத்தம் செய்கிறேன் என்று குறிப்பிட்டு, அந்தப் பெயரிலே அந்த விருதுகள் வழங்கப்படலாம், அதற்கான உதவிகள், அதற்கான ஆதரவுகள், அரசின் சார்பில் எப்படி உங்களுக்கு வழங்க வேண்டுமோ, அவைகளை வழங்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் எடுத்துக் கூறிக் கொள்கிறேன்.

கட்டிடங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்ற புகழ், பெருமை, சிக்கல், நெருக்கடி இவைகள் மாறி மாறி தமிழகத்திலே மாத்திரமல்ல, நாட்டின் பல பகுதிகளிலே இருப்பதை நாம் காணுகிறோம். ஒரு நல்ல நகரத்தை உருவாக்கவேண்டுமென்று எண்ணினால், அதற்கு எவ்வளவு இடைஞ்சல்கள் வருவதை நீங்கள் காணுகிறீர்கள்.

**சென்னை பெரிய அளவிலே அமையவேண்டும்**

சென்னையையே நீங்கள் வானத்திலேயிருந்து பார்த்தால், புதிதாக வளர்ந்த சென்னை எப்படிப்பட்ட அமைப்பு ரீதியாக இருக்கிறது என்பதும், பழைய சென்னை, வடசென்னை போன்ற பகுதிகள் எந்த அமைப்பிலே இருக்கிறது என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ்வளவு தூரம் போகத் தேவையில்லை. சென்னைக்கும் புதுச்சேரிக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தாலே, பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்கள் வந்த பிறகு, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்ட புதிய பட்டணம். அப்படி புதிதாக அமைக்கப்பட்ட காரணத்தால், நீங்கள் பாண்டிச்சேரியிலே எந்தத் தெருவிலே நடந்தாலும், ஓடினாலும், வாகனங்களிலே சென்றாலும், இந்தக் கோடியிலே இருந்து அந்தக் கோடி தெரிகின்ற வரையிலே ஒரு திருப்பத்தைக் காண முடியாது, நெடுஞ்சாலைகளைத் தான் காண முடியும். அவ்வளவு அழகான வடிவமைப்பு – பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரியிலேயே காண முடிகிறது. ஆனால் சென்னையிலே காண முடியாததற்குக் காரணம், இங்கே அவ்வப்போது வந்து குடியேறிய மக்கள், அவர்கள் இஷ்டத்திற்கு அங்கங்கே குடியேறிய காரணத்தால், அவர்கள் அங்கெங்கே வாழ நேரிட்டது. அதற்கு ஏற்றாற்போல் நகர அமைப்பையும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் தான் நகர அமைப்பை நல்ல முறையிலே மாற்றி இதை ஒழுங்குபடுத்த வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும் என்று நாம் கருதுகிற நேரத்தில் அதற்கு எத்தனையோ இடையூறுகள். அந்த இடையூறுகள் வேண்டுமென்றே வருகின்ற இடையூறுகள் அல்ல. இருக்கின்றவர்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகள் – அந்த இடையூறுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் அரசாங்கத்தை நெருக்கடிக்கு

ஆளாக்குகிறார்கள். புதிதாக எதுவும் உருவாவதற்கு முடியாத ஒரு சூழ்நிலையிலே அவர்களும் புலம்பித் தவிக்கிறார்கள். அந்த ஏழைகளின் கஷ்டத்திற்கும் நாம் எழுப்ப வேண்டிய புதிய நகரத்தின் ஆவலுக்கும் இடையிலே இருக்கின்ற பரிணாமத்தை எண்ணிப் பார்த்து அவர்களும் ஒரு புதிய நகரம் வர வேண்டும் என்று எண்ணுவது – புதிய நகரம் வர வேண்டும் என்பதற்காக அல்ல, சென்னையிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசல் குறைவதற்காகவாவது நம்முடைய சென்னை மாநகரம் இன்னும் பெரிய அளவிலே பரப்பளவு கொண்டதாக அமைய வேண்டும்.

சென்னை மாநகரத்திலே மாலையிலே நான் அண்ணா நகரிலிருந்து வீராசாமியை வரச்சொல்லி தொலைபேசியிலே அழைத்தால், அவர் புறப்பட்டு என் வீட்டுக்கு வந்து சேருகிற வரையில் நான்கு முறை நான் போன் செய்து எங்கே வருகிறீர்கள் என்று கேட்க வேண்டும். அந்த அளவிற்கு போக்குவரத்து நெரிசல் இப்போது இருக்க என்ன காரணம்? நகரம் சிறிதாக இருக்கிறது. மக்களின் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. நாம் சொன்னதை மக்கள் கேட்கவில்லை. இப்போது மக்கள் சொல்வதை நம்மால் கேட்க முடியவில்லை. அப்போது குடும்பக் கட்டுப்பாடு எல்லாம் சொன்னோம். சிகப்பு முக்கோணம் எல்லாம் போட்டுக் காட்டினோம். அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்றெல்லாம் சொன்னோம். வளமோடு பெற்று அளவோடு வாழ்கிறார்கள் தலைகீழாக மாறிவிட்டது. அதுதான் இன்றைக்கு நிலைமை. ஆகவே வளமோடு நாம் வாழ வேண்டுமேயானால், அளவுக்கு மீறிப் பெற்றவர்களை ஒரு நிலைப்படுத்தி அவர்களும் சேர்ந்து வாழ, நகரங்களை அகலமாக ஆக்க வேண்டும். நகரங்களை பரவலாக ஆக்க வேண்டும். நகரங்கள் இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும், விரிவுபடுத்தப்பட வேண்டும். அப்படி விரிவுபடுத்தப்படும் போது – இதை நாம் சொல்லும்போது இவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும், இவர் சொல்வதைப் போல நடந்தால் இன்னும் அதிக கட்டிடங்கள் வரும், நமக்கும் தொழில் கிடைக்கும் என்று நம்முடைய ராதாகிருஷ்ணன் போன்றவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை, அவர்களுடைய மகிழ்ச்சி மாத்திரமல்ல, போக்குவரத்திலே இருக்கிற நெருக்கடி குறைந்தால் எத்தனையோ நன்மைகள். நான் சொல்லுகிறேன், நோய் நொடி கூடக் குறையும். போக்குவரத்திலே ஏற்படுகின்ற புழுக்கத்தால் நெருக்கத்தால் அதனால் ஏற்படுகின்ற தொத்து வியாதிகள், காய்ச்சல் போன்ற பல்வேறு விதமான பயங்கர வியாதிகள் எல்லாம்கூட வராது.

**“வளமோடு நாம் வாழ வேண்டுமேயானால், அளவுக்கு மீறிப் பெற்றவர்களை ஒரு நிலைப்படுத்தி அவர்களும் சேர்ந்து வாழ, நகரங்களை அகலமாக ஆக்க வேண்டும். நகரங்களை பரவலாக ஆக்க வேண்டும். நகரங்கள் இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும், விரிவுபடுத்தப்பட வேண்டும்”.**

அப்படி நோய்நொடியின்றி தூய்மையாக வாழவும் இந்தப் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருந்தால்தான் முடியும். அது இல்லாமல் இருப்பதற்கு புதிய புதிய நகரங்கள் அமைந்தாக வேண்டும். நம்முடைய நகரங்கள் விரிவுப்படுத்தப்பட வேண்டும். அப்படி விரிவுப்படுத்தப்படுவதற்கு இந்தத் துறையிலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அவர்கள் கட்டுனர் வல்லுநர்களாக இருந்தாலும் சரி, அந்தக் கட்டிடத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டும், அவர்களுக்கு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இந்த இனிய விழா எல்லோருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும், எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும், போக்குவரத்து நெரிசலும் வாழ்வாதாரத்திலே ஏற்படக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பது எப்படி என்ற அந்தப் பாடத்தை நாம் கற்றாக வேண்டும் என்பதை எடுத்துக் கூறி, இந்த இனிய விழாவிலே என்னை நல்ல வார்த்தைகள் பல கூறி பாராட்டிய நம்முடைய ராதாகிருஷ்ணன் மற்றும் அவர்களுடைய அமைப்பைச் சேர்ந்த வல்லுநர் சங்கத்தைச்சேர்ந்த அருமை நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த விழாவிலே நானும், தம்பிகள் துரைமுருகனும், பரிதி இளம்வழுதியும் கலந்து கொண்டு உங்களை யெல்லாம் சந்திக்கின்ற ஒரு அருமையான வாய்ப்பு கிடைத்தமைக்காக என் சார்பிலும் அரசு சார்பிலும் உங்களுக்கு நன்றி கூறி, உங்களுடைய தேவைகளை, கோரிக்கைகளை தேவைப்படும் போதெல்லாம் சொல்லுங்கள், முடிந்த வரையில் அவைகளை நிறைவேற்றித் தருகிறோம் என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்.

* * *

# மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் உயர்கல்வி நிறுவனங்களைத் திறக்க வேண்டும்





மாண்புமிகு
**இந்தியப் பிரதமர்**
அவர்களுக்கு
மாண்புமிகு
**தமிழ்நாடு முதலமைச்சர்**
அவர்கள் கடிதம்

**மா**ண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18.8.2007 அன்று எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது :–

60ஆவது ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி டெல்லி செங்கோட்டை கொத்தளத்திலிருந்து நாட்டுக்கு நீங்கள் நிகழ்த்திய உரையை, நான் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு, கல்வி, மருத்துவம், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளில் பொது செலவினம் குறித்து தாங்கள் வலியுறுத்தலைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

வேளாண் துறைக்கு 25,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும் தங்களது முடிவுக்காக உங்களை மனதாரப் பாராட்டுகிறேன். இது தற்போது மிகவும் தேவைப்படுவதாகும். இந்தத் துறைகள் எனது இதயத்திற்கும் மிக நெருக்கமானவை ஆகும். "இந்தியாவை நாம் கல்வி அறிவு பெற்றவர்கள், திறமை படைத்தவர்கள், படைப்பாற்றல் திறன் கொண்டவர்கள் கொண்ட தேசமாக மாற்றுவோம்'' என்று நீங்கள் கூறியதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

**பொருத்தமான அறிவிப்பு**

எப்போதுமே தமிழ்நாடு கல்விக்கு அதிலும் குறிப்பாக தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்விக்கு மிகவும் அழுத்தம் கொடுத்து வந்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள். தற்போதைய தேவை நாட்டை பொருளாதாரத் துறையில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய சர்வதேசத் தரத்துடன் தகுதிவாய்ந்த பொறியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் நிருவாகிகளைப் பெரும் எண்ணிக் கையில் உருவாக்குவதாகும். இந்தப் பின்னணியில் புதிய இந்திய நிருவாகவியல் கழகங்கள், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய தகவல் தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல், கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகங்கள் ஆகியவற்றை அமைக்க உங்களது அறிவிப்பு மிகவும் பொருத்தமானது, சரியான தருணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் ஆகியவை மக்களுக்கு கிடைத்திட மாநில அரசு இடையறாத முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட திறமையான மனித ஆற்றல் இருப்பதால் தமிழகம் தொழில் மற்றும் வர்த்த கத்தில் பெருமளவிலான முதலீடுகளைக் கவர முடிந்துள்ளது.

இந்த முயற்சிகள் தொடரவும், மேலும் வலுப்பெறவும், மதுரையில் இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி) ஒன்றையும், திருச்சியில் இந்திய அறிவியல், கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (ஐஐஎஸ்இஆர்) ஒன்றையும், கோவையில் இந்திய நிருவாகவியல் கழகம் (ஐஐஎம்) ஒன்றையும் திறக்க தங்களது தலையீட்டை வேண்டுகிறேன்.

அத்துடன் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் சேரும் மாவட்டங்களில் கல்லூரிகளை அமைக்கவும், ஒவ்வொரு வட்டாரத்திலும் புதிய உயர்தரப் பள்ளிகளையும், உகந்த எண்ணிக்கையில் தொழிற்பயிற்சி நிறுவனங்களை (ஐடிஐ), பாலிடெக்னிக்குகள், தொழிற் கல்விப் பள்ளிகள் மற்றும் திறன் வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றை அமைத்து மாநிலத்திலுள்ள பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி கிடைப்பதை உறுதி செய்யவும் தங்களது அறிவிப்பையும் நாங்கள் வரவேற்போம்.

மேலே கோரியவாறு தமிழ்நாட்டில் புதிய ஐஐடி, ஐஐஎம் மற்றும் ஐஐஎஸ்இஆர் ஆகியவை அமைக்கப்பட நீங்கள் சாதகமாக முடிவை எடுப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது, தமிழ்நாடு பெருமளவிலான இளைஞர்களுக்கு தரமான உயர்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வழங்க தமிழகத்தின் கனவை நனவாக்கி, அதன்மூலம் மனிதவள ஆற்றல் வளர்ச்சியை வேகப்படுத்தி தொழில் மயமாக்குதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் வேகத்தைத் தொடர்ந்து தக்க வைக்கவும் உதவும்.

## சமச்சீர் கல்வித் திட்டப் பரிந்துரைகளை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை

தமிழகத்தில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை அனைத்து மாணவர்களும் ஒரே தரத்திலான கல்வி பயில, சமச்சீர் கல்வித் திட்டப் பரிந்துரைகளை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையில் தற்பொழுது மாநில வாரிய கல்வி முறை, மெட்ரிகுலேஷன் கல்வி முறை, ஆங்கிலோ இந்தியன் கல்வி முறை, ஓரியண்டல் கல்வி முறை என்று நான்கு விதமான கல்வி முறைகள் உள்ளன. இத்தகைய கல்வி முறைகளால் மாணவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான ஒரே தரத்திலான கல்வித் கற்க இயலாத நிலை உள்ளது. இக்குறைபாட்டைக் களைந்திட திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேயே தமிழகத்தில் சமச்சீரான கல்வி அனைவருக்கும் கிடைத்திட ஆவன செய்யப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தி.மு.க. அரசு அமைந்தவுடன் சமச்சீர் கல்வித் திட்டம் கொள்கை முடிவாக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின் படி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ச.முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் 9 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு விரிவான ஆய்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 4.7.2007 அன்று அளிக்கப்பட்டது. வரும் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் இவ்வறிக்கை சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்குழுவின் பரிந்துரைகளை மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன் மற்றும் கல்வித்துறை உயர் அலுவலர்கள் சார்ந்த குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது பற்றிய சிறப்பம்சங்கள் குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாகத் தமிழகத்தில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களும் ஒரே விதமான, ஒரே தரத்திலான கல்வி முறையில் பயில்வதற்கேற்ப சமச்சீர் கல்வித் திட்டப் பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று ஆய்வு செய்ய அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநர் திரு.எம்.வி.விஜயகுமார் அவர்களை நியமித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் டாக்டர் ச.முத்துக்குமரன் குழு அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வழிமுறைகளை வகுத்து மாநிலத் திட்டக்குழு மற்றும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) ஆகியவற்றை கலந்து ஆலோசித்து தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.




# மொழி வளர்ந்தால் மக்கள் வளர்வார்கள்
# மக்கள் வளர்ந்தால் நாடு வளரும்

சென்னையில் 18.8.2007 அன்று நடைபெற்ற
மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத் தொடக்க விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

Before I commence my speech in Tamil on this historic occasion, as a matter of brief introduction, I wish to say a few things.

Parithimar Kalaignar was the first Tamil Scholar, who demanded that Tamil should be declared as a Classical Language.





His commemorative Stamp was released only yesterday by the Union Government at Chennai.

Today we are conducting this Historic Function. This is a rare co-incidence.

I feel proud to say that Tamil is the first language, declared as a Classical Language.

This announcement fulfilled more than a Century-old dream of the Tamils. On behalf of the people of Tamil Nadu, and Tamils living across the World, I convey my gratitude to Hon'ble Prime Minister of India, Dr.Manmohan Singh and the UPA Chair-person, Tmt.Sonia Gandhi, for this spectacular achievement.

Tamils all over the world are equally grateful to Hon'ble Union HRD Minister, Thiru. Arjun singh, for this Central Institute of Classical Tamil at Chennai.

Right from the initial stage, when the Central Institute at Chennai was proposed, the amount of enthusiasm and effort shown by Thiru Arjun Singh Ji in getting the proposal materialised, is really unforgettable. I am personally thankful to him for this landmark achievement.

Tamils and Tamil History will always remember three names in this regard -

Thirumathi Sonia Gandhi,

Dr. Manmohan Singh and

Thiru. Arjun Singh.

### நன்றி உணர்ச்சி

இப்போது நான் செம்மொழிக்கு வருகிறேன். பெரியோர்களே, உலகெங்கும் வாழ்கிற தமிழர்களின் உணர்வார்ந்த வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்தது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய வா.செ. குழந்தைசாமி அவர்கள் குறிப் பிட்டதைப் போல், பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே. நான் அன்றிருந்த வாஜ்பாய் அரசிடம் இந்தக் கோரிக்கையை பலமுறை வைத்து கடிதங்கள் எழுதியும் கூட, கடிதங்கள் சேருகிற இடத்தில் போய்ச் சேர்ந்தனவே தவிர, அதனால் எந்தப் பலனும் கிட்டவில்லை என்பதை இங்கே உரையாற்றிய வர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தப் பலன் கிட்டியது என்கிற பரவசம் பல கண்டங்களில் வாழ்கிற தமிழர்களுடைய உள்ளத்தையெல்லாம் துள்ளாட்டம் போடச் செய்ததை நீங்கள் அறிவீர்கள். நீங்களும் அந்த குதியாட்டத்தில் சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தீர்கள். இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு இன்றைக்கு ஒரு வலுவான அடிப்படை, செம்மொழியாக உயர்வு பெற்ற தமிழ் மொழிக்கு அமைக்கப்படுகிறது. இந்த அடிப்படை ஏன் எதற்காக என்பதையெல்லாம்

விளக்கத் தேவையில்லை, நம்முடைய பெருமதிப்புக்குரிய வா.செ. குழந்தைசாமி அவர்கள் இங்கே விளக்கியிருக்கிறார்கள்.

இதற்காக அரும்பாடுபட்டவர்கள், இந்த முயற்சி பலிக்க வேண்டும் என்பதற்காக என்னோடும், தமிழக அரசோடும் இணைந்து வாதிட்டவர்கள், பரிந்துரை செய்தவர்கள் எல்லாம் இந்த நேரத்தில் நன்றி உணர்ச்சியோடு பாராட்டப்பட வேண்டியவர்கள். வாழ்த்தப்பட வேண்டியவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

### சென்னையில் செம்மொழி மையம்

மைசூரிலே உள்ள மத்திய மொழியியல் நிறுவனத்தின் நோக்கங்கள் செம்மொழி என்கிற அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலே அமைந்தது அல்ல, அதனுடைய நோக்கங்கள் வேறு, அது ஆற்ற வேண்டிய பணிகள் என்று வகுத்துக் கொண்டிருக்கின்ற விவரங்கள் வேறு. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது, அந்த செம்மொழியின் ஆக்கமும் ஊக்கமும் மேலும் மேலும் பெருகிடவும், உலகம் முழுதுமுள்ள தமிழர்களுக்கு அது பயன்படவும், தமிழ் அல்லாதோருக்கும் அது ஒரு கருவியாக அமைந்திடவும் என்னென்ன செய்ய வேண்டும், எப்படி நம்முடைய தமிழுக்கு அந்த ஆக்கத்தை வழங்க வேண்டும் என்பதற்குத்தான், மைசூரிலே இந்த மையத்தைக் கட்டிப்போட்டுப் பயன் இல்லை, இது சென்னையிலேயே இருந்தாக வேண்டும் என்ற ஒரு கருத்தை நம்முடைய மத்திய அமைச்சர், மதிப்பிற்குரிய அர்ஜுன் சிங் அவர்களுக்கு நான் எழுதினேன். பொதுவாக அரசுக்கு எழுதுகிற கடிதங்கள் போய்ச் சேருவதற்கும் தாமதமாகும், பதில் கிடைப்பதற்கும் தாமதமாகும். ஆனால் அரசுக்கு ஒரு பிரஜை எழுதுகிற கடிதத்தின் கதி எதுவாக இருக்கும்? அரசுக்கு பிரஜை எழுதுகிற கடிதமே அதுவானால், அரசுக்கு இன்னொரு அரசு எழுதுகிற கடிதம் என்ன ஆகும் என்ற ஒரு கேள்விக்கான பதிலை நான் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறேன். ஆனால் என்ன ஆகும்? விரைவிலே பதில் கிடைக்கும் என்ற ஒரு பதிலை எனக்குத் தந்த அந்தத் தகுதி வாய்ந்த நண்பர் நம்முடைய அர்ஜுன் சிங் என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு இந்த மையத்தை, மைசூரிலே இருக்கின்ற மையத்தை தமிழகத்திற்குத் தந்தாக வேண்டும், சென்னையே இந்த மையத்தின் தலைநகரமாக இருக்க வேண்டும் என்று கேட்டு நான் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களுக்கு 28.11.2006 அன்று கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் அதே நாளில் அவருக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அவரிடமிருந்து எனக்குப் பதில் உடனடியாகக் கிடைத்தது. நான் அவருக்கு எழுதிய கடிதத்தில்,

"உலகெங்கும் வாழும் தமிழர்களின், தமிழறிஞர்களின் உணர்வார்ந்த வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்தது. எனினும் செம்மொழித் தமிழின் வளர்ச்சி, தமிழ் மொழியில் ஆய்வு மேற்கொள்ளல் முதலிய பணிகள் மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்தின் நோக்கங்கள் செம்மொழி என்னும் கண்ணோட்டத்தில் அமைந்ததல்ல. இந்தியாவின் அனைத்து மொழிகளின் மூலமும் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஒருமைப்பாடு உணர்வு ஆகியவற்றை வளர்த்திடும் நோக்கத்துடன் அந்நிறுவனம் செயல்படுகிறது. எனவே, தமிழ் மொழியின் சிறப்புகளை மேம்படுத்துவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு "மத்திய அரசின் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்" சென்னையில் அமைக்கப்பட வேண்டும்" என்று மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களுக்கு 28.11.2006 அன்று தமிழக அரசின் சார்பாக நான் கடிதம் எழுதினேன்.

என்ன வேடிக்கை பாருங்கள்? அதற்கு 29.11.2006 அன்றே எனக்குப் பதில் கிடைத்தது. தமிழ் செம்மொழி ஆவதில் நான் காட்டிய



ஆர்வத்தைவிட, நான் காட்டிய வேகத்தை விட, நாமே வெட்கப்படக்கூடிய அளவிற்கு அவர் இதிலே வேகம் காட்டினார். புராணத்திலே தான் சொல்வார்கள், அர்ஜுனனின் அம்பு அவ்வளவு வேகத்தில் சென்றது என்று – இந்த அர்ஜுனனின் அம்பு அதைவிட வேகமாக வந்து, என்னுடைய இதயத்தில் காயத்தை ஏற்படுத்தவில்லை, காதலை ஏற்படுத்தியது.

**29.11.2006** அன்று அவர் எழுதிய கடிதத்தில்

"Dear Shri Karunanidhi Ji,

Kindly recall our discussions on your proposal for establishing a separate Central Institute at Chennai exclusively for the cause of classical Tamil language. I have given deep thought to the suggestion and I agree with you that there is need for special focus on the classical languages. Accordingly, I am asking the Ministry to include a suitable proposal for an Institute for classical Tamil in the Ministry's XIth Plan proposals".

With regards,

Yours sincerely,

Sd/-

**(ARJUN SINGH)**

11ஆவது திட்டத்திலேயே இதனைச் சேர்க்கும்படி என்னுடைய அமைச்சகத்திற்குத் தெரிவித்திருக்கிறேன் என்று எழுதிய கடிதம் எனக்குக் கிடைத்தது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினேன்.

இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நாம் எடுக்கின்ற எந்த முயற்சியானாலும் அந்த முயற்சிகள் நம்முடைய மொழியின் அடிப்படையில், மொழி பேசுகின்ற மக்களின் அடிப்படையில், அந்த மக்கள் வாழ்கின்ற மாநிலத்தின் அடிப்படையில் அதனுடைய வளர்ச்சிக்காக எடுக்கின்ற முயற்சிகள் என்று அவரும் நம்முடைய தூய்மையை உணர்ந்த காரணத்தால், அதற்கு உடனடியாகப் பதில் தர கடமைப்பட்டவர் என்ற முறையிலே அந்தப் பதில்கள் வெளிவந்தன. நமக்கு அனுப்பப்பட்டன.

### மொழி வளர்ந்தால் நாடு வளரும்

இரு சார்பிலும் கொண்டிருந்த எண்ணம் ஏதோ விளம்பரத்திற்காக அல்ல, ஒரு மொழியைப் பற்றிக்கொண்டு, ஒரு மொழியை விளம்பரப்படுத்திக்கொண்டு வளர வேண்டுமென்பதற்காக அல்ல, வளர வேண்டும், யார்? நானோ அவரோ அல்ல. வளரவேண்டும், யார்? மொழி பேசுகின்ற மக்கள், அந்த மொழி வளர்ந்தால் மொழி பேசுகின்ற மக்கள் வளர்வார்கள். அந்த மக்கள் வளர்ந்தால் நாடு வளரும், நாடு வளர்ந்தால் நானிலம் செழிக்கும். இப்படிச் சிந்திக்கின்ற அந்தத் தன்மை எல்லோருக்கும் வேண்டும். அது நானறிந்த

வரையில் டெல்லிப் பட்டணத்திலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களிடத்திலே நிரம்ப இருப்பதை என்னால் காண முடிந்தது. இல்லாவிட்டால் நான் எழுதிய கடிதங்கள், அவருடைய கைக்குச் சேர்ந்தாலும், அவர் படித்துப் பார்த்தாலும், குறுக்கே இருப்பவர்கள், அதை உடனடியாக கருணாநிதிக்குப் பதில் அனுப்ப வேண்டுமே என்று சொல்கிறவர்களாக இருந்தால் தான் கருணாநிதிக்கு அந்தப் பதில் வந்து சேர்ந்திருக்க முடியும். அப்படிச் சேர்ந்த காரணத்தால்தான் இன்று உங்களையெல்லாம் நான் சந்திக்க முடிந்தது. இவ்வளவு மகிழ்ச்சியோடு சந்திக்க முடிந்தது.

ஆனால் நாம் பெற்ற மகிழ்ச்சியை இன்றைக்கு முழுமையாக வெளியிட என்னால் இயலவில்லை. காரணம், இரண்டு மூன்று நாட்களாக உடல் நிலை சரியில்லை, உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டால், ஒருவேளை அர்ஜுன் சிங் அவர்கள் பயணத்தை ஒத்திவைத்துவிடுவாரோ என்ற பயத்தில் இதை வெளிப்படுத்தாமலே இருந்தேன். வெளிப்படுத்தினால் பத்திரிகைகள் இருக்கவே இருக்கின்றன. எந்தப் பத்திரிக்கையில் என்ன போடுவார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அவரே பயந்து போய் வராமல் இருந்துவிட்டால் என்ன செய்வதென்று சொல்லாமல் இருந்தேன். நல்லவேளையாக, நான் சொல்லாமல் இருந்ததைப் போலவே என்னுடைய நண்பர்களும் இப்படியொரு விழா நடப்பதை மற்றவர்களிடத்திலே சொல்ல மறந்துவிட்டார்கள், சொல்லாமல் இருந்து விட்டார்கள். இருந்தாலும் தமிழ் உங்களையெல்லாம் இங்கே அழைத்து வந்திருக்கிறது.

## தமிழ்த்தாயின் அழைப்பு

நாங்கள் யாரும் உங்களை இங்கே அழைத்து வரவில்லை. நாங்கள் ஒன்றும் அகலமான "போஸ்டர்"களையொட்டி, வாருங்கள், வாருங்கள் கலைவாணர் அரங்கத்திற்கு, பெரிய விழா நடத்துகிறோம், தமிழுக்காக நடத்துகிறோம், தமிழ் செம்மொழியாக ஆகிவிட்டதே, தெரியுமா உங்களுக்கு, அந்தச் செம்மொழியைச் சரியான முறையிலே நாம் வளர்க்க, வலுப்படுத்த ஒரு மைய அமைப்பை இங்கே உருவாக்குகிறோம், அதற்கு மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் வருகிறார், வாருங்கள் வாருங்கள் என்று உங்களையெல்லாம் அழைக்கின்ற அவ்வளவு ஆர்வம் படைத்தவர்கள் நாங்கள் அல்ல. ஏனென்றால் ஆர்வம் தமிழுக்காகப் போராடும் போது இருந்தது, எந்தப் போராட்டத்திலும் வெற்றி கிடைத்து விட்டால் ஏற்படக்கூடிய ஒரு சோம்பல், ஒரு அலுப்பு அந்த வெற்றிக்காகப் பாடுபட்டதிலே ஏற்பட்ட களைப்பு இருந்துதான் தீரும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு ஏற்பட்டதைப் போல – சுதந்திரப் போராட்டத்திற்குப் பிறகு ஏற்பட்டதைப்போல – ஒரு அலுப்பு – வாளாவிருப்போம் என்ற தன்மை, வாளாய் இருப்போம் போரின்போது – இப்போது வாளாயிருப்போம் – என்கின்ற அந்தத் தன்மை இந்த நிலையினால் – நீங்கள் இவ்வளவு பேர் வருவீர்களோ என்ற சந்தேகத்தோடுதான் நானும் பேராசிரியரும் இங்கே வந்தோம்.

அப்படியிருந்தும், எங்களை யார் அழைத்தால் என்ன, யார் அழைக்காவிட்டால் என்ன, எங்கள் தமிழ்த்தாய் அழைக்கிறாள், வந்தோம் என்று வந்திருக்கிறீர்கள். எனவே வந்த உங்களையெல்லாம் இருகரம் கூப்பி வரவேற்கிறேன். நம்முடைய அர்ஜுன் சிங் அவர்கள் இந்த விழாவினைத் தொடங்கி வைத்து, இந்த மையத்தையும் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ✱



# குடும்ப அட்டை வைத்துள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.8.2007 அன்று 85 மற்றும் 86 ஆவது வட்டங்களில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிப் பேசியதாவது:– "முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளையும், திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள். எத்தனையோ கட்சிகள் தேர்தலுக்காக வாக்குறுதிகளை அளிப்பார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தினைப் பொறுத்தவரை சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளில் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் உள்ள கரசங்கால் கிராமத்தில், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுர பயனாளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

முதல் கட்டமாக ரூபாய் 9 கோடி செலவில் தமிழகம் முழுவதும் 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இதில் சென்னை மாநகரில் மட்டும் 3 ஆயிரத்து 472 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ரூபாய் 685 கோடி செலவில் 25 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை 15.2.2007 அன்று, திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இரண்டாம் கட்டமாக 31 ஆயிரத்து 646 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் 2 ஆயிரத்து 850 வண்ணத் தொலைக்காட்சிப்




பெட்டிகளும், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் 2ஆயிரத்து 200 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இராயபுரத்தில் 3 ஆயிரத்து 300ம், துறைமுகத்தில் 2 ஆயிரத்து 966ம், பெரம்பூரில் 5 ஆயிரத்து 800ம், புரசைவாக்கத்தில் 2 ஆயிரத்து 905ம், அண்ணா நகரில் 3 ஆயிரத்து 152ம், திருவல்லிக்கேணியில் ஆயிரத்து 822ம், எழும்பூரில் ஆயிரத்து 852ம், தியாகராய நகரில் 800ம், சைதாப்பேட்டையில் 7 ஆயிரத்து 970ம், மைலாப்பூரில் 3 ஆயிரத்து 400ம் என சென்னை மாநகரில் உள்ள மக்களுக்கு கடந்த நான்கு நாட்களில் மட்டும் 38 ஆயிரத்து 952 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மத்திய அமைச்சர், மாநில அமைச்சர்கள், மேயர், சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது இன்று சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 3 ஆயிரத்து 148 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இன்று பூங்காநகர் சட்டமன்றத் தொகுதியில் ஆயிரத்து 450 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன.

### முதல்வர் தொகுதியில் எண்ணற்ற பணிகள்

மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ரேஷன் கார்டு வைத்திருந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். தேவைப்பட்டால் நான்காவது கட்டமாகவும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். முதல்வர் அவர்களின் தொகுதியில் எண்ணற்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நான் சென்னை மேயராக இருந்தபொழுது மூன்று மண்டலங்களில் தனியார் மூலம் குப்பைகள் அள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டது. தற்போது அந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிவடைந்து இந்த மாதம் 26 ஆம் தேதி முதல் புதிய நிறுவனமான நீல் மெட்டல் பனால்கா ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்யப்பட்டு குப்பைகள் அகற்றும் பணியை மேற்கொள்கிறது.

பத்திரிகையில் குப்பைகள் பற்றி செய்திகள் பெரிதுபடுத்தி வெளியிடப்படுகிறது. அந்தப் புதிய நிறுவனம் சிறிய, பெரிய லாரிகள் கொண்டு குப்பைகள் அகற்றும் பணியினைத் தொடங்கி உள்ளது. குப்பைகளை காலை, மதியம், மாலை என அகற்றப்பட்ட இடத்திலேயே குப்பைகள் தொடர்ந்து கொட்டப்படுவதால் தேக்கம் ஏற்பட்டுள்ளது. தற்போது அதை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மேலும் அந்தப் புதிய நிறுவனம் 2,500 தொட்டிகள் குப்பைகளை அகற்றுவதற்காக சின்டெக்ஸ் நிறுவனத்திடம் கோரி உள்ளது. சிறிய தீ விபத்தின் காரணமாக அந்நிறுவனத்திற்கு சின்டெக்ஸ் தொட்டிகள் வழங்குவதில் சற்று தாமதம் ஏற்பட்டு உள்ளது. இவை அனைத்தும் களையப்பட்டு 10 நாட்களுக்குள் குப்பைகள் இல்லாத நிலை உருவாகும், இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது, "சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மாநகராட்சி மூலம் எண்ணற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 9 பணிகள் ரூபாய் 36.10 இலட்சத்திலும், 6 மழைநீர் வடிகால்வாய் பணிகள் ரூபாய் 48 இலட்சத்திலும், 3 கட்டடப் பணிகள் ரூபாய் 28 இலட்சத்திலும், 2 மின்சாரத்துறை பணிகள் ரூபாய் 12 இலட்சத்திலும் என இருபது பணிகள், முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியே 24 இலட்சத்து 10 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப் படுகிறது" என்று குறிப்பிட்டார்.

# மக்கள் கூடும் இடங்களில் அரசுச் செய்தி சுவரொட்டிகளை ஒட்டும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்

## அனைத்து மாவட்ட செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களின் உரை

**மா**ண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களின் தலைமையில், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களின் (செய்தி மற்றும் விளம்பரம்) ஆய்வுக் கூட்டம் 27.8.07 மற்றும் 28.8.07 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது இந்த ஆய்வுக் கூட்டத்தில் செய்தித் துறையின் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர். இக்கூட்டத்தின் சிறப்பம்சமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்கள் பற்றி விளம்பரப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு நலத்திட்டங்கள், அவை செயல்படும் விதம், அவை குறித்த விழிப்புணர்ச்சி, பொதுமக்கள் அவற்றால் பெறும் பயன்கள், பயனாளிகள் பயன் அடைந்த மற்றும் அடையும் நிலை குறித்து விளம்பர நோக்கில் அனைத்து மாவட்டங்களிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணி மேற்கொள்வது பற்றியும், திட்டங்கள் பயனாளிகளுக்குச் சென்றடைய நடைமுறையில் தடையாக உள்ள தடைக்கற்கள் மற்றும் பலன்களை முழுமையாகவும், எளிதாகவும் அடைவதற்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு மற்றும் புகைப்படப் பிரிவிற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் மடிகணினியினை வழங்கினார். அதன்பின் ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் பேசியதாவது:

"நாம் செய்து முடித்த பணியை எடை போட்டுப் பார்க்கும் நிகழ்ச்சி இது. அரசின் செயல்பாடுகளையும், நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களையும் மக்களிடம் சேர்த்ததோடு விழிப்புணர்வுப் பணியையும்–செய்தித் துறை ஆற்றி வந்துள்ளது.

நவீன தொழில்நுட்ப வேகத்திற்கு ஏற்ப, இந்தத் துறை ஈடுகொடுத்து வருகிறது. இன்னும் அதிக அளவில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அரசின் திட்டங்கள் பற்றிய விவரங்களையும், செய்திகளையும் மக்களிடம் விரைவாக கொண்டுபோய் சேர்க்க வேண்டும். துறையில் வழங்கப்பட்டுள்ள கணினிகளுக்கு இணையதள வசதி தேசிய தகவல் மையம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. கணினி வழி பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். ஒவ்வொரு அலுவலகத்திலும் புள்ளி விவரங்களைச் சேகரித்து வைக்க வேண்டும். அரசின் இணையதளத்தில் செய்திகளையும், புகைப்படங்களையும் உடனுக்குடன் இடம் பெறச் செய்ய வேண்டும். மக்கள் கூடும் இடங்களில் 'அரசுச்செய்தி' சுவரொட்டிகளை ஒட்டும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

28.8.07 அன்று நடைபெற்ற இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தமது உரையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் மக்களின்



பசிப்பிணியைப் போக்கி, வயிராற உணவு உண்ண ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. மேலும், இளம் சிறார்களுக்கு சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் மகத்தான திட்டம், உழைத்துக் களைத்த மக்கள் தங்கள் மாலைப் பொழுதை இனிமையாகக் கழிக்க உதவும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள். வண்ணத் தொலைக்காட்சி மூலம் கிராம மக்கள் உலகப் பொது நிகழ்வுகளை அறிந்து கொள்ளும் வசதி. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6,000 நிதியுதவி வழங்கும் திட்டம் உள்ளிட்ட அரசின் திட்டங்கள் பற்றி விவரித்தார். பின்னர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு.து.இராசேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரை ஆற்றினார், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ் இ.ஆ.ப.,அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

# சென்னையில் வெளியுறவு அமைச்சகத்தின் கிளை அலுவலகம் திறப்பு காலத்தில் மேற்கொள்ளப்படும் பயன்தரும் பணி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை




இந்திய வெளியுறவுத் துறையின் கிளைச் செயலகத்தைத் தொடங்கி வைப்பதற்காக இங்கு வருகைபுரிந்துள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அகமத் ஆகியோருடன் இவ்விழாவில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வெளியுறவுத் துறை அமைச்சகம் கொல்கத்தா, ஐதராபாத் ஆகிய இடங்களை அடுத்து மூன்றாவதாகத் தமிழகத்தில் இந்த அலுவலகம் தொடங்கி வைக்கப்படுவது எனக்கு மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது.

சென்னையில் கிளை அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்ற எங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டமைக்காகவும், நேரில் வருகை புரிந்து இந்தக் கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்திட முடிவு செய்தமைக்காகவும் பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு நான் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அலுவலகத்தின் பயன்பாடுகளைப் பொறுத்தவரை தமிழகம் மற்றும் தென்னிந்தியா முழுவதற்கும் இது ஒரு மிக முக்கியமான நிகழ்வாகும்.

### சென்னையின் முக்கியத்துவம்

ஐந்தாவது முறையாக நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபின் 2006 நவம்பரில் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி சென்னையில் கிளைச் செயலகத்தைத் தொடங்க வேண்டியதன்

தேவை குறித்து வலியுறுத்தினேன். அந்நிய நேரடி முதலீடுகள் அதிகரித்து வருவதன் காரணமாகவும், சென்னையில் பல வெளிநாட்டுத் தூதரங்கள் தங்கள் அலுவலகங்களை அமைத்துள்ளதன் காரணமாகவும், பன்னாட்டு நிறுவனங்கள் பல தேர்வு செய்து, விரும்பக்கூடிய இடமாகச் சென்னையின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதன் காரணமாகவும், இந்த அலுவலகத்தின் தேவை மிகவும் அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.

இந்த கிளைச் செயலகத்தை நிறுவுவதற்கு உடனடியாக ஒப்புதல் அளித்தமைக்காக நமது பிரதமர் அவர்களுக்கும், வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை கிளைச் செயலகம் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், பிற தென் மாநிலங்களின் மக்களுடைய தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சாளரமாகச் செயல்படும். இந்த முக்கியத்துவத்தின் பங்கினை இச்செயலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்; அத்துடன் மாநில அரசின் தொழில் மேம்பாடு, முதலீடுகளைக் கவர்தல், மாநிலத்தின் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஆகியவை தொடர்பான மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் செயல்படுதல் வேண்டும்.

**தொழிற்சாலைகள்**

நாங்கள் பொறுப்பேற்றபின் இதுவரை 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீடுகளைக் கொண்ட 11 புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பம் இடப்பட்டுள்ளன. நாட்டின் பலவகைத் தொழில்களில் கணிசமான பங்கினை முதலீடுகளாகப் பெற்றுத் திகழ்கிறது தமிழகம்.

புதுடெல்லி, மும்பை ஆகிய நகரங்களை அடுத்து சென்னையில்தான் அதிக எண்ணிக்கையிலான தூதரக அலுவலகங்கள் அமைந்துள்ளன. 10 நாடுகளின் நிரந்தர தூதரகங்கள், 27 நாடுகளின் துணைத் தூதரக அலுவலகங்கள் ஆகியவற்றுடன் இரண்டு துணை நிலை ஆணையர் அலுவகங்களும் அமைந்துள்ளன.

இக்கிளைச் செயலகம் இந்தத் தூதரக அலுவலகங்களுடன் தொடர்புகள் கொள்வதற்கு உதவியாக அமையும். வரியில்லாத சுங்கவரி விலக்கு, (Duty free customs exemption) வாகனங்களைப் பதிவு செய்தல். உரிமங்கள் வழங்குதல் போன்ற பிற பணிகளையும் இவ்வலுவலகம் மேற்கொள்ளும்.

சில முகமைகளின் நியாயமற்ற நடவடிக்கைகளால் அயல்நாடுகளில் குடியேறிய நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சொல்லொணாத் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இப்படிப் பாதிக்கப்படுபவர்களின் உறவினர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் உடனடி உதவிகளுக்கான அடிக்கடி அரசினை நாடுகின்றனர். இந்தக் கிளை அலுவலகம் நம்முடைய தூதரக நடவடிக்கைகள் மூலம் வெளிநாடுகளில் உள்ளவர்களோடு எளிதாகத் தொடர்பு கொள்ளும் வசதிகளை அளித்திட முடியும் என்றும், அதன் மூலம் பாதிக்கப்பட்டவர் களுக்குத் தேவைப்படும் உடனடி வசதிகளை அளித்திடக் கூடும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

**தமிழக அரசு உதவும்**

சென்னையில் குடியுரிமை பெறும் இடங்களில் (Immigration counters) வருவோர் மற்றும் பயணம் செல்வோர் எண்ணிக்கையின் அளவு அதிகரித்துக் கொண்டுள்ளது. இது கடந்த 5 ஆண்டுகளில் 54 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகப் பதிவுகள் மூலம் தெரிய வருகிறது. இந்த 5 ஆண்டுகளில் பாஸ்போர்ட் வழங்கப்படுவதும் 76 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இத் தருணத்தில் வெளியுறவு அமைச்சகத்தின் கிளை அலுவலகம் இங்கு திறக்கப்படுவது முற்றிலும் பொருத்தமானதும், காலத்தில் மேற்கொள்ளப்படும் பயன் தரும் பணியுமாகும்.

வெற்றி என்பது நாம் சேரும் இடம் மட்டுமல்ல. அது ஒரு நெடிய பயணமுமாகும். இன்று கிளை அலுவலகம் நிறுவிடும் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் பணி மகத்தான வெற்றி பெற வாழ்த்துகிறேன். தமிழக அரசு தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும். இங்கு வருகைபுரிந்து இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ள பிரணாப் முகர்ஜி அவர்களுக்கும், அகமத் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*25.8.2007 அன்று*
*சென்னையில் நடைபெற்ற*
*வெளியுறவுத் துறை அமைச்சகத்தின்*
*கிளை செயலகத் திறப்பு விழாவில்*
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
*அவர்கள் ஆற்றிய உரை.*

# பதிவு மூப்பு அடிப்படையில் முதன்முதலாக 5,098 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



தமிழகத்தில் இந்த அரசு 13.5.2006 அன்று அமைந்த பிறகு, பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இனி ஒப்பந்த முறை ஆசிரியர் நியமனங்கள் இல்லை என அரசு மேற்கொண்ட முடிவின் படி, 1.6.2006 முதல் 46 ஆயிரத்து 605 ஒப்பந்த முறை ஆசிரியர் களுக்கு ஒரே ஆணையின் மூலம் உரிய காலமுறை ஊதியங்கள் அளிக்கப்பட்டு, நிரந்தரப் பணியிடங்களில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

2006–2007 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றிய தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும், நகராட்சி, மாநகராட்சி நிருவாகப் பள்ளிகளிலும், 8,314 இடைநிலை ஆசிரியர்கள், 473 சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோர் வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையிலும், 12 ஆயிரத்து 504 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 2,342 முதுநிலை ஆசிரியர்கள் ஆகியோர் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலமாகவும், தொடக்கப் பள்ளிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட 1,009 தலைமையாசிரியர் பணியிடங்களில் பதவி உயர்வு மூலமாகவும், மொத்தம் 24, 642 ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்.

பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் இதுவரை தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி, குறைபாடுகளைத் தவிர்த்திடும் பொருட்டு இனி வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையில், 1:1 என்ற விகிதத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பணி நாடுநர் பட்டியல் பெறப்பட்டு, பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என இந்த அரசு கொள்கை முடிவு மேற்கொண்டது.

அக்கொள்கை முடிவின்படி, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்காக இந்த அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள 7,979 பட்டதாரி ஆசிரியப் பணியிடங்களுக்கு வேலைவாய்ப்புப் பதிவு மூப்பு அடிப்படையில் முதன் முறையாகத் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5,098 பட்டதாரி ஆசிரியர்களின் தேர்வுப் பட்டியலை வெளியிட்டு அடையாளமாக 19 ஆசிரியர்களுக்கு உரிய நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

அவர்கள் 2.9.2007 அன்று வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.

1973 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏறத்தாழ 34 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும் இதுவரை வேலை கிடைக்காமல் பணி நியமனத் திற்காகக் காத்திருந்த பல்லாயிரக்கணக் கானவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி நியமனங்களை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்.



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நியமன ஆணைகளைப் பெற்ற ஆசிரியர்கள், பல ஆண்டுகளாகப் பதிவு செய்தும் வேலை கிடைக்குமா என்ற கவலையுடன் இருந்த தங்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற இந்த அரசின் அறிவிப்பும், அதன்படி நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பெறக்கூடிய அருமையான வாய்ப்பும் கிடைத்ததை எண்ணி நாங்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம் என்று கூறி தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள 5,098 பட்டதாரி ஆசிரியர்களில் 3,700 பேர். அதாவது 73 விழுக்காடு ஆசிரியர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் திரு.குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் திரு.இராம மோகன்ராவ், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. இரா.கண்ணன், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திருமதி. எம்.இலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

---



# உள்ளாட்சி மன்றங்கள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அனைத்து அபராத வரி தள்ளுபடி

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

***கலைஞர் அவர்கள் அறிவிப்பு***

உள்ளாட்சி மன்றங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகையைக் குறைத்துச் சலுகை வழங்கியதன் காரணமாக, மின்சார வாரியத்திற்கு 50 கோடி ரூபாய் மானியமாக வழங்கிட முடிவெடுத்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, உள்ளாட்சி மன்றங்கள் மின்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அனைத்து அபராத வரி மொத்தம் 31 கோடியே 41 இலட்சம் ரூபாயைத் தள்ளுபடி செய்ய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## **கலைஞர்** அவர்களின்

# ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

**செ**ப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஆசிரியர் நாள்! ஆசிரியராகப் பணி தொடங்கி, நமது நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்து புகழுடன் திகழ்ந்த பெருந்தகை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த திருநாள்! அறப்பணியாக ஆசிரியப் பணிபுரிந்திடும் நல்லாரைத் தேர்வு செய்து, 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' வழங்கிச் சிறப்பித்திடும் நன்னாள் இந்நாள்!

அறியாமை இருளகற்றி, அறிவொளி பாய்ச்சி, எல்லோரும் எல்லாமும் பெற வழிகாட்டி உதவிடும் ஆசிரியர்கள், நாட்டு முன்னேற்றத்தின் ஆணிவேர்கள். இந்த அடிப்படையில் ஆசிரியர் நலன்களைக் காப்பதில் இந்த அரசு கொண்டுள்ள ஈடுபாடு மகத்தானது. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுத் தொகை 1,000 ரூபாய் என்பதை 1997 இல் 2,000 ரூபாய் என உயர்த்தி, 2006–இல் அதனை 5,000 ரூபாய் என மேலும் உயர்த்தி, ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. அத்துடன், முந்தைய ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கி ஆசிரியர்களுக்கு அரணாக அமைந்து, அவர்களை அரவணைத்துச் செல்கிறது இந்த அரசு.

ஆசிரியர் பயிற்சி முடித்துக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் தொடர்ந்து புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

இதுவரை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலமே பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி இனி பதிவு மூப்பு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என இந்த அரசு அறிவித்ததற்கேற்ப, முதன்முதலாக 5,098 பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் 1973ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏறத்தாழ 34 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் காத்திருந்த ஆயிரக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமனம் பெறும் வாய்ப்பு தமிழகத்தில் மலர்ந்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் கொண்டாடப்படும் ஆசிரியர் தினவிழா தமிழகம் முழுவதும் எழுச்சியுடன் நிகழ, தமிழக ஆசிரியப் பெருமக்கள் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி நிலவ என் உளமார்ந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகளையும், மத்திய, மாநில விருதுகள் பெறும் ஆசிரியர்களுக்கு மனங்கனிந்த பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

# நியாயவிலைக் கடைகளில் பருப்புகள் விநியோகம் 2008 ஜனவரி வரை நீட்டிப்பு

## தமிழக அமைச்சரவை முடிவு

1. தமிழக அரசு சார்பில் கேபிள் டி.வி இணைப்புகள் வழங்குவதற்கென தனியே ஒரு நிறுவனத்தை அமைத்து, அந்த நிறுவனத்தின் மூலம் கேபிள் தொலைக்காட்சியில் கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டு முறை (Conditional Access System) நடைமுறையில் உள்ள சென்னைப் பெருநகரப் பகுதியில் பன்முக ஏற்பாட்டு முறை ஆபரேட்டராகவும் (Multi System Operator); தமிழகத்தின் பிற பகுதிகளில் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டராகவும் செயல்படுவதென்றும்; இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2. வெளிச்சந்தையில் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா ஆகியவற்றின் விலை உயர்ந்து வருவதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இப்பொருள்களை அரசே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய முடிவு செய்து, 14.4.2007 முதல் சென்னை மாநகரத்திலும், 1.5.2007 முதல் ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது தற்காலிக சிறப்புத் திட்டம் எனினும், இத்திட்டத்திற்கு நுகர்வோரிடையே உள்ள வரவேற்பினைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை 2008 ஜனவரி மாதம் வரை நீட்டிப்பதென்றும்; ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் பொருள்களுடன் "ஆட்டா" வையும் வழங்குவதென்றும்; துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்றவற்றை கால் கிலோ, அரை கிலோ என்று தேவைக்கேற்ப வழங்குவதென்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

– தமிழக அமைச்சரவைக் கூட்ட முடிவு
11.8.2007

---

# பழைய மாமல்லபுரம் சாலைக்கு "ராஜீவ்காந்தி சாலை" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது

### மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

இந்தியப் பிரதமராகப் புகழுடன் விளங்கிய பாரத ரத்னா ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்தநாள் விழா 20.8.2007 அன்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்றபொழுது, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.எம். கிருஷ்ணசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று பழைய மாமல்லபுரம் சாலைக்கு 'ராஜீவ்காந்தி சாலை' எனப் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பின்படி, சென்னை கிண்டியில் உள்ள மத்திய கைலாஷ் என்னும் இடத்தில் இருந்து தொடங்கும் பழைய மாமல்லபுரம் சாலைக்கு, "ராஜீவ்காந்தி சாலை'' என்று தமிழக அரசு பெயர் சூட்டியுள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 24.8.2007 அன்று அறிவித்தார்.



# தொல்காப்பியர் விருது - குறள்பீட விருதுகளின் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு

மாண்புமிகு மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் அவர்கள் அறிவிப்பு

இந்தியாவின் தொன்மையான பாரம்பரியங்களைப் பற்றிய ஆய்வுகளில் புதிய முயற்சியைத் துவக்கும் இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற விழாவில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களும், அவரது சகாக்களும் கூறிய அன்பான வார்த்தைகளுக்காகவும், இந்த தருணத்தில் இப்படி சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்தமைக்காகவும் நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

மத்தியிலுள்ள எங்களது அரசுக்கு தமிழக மக்கள் தொடர்ந்து அன்புகாட்டி வருவதற்கும், அவர்களுடைய நல்வாழ்த்துக்களுக்காகவும் நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

தமிழ் பலவழிகளில் சிறப்பானதொரு மொழியாகும். ஆனால் அதன் மிகப் பெரிய வலிமை அது ஒரு 'வாழும்' செம்மொழி ஆகும். இந்திய கலாச்சார பாரம்பரியங்களின் வரலாற்றில் தமிழுக்கு ஒரு மிகச் சிறப்பான இடம் உள்ளது என்பதில் ஐயமில்லை. அதன் உள்ளார்ந்த வலிமையும், ஆழமான வேர்களும் தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை பல நூற்றாண்டுகளாக உயிரோட்டத்துடன் வைத்திருக்கின்றன.

காந்தி, நேரு, ஆசாத், நேதாஜி, ராஜாஜி, அண்ணா போன்ற தேசியத் தலைவர்களால் அடித்தளம் அமைக்கப்பட்ட நமது கூட்டு கலாச்சாரத்தை புரிந்து கொள்ள திராவிட மற்றும் இந்திய—ஆரிய குழுக்களின் மொழியியல், இலக்கிய மற்றும் கலாச்சார பாரம்பரியங்களை நாம் ஆய்வு செய்வது முக்கியமானதாக உள்ளது.

நமது வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றிய விசாலமான புரிதல் நமக்கு இருக்க வேண்டும்; இதற்கு ஆரிய, திராவிட பாரம்பரியங்கள் இரண்டையும் பற்றிய முறையான ஆய்வும் பகுப்பாய்வும் முக்கியமானதாகும்.

இன்றைய நமது தத்துவார்ந்த, இலக்கிய மற்றும் ஆன்மீகப் பாரம்பரியம், சமஸ்கிருதம் மற்றும் தமிழ் என்ற

இரண்டு தொன்மையான மொழிகள் பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு பெரிய நீரோட்டங்களின் சங்கமத்திலிருந்து உருவானவை ஆகும்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், கிழக்கு மற்றும் மேற்கு வரலாற்று ஆசிரியர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், கல்வெட்டு ஆய்வாளர்கள், மொழி ஆராய்ச்சியாளர்கள் காட்டிய ஆர்வத்தினால் சமஸ்கிருதத்தின் பங்களிப்பு மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டு இந்திய கலாச்சாரம் உருவானதில் அதே அளவிற்கு பங்காற்றியதும் 20க்கும் மேற்பட்ட திராவிட மொழிகளுக்கு ஊற்றுக்கண்ணாகவும் விளங்கும் தமிழ் மொழி அத்தகைய கவனத்திற்குத் தகுதியானது.

மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் போன்ற சிறந்த நிறுவனங்கள் அமைத்தல் முழுவதும், அதை மத்திய, மாநில அரசுகள் கூட்டாக சொந்தமாக்கி நிருவகிப்பதும் இந்த நீண்ட காலத் தேவையை நிறைவேற்றும்.

**இலக்கியப் பாரம்பரியம்**

இதர பல நவீன இந்திய மொழிகளின் இலக்கியங்களைவிட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான மிகமுந்தைய இலக்கியங்கள் தமிழில் உள்ளது என்பதையும், இந்திய மொழிகளில் சமஸ்கிருதத்திலிருந்து உருவாகாத இலக்கியப் பாரம்பரியம் கொண்ட ஒரேமொழி என்பதையும் நாம் அறிவோம். தவிரவும், தொன்மையான தமிழ் இலக்கியத்தின் தரம் கிரேக்கம், லத்தீன், சீனம் அராபிய மற்றும் பாரசீக மொழிகளின் இயற்றப்பட்ட மாபெரும் தொன்மை இலக்கியங்களின் தரங்களுக்கு இணையானதாகும்.

மத்திய அரசு, தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்த பின்னர், செம்மொழித் தமிழுக்கு மத்திய திட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் மைசூரிலுள்ள மத்திய இந்திய மொழிகளின் மத்திய கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மத்திய நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்திலும் வழிகாட்டுவதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த செம்மொழித் தமிழின் சிறந்த அறிஞர்களைக் கொண்ட தமிழ்மொழி மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் பெரும் பகுதியாக, இந்திய மொழிகளின் மத்திய கழகத்திற்குள் செம்மொழி தமிழுக்கான சிறப்பு மையம் ஒன்று 2006–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உருவாக்கப்பட்டது.

அதற்குத் தேவையான கல்வி, தொழில்நுட்ப நிருவாகப் பணியாளர்களும் அமர்த்தப்பட்டனர். மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கல்வி உதவிகள் மற்றும் இணைப்பு உதவிகளையும் ஏற்பாடு செய்துள்ளது; பெருமைக்குரிய தேசிய மற்றும் சர்வதேசிய விருதுகளையும், தமிழ் செம்மொழியில் இளம் அறிஞர்களுக்கு கௌரவிக்க ஏற்பாடு செய்துள்ளது.

அனைத்து பெரிய திட்டங்களிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றையும் பொறுத்த மட்டில் மத்திய அரசு தமிழ்வளர்ச்சிக் கழகம் மற்றும் அதன் சம்மந்தப்பட்ட திட்ட ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது.

செம்மொழி தமிழ் மீது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நடவடிக்கைகள் பற்றியும், அனைத்து துறைகளிலும் செய்யப்பட்டுள்ள பணிகள் பற்றியுமான விரிவான விவரங்கள் 'செம்மொழி' என்ற செய்திக் கடிதத்திலும் இந்திய மொழிகளுக்கான மத்திய கழகத்தின் செம்மொழி தமிழ் வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

தொன்மையான தமிழ் கட்டுரைகளின் விமர்சனப் பதிப்புகளின் தொகுப்புக்கு கோவையிலுள்ள இந்திய அரசு அச்சகத்தில் அச்சிடப்படுவதற்காக இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தொன்மையான தமிழ்மொழி பற்றிய தகவல்களை வழங்கும் தொலைக்காட்சி படங்கள் பல இந்த ஆண்டு இறுதிக்குள் தயாரிக்கப்பட்டுவிடும்.

கலைஞர் அவர்களே, அடுத்த ஆண்டு (2008) ஜனவரி மாதம் 14ந் தேதி திருவள்ளுவர் பிறந்த நாளன்று அவற்றை வெளியிடுவதற்காக நாங்கள் மீண்டும் உங்களை அணுகவேண்டியிருக்கும்.

தொல்காப்பியர் விருது என்ற தேசிய விருது மற்றும் குறள்பீட விருது என்ற சர்வதேச விருதுகள் ஆகியவற்றின் தொகைகளை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற தமிழக முதல்வரின் ஆலோசனையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோலவே, ஐந்து இளம் அறிஞர்களை தலா ஒரு இலட்சம் ரூபாய் விருதுக்காகத் தேர்ந்தெடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இறுதித் தேர்வுக்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

செம்மொழி ஆராய்ச்சியை மேம்படுத்த நீண்ட காலமாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் முதல் உறுதியான நடவடிக்கை சரியான திசை வழியில் எடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் கூட்டு முயற்சியாக தேசிய அளவிலான–நிறுவனத்திற்கான கட்டடத்திற்கான உறுதியான அடித்தளம் பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒருங்கிணைப்பில் இடப்பட்டுள்ளது.

11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் போது, சென்னையில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் அமைக்கப்பட தமிழக மக்களின் விருப்பம் தற்போது நிறைவேற்றப்படும். இந்த நிறுவனத்திற்காக 29 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி மாநில அரசு ஏற்கெனவே முதல் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிறுவனம் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதுடன் செம்மொழி தமிழில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு மாணவர்கள் கிடைக்கும் வகையில் கல்வி கற்பிக்கும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனை கூறப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் புதிய மிகவும் உயர்தரமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் நிறுவனத்தில் சேரும் வகையில், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளில் தமிழக அரசு செம்மொழித் தமிழ்ப் பாடத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

கூட்டு நிருவாகம் மற்றும் பொறுப்புகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த தேசிய அளவிலான செம்மொழித்தமிழ் ஆய்வு நிறுவனம் மிகச் சிறந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு இந்த பல்துறை ஆராய்ச்சிப் பணிக்கு மிகவும் தேவையான மனித சக்தியை உருவாக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தத் திட்டத்திற்கான விவரங்களை நாங்கள் உருவாக்கி வருகிறோம், இதற்கு உங்களது தொடர்ந்த பங்களிப்பை நாடுகிறோம்.

இன்றைய நிகழ்ச்சிகளுக்காக நான் மீண்டும் தமிழக முதல்வருக்கும் , அவரது குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– 18.08.2007 அன்று மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **அர்ஜுன்சிங்** அவர்கள் ஆற்றிய உரை.

★

# தமிழில் பெயர் கொண்ட திரைப்படங்களுக்கான கேளிக்கை வரிவிலக்கிற்குத் தகுதியான படங்களைப் பரிந்துரை செய்திட குழு அமைப்பு

**த**மிழில் பெயர் கொண்ட புதிய மற்றும் பழைய திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியில் இருந்து முழுமையான வரிவிலக்கு அளிக்கும் திட்டம் தமிழக அரசினால் 2006 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திரையிடப்படும் பல திரைப்படங்களின் தலைப்பு தமிழ்ப் பண்பாட்டிற்கும் கண்ணியத்திற்கும் குந்தகம் விளைவிப்பதாக உள்ளது என்றும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தரத்திற்கும் உகந்ததாக இல்லை என்றும், அரசு வழங்கியுள்ள கேளிக்கை வரிச் சலுகையின் நோக்கத்திற்கு முரணாக உள்ளது என்றும் தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, இனித் திரையிடப்படும் பழைய மற்றும் புதிய தமிழ்த் திரைப்படங்களின் தமிழ்ப் பெயர்கள் தமிழ்ப் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளதா என்பதை ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்திட வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழு ஒன்றினை அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.8.2007 அன்று அறிவித்துள்ளார்.

★

# அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் கணினி

## முதற்கட்டமாக 375 கணினிகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்



தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் 11.4.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் "பேரூராட்சிகளில் கணினி மயமாக்குதலை வலுப்படுத்தவும், கணினி சேவைகளை வழங்குவதிலான தரம் மற்றும் தகவல் மேலாண்மைச் சேவையை மேம்படுத்திடவும் 561 பேரூராட்சிகளுக்கும் தேவையான கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள், அகல வரிசை (Broad Band) வசதி மற்றும் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சியும் வழங்கப்படும்." என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய அரசின் தகவலியல் தொழில்நுட்பத் துறையின் வாயிலாக தமிழகத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மின்னணுசேவை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், 561 பேரூராட்சிகளுக்கும் தலா ஒரு கணினியும், பேரூராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு மொத்தம் 582 கணினிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தினால் பொதுமக்கள் பேரூராட்சி பற்றிய சேவைத் தகவல்களை எளிதாகப் பெறுவதற்கு வழிவகுப்பதுடன் பேரூராட்சிகளில் நடைபெறும் பணிகளை கண்காணித்து விரைவுபடுத்திடவும், பொதுமக்கள் சேவையை முழுமையாகச் செய்திடவும், ஒப்பந்தப்புள்ளி கோருதல், தகவல் வலையத்தில் செய்திகள் சேர்ப்பித்தல், நேரடி தகவல் பரிமாற்றம் போன்ற பணிகள் சிறப்பாகச் செயல்படுத்த வழிவகை செய்கிறது. கணினி வழங்குவதற்கான ஏற்பாடுகளை பேரூராட்சிகள் நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் தேசிய தகவலியல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து 17.8.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கணினி வழங்குதல் நிகழ்ச்சியில் செய்து வருகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கணினிகளை நேரில் வந்து பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் கே.தீனபந்து, இ.ஆ.ப, தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் டாக்டர் சி.சந்திரமௌலி, இ.ஆ.ப, பேரூராட்சிகள் இயக்குநர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப, மின்னணு நிருவாகத் துறை இயக்குநர் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.89.14 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகள்

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்**




திரு. **த. மருதபிள்ளை**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.


பெரம்பலூரில் 12.8.2007 அன்று நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப்பணிகளை தொடங்கி வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:– "தமிழகத்தில் வளர்ந்து வரும் மாவட்டங்களில் முதலிடத்தை நோக்கி வளர்ச்சித் திட்டப்பணிகளை, அதிக அளவு செயல்படுத்தி வருகின்ற பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. 89 கோடியே 14 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இந்தப் பணிகளின் மூலம் மாவட்ட மக்கள் தொடர்ந்து பல அடிப்படை வசதிகளை பெற இருக்கிறார்கள்.

நான் கடந்த ஆண்டு இதே இடத்தில் நடைபெற்ற விழாவில் பெரம்பலூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கனவான அரசுக் கல்லூரி தொடங்க வேண்டும் என்கிற கோரிக்கை ஏற்கப்பட்டு, பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரியைத் தொடங்கி வைத்தேன். தொடங்கிய முதல் வருடத்திலேயே அந்தக் கல்லூரியில் இப்பகுதியைச் சேர்ந்த 474 மாணவ, மாணவியர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்த ஆண்டும் இதுவரையில் 600 மாணவ, மாணவியர்கள் சேர்க்கப் பெற்றுள்ளனர் என்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்தக் கல்லூரி இதுவரை தற்காலிகக் கட்டடத்திலேயே செயல்பட்டு வருகின்றது. கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.2.54 கோடி மதிப்பில் முதல்கட்டமாக அரசு ஒதுக்கீடு செய்து இன்று புதிய கட்டங்கள் கட்ட அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

இதுபோல் இம்மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக தமிழகத்தில் எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில், ஒரே ஆண்டில் பெரம்பலூர் மற்றும் ஆண்டிமடத்தில் என இரண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்க அரசு ஆணை வழங்கியதுடன் நில்லாமல், இன்று முதல் இரண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. இவை இந்த ஆண்டு தற்காலிக கட்டடத்தில் தொடங்கப்படுகிறது. ஓராண்டிற்குள் சொந்த கட்டடங்களில் இயங்குவதற்காக ரூ.6 கோடியே 37 இலட்சம் அரசு உடனடியாக நிதி ஒதுக்கீடும் வழங்கியுள்ளது. புதிய கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் இன்றே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறை மூலம் ரூ.5 கோடியே 30 இலட்சம் மதிப்பில் 393 வளர்ச்சித் திட்டப்பணிகளை மேற்கொள்ளவும் இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் 12,618 கிராமங்கள் உள்ளன. இவற்றில் கடந்த ஆண்டு 2,540 கிராமத்தில் அனைத்து, கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.508 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டு 2,534 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ரூ.507 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் 2007–08 ஆம் ஆண்டில் 65 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 13 கோடி மதிப்பில் 1,135 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதேபோல் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் மாநிலத்தில் உள்ள 561 பேரூராட்சிகளுக்கும் தலா ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் இம்மாவட்டத்தில் உள்ள குரும்பலூர் மற்றும் அரும்பாவூர் பேரூராட்சி களுக்கு இந்த ஆண்டு பணிகளை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்டு, ரூ.1 கோடி மதிப்பிலான பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது.



கடந்த 2006–07 ஆம் ஆண்டிலும் 65 ஊராட்சிகள் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டு ரூ. 13 கோடி மதிப்பில் 1,809 பணிகள் தொடங்கப்பட்டு, இதுவரை 1,341 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தின் 60 சதவீதம் பகுதிகளுக்கு ஏற்கெனவே பல்வேறு திட்டங்களில் கொள்ளிடத்தி லிருந்து காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. விடுபட்ட பெரம்பலூர், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள 306 குடியிருப்புகளுக்கு, ரூ.61 கோடியே 11 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வரும் நிதி நிலை அறிக்கையில் ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 322 கிராம ஊராட்சிகளிலும், 6 பேரூராட்சிகளிலும், 3 நகராட்சி களிலும் முழுமையாக காவிரி குடிநீர் பெறும் முதல் மாவட்டமாகவுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்றைய விழாவில் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தில் ரூ.3 கோடியே 86 இலட்சம் மதிப்பில் 343 பணிகளை செயல்படுத்தவும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 1 கோடியே 33 இலட்சம் மதிப்பில் 46 பணிகளை செயல்படுத்தவும் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது. இதுபோன்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை இந்த அரசு அனைத்துக் கிராமங்களும் 100 சதவீதம் அடிப்படை வசதிகளை பெறும் வரை செய்து கொண்டே இருக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய விழாவில் கிராம மக்களின் தரமான மருத்துவ வசதிக்காக பூலாம்பாடி, அம்மாபாளையம், திருமானூர், கடுகூர் ஆகிய 4 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 30 படுக்கை வசதியுடன் கூடிய புதிய கட்டடம் கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய தலைநகரான கங்கைகொண்டசோழபுரத்தில் சுற்றுலாப்பயணிகள் வசதிக்காக சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்திட ரூ.50 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கங்கைகொண்டசோழபுரத்தில் சோழர்கால சிறப்பை விளக்கும் அருங்காட்சியகம் அமைக்கவும், வணிக வளாகம் கட்டவும், சுற்றுலா பயணிகளுக்கான ஒய்வு இல்லம் கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் டாஸ்மாக் கிடங்கு கட்டடங்கள் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மாவட்ட தலைநகரான பெரம்பலூர் நகரின் அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், நகரைச் சுகாதாரமாகவும், தூய்மையாகவும் பராமரித்திட நகராட்சிகள் நிருவாகத்துறை மூலம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நவீன எரிவாயு தகன மேடை அமைத்திட ரூ.40 இலட்சம் மதிப்பிலும், நவீன இறைச்சிக்கூடம் ரூ.20 இலட்சம் மதிப்பிலும் கட்ட அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

இன்றைய தினம் கிராமப்புற பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி வசதிக்காக பள்ளிக் கல்வித்துறை மூலம் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் ரூ.3 கோடியே 12 இலட்சம் மதிப்பில் 60 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மிகவும் பின்தங்கிய கிராமப்பகுதிகளிலிருந்து அரசுப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் ஏழை மாணவ, மாணவியர்களின் வசதிக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் ரூ.2 கோடியே 25 இலட்சம் மதிப்பில் 7 விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

வி.களத்தூர், பேரளி, குவாகம் ஆகிய 3 இடங்களில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டி திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விவசாயிகளும், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களும் தங்களது கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சைகளை இலவசமாக குறித்த நேரங்களில் பெற்றுக்கொள்ள வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**“ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த வழி காட்டுதலில் நாங்கள் சிறப்பாக வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றோம். இந்த அரசு பதவி ஏற்றவுடன் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இதுவரை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. விவசாயிகளின் அனைத்து கூட்டுறவு கடன்களையும் ரத்து செய்துள்ளது. ”**

மேலும், இன்று பல்வேறு அரசுத் துறைகள் மூலம் 6,507 பயனாளிகளுக்கு, ரூ. 3 கோடியே 14 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதில் 331 மகளிர் சுயஉதவி குழுக்களைச் சேர்ந்த 700 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களும் பயன்பெறுகின்றனர். அரசின் நலத்திட்டங்களை பெறுபவர்கள் அனைவரும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டு பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்பதே இந்த மக்கள் நல அரசின் திட்டமாகும்.

இதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த வழி காட்டுதலில் நாங்கள் சிறப்பாக வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றோம். இந்த அரசு பதவி ஏற்றவுடன் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இதுவரை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. விவசாயிகளின் அனைத்து கூட்டுறவு கடன்களையும் ரத்து செய்துள்ளது. பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சத்துணவுடன் வாரம் 3 முட்டைகள் குறைபாடு இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து மகளிர் சுயஉதவி குழுக்களின் மேம்பாட்டிற்காக சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவி வழங்கப்படுகிறது. உலக அளவில் தமிழகத்தில் சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாகச் செயல்படுவதால் உலக வங்கி நடத்தவுள்ள சுயஉதவிக் குழு மாநாட்டிற்கு தமிழகத்தில் சிறப்பான திட்டத்திற்காக என்னை உலக வங்கி அழைத்துள்ளது. பொதுமக்கள் அனைவரும் செல்லும் இடங்களில் எல்லாம் இலவச

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி எங்களுக்கு எப்பொழுது கிடைக்கும் என்று கேட்கிறார்கள். இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்பது கலைஞரின் உறுதிமொழி.



ஆகவே, குடும்ப அட்டை உள்ள அனைத்துக் குடும்பத்திற்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் . முதல் கட்டமாக 30 இலட்சமும், இரண்டாம் கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கான பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. தேவைப்பட்டால் நான்காவது கட்டத்தின் மூலம் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டியில்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

இந்த மாவட்டத்தில் தொடங்கப்படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல்மின் திட்டப்பணிகளின் மூலம் இங்கு தொழிற் கல்வி பயிலும் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளும் கிடைக்கவுள்ளது. இதுபோல இன்னும் பல திட்டப்பணிகள் வரும் ஆண்டுகளில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன'' என்று மாண்புமிகு அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

விழாவில் மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ. இராசா அவர்கள் தலைமை வகித்துப் பேசினார். விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். விழாவில் அரசு நலத்திட்ட விளக்க மக்கள் சாசனம் கையேடு மற்றும் அனைத்து அரசுத் துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொகுப்பு மலரை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு 6,507 நபர்களுக்கு ரூ.3 கோடியே 14 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேசன்

## - தமிழக அரசு ஆணை



தமிழக அரசு கம்பிவடத் தொலைக்காட்சி (Cable TV) சேவையைத் தொடங்குவது சம்பந்தமாக 11.8.2007 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில், ''அரசு கேபிள் டி.வி.கார்ப்பரேசன்'' என்ற புதிய அரசுப் பொதுத்துறை நிறுவனம் தொடங்கப்படும் என்றும், இந்த நிறுவனத்தில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருடன் நிதித்துறைச் செயலர், தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலர், நிருவாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவர் ஆகியோர் இயக்குநர்களாகப் பணிபுரிவார்கள் என்றும், இந்தப் புதிய அரசுப் பொதுத்துறை நிறுவனம் தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

# தஞ்சை நகராட்சியில் ரூ.70 கோடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

தஞ்சை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.70 கோடி செலவில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்தது. இதையடுத்து மத்திய சுற்றுப்புறச் சூழல் வனத்துறை அமைச்சகம் ரூ.77 கோடி மதிப்பில் பணிகள் தொடங்க ஒப்புதல் அளித்தது. இதன்படி தொடங்கப்பட்ட பாதாளச் சாக்கடைப் பணி நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்திற்கான மத்திய அரசின் பங்கு ரூ.30 கோடியாகவும், மாநில அரசின் பங்கு ரூ.23 கோடியாகவும், நகராட்சி மற்றும் பொதுமக்களின் பங்கு ரூ.17 கோடியாகவும் உள்ளன. இதுவரை ரூ.61 கோடியே 10 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், தஞ்சை நகரில் கழிவுநீர்க் குழாய்கள் 259.78 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 10 ஆயிரத்து 59 ஆள்நுழைவு தொட்டிகளும், 30 ஆயிரம் வீட்டு இணைப்புகளும், 9.03 கிலோ மீட்டர் பிரதான குழாய் பதிக்கும் பணிகளும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகளும் நிறைவடைந்துள்ளன. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், வடக்குவாசல் அகழியில் கட்டப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் நடைபெற்றுவரும் சோதனை ஓட்டப் பணிகளை 19.8.2007 அன்று காலை நேரில் சென்று பார்வையிட்டார். பின்பு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது, தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதன்படி நகராட்சிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தஞ்சையில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி 98 சதவீதம் முடிவடைந்துள்ளது. நீதிமன்றத்தில் தடை வழங்கப்பட்டது பணிகள்



தாமதத்திற்கு காரணமாகும். தமிழகத்தில் 21 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகள் உள்ளன. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு அடிப்படைப் பணிகளை நிவர்த்தி செய்ய, ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ.20 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதுமட்டுமின்றி பல்வேறு துறைகள் மூலம் ஒதுக்கப்படும் நிதியையும் சேர்த்தால் ரூ.90 இலட்சம் அல்லது ரூ.1 கோடி வரை நிதிவரக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2006 – 2007ஆம் ஆண்டிற்கு 2,500 கிராமங்களும், 2007–2008ஆம் ஆண்டிற்கு மேலும் 2,500 கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5 ஆண்டுகளுக்குள் அனைத்து கிராமங்களிலும் எல்லாப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுவிடும். அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை பேரூராட்சி வரலாற்றிலேயே இவ்வளவு நிதி ஒதுக்கியது கிடையாது.

4 ஆண்டுகளில் எல்லாப் பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் நிதி வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்படும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரம் வழங்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அந்த கொள்கையின் அடிப்படையில் நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சித் தலைவர்களை அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அந்தக் கருத்தரங்குகளில் நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சித் தலைவர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. அதைப்போல் ஊராட்சி மன்றத் தலைவர்களைச் சந்தித்து பேச வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு 4 மண்டலமாகப் பிரிக்கப்பட்டது. 3 மண்டலங்களில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான கருத்தரங்கம் முடிந்துவிட்டது.


திரு.**கே.குமாரவேலு,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

# மதுரை - அரசு இராசாசி மருத்துவமனைக்கு ரூ.22 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் புதிய கட்டடம்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை

திரு.**சிவ.சு. சரவணன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.

மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகே அரசு இராசாசி மருத்துவமனைக்கு ரூ.22 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டப்படவுள்ள புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டியும், புதிய திட்டப் பணிகளைத் திறந்து வைத்தும் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.8.2007 அன்று உரையாற்றினார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, "இங்கு சிறப்போடு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற இவ்விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கின்ற திட்டப் பணிகளின் மதிப்பீடு ரூ.42.75 கோடிகள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், பொதுப்பணித்துறை, நபார்டு, தாட்கோ, குடிநீர் வடிகால் வாரியம், தொழில்நுட்பக் கல்வி இயக்கம் ஆகிய துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பீடு ரூ.8 கோடியாகும். மேலும் நெடுஞ்சாலைத்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டு மதுரை மேற்கு சட்டமன்ற இடைத்தேர்தல் காரணமாக திறப்புவிழா ரத்து செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்ட கூடல்நகர் மேம்பாலம் மதிப்பீடு ரூ.6 கோடியாகும். கூடல்நகர் ரயில்வே மேம்பாலம் மூலம் கூடல்நகர், விளாங்குடி, ஆணையூர் பகுதி மக்கள் சிறப்பான முறையில் பயன் பெறக் கூடியதாக அமைந்து உள்ளது", என்றார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, "மாவட்ட நிருவாகத்தின் மூலம் இங்கு 17 துறைகள் 47 திட்டங்கள் மூலம் 25,551 பயனாளிகளுக்கு ரூ.14.40 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. இராசாசி மருத்துவமனை என்பது சென்னையில் உள்ள பொதுமருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு ஈடாகத் திகழ்கிறது. இம்மருத்துவமனை ஒரு பழமையான வரலாற்றுப் பெருமையாகத் திகழ்ந்து கொண்டு இருக்கிறது. மதுரை மக்கள் மட்டும் அல்லாது தென் மாவட்ட மக்களும் இலவச மருத்துவ வசதி பெறுவதற்கும் மதுரை மற்றும் தென்மாவட்டங்களில் மருத்துவக்கல்வி பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் விபத்துகாய சிகிச்சை, எலும்பு முறிவு, நரம்பியியல் அறுவைச் சிகிச்சை, நுண்கதிர் நோய் கண்டறிதல், மயக்கவியல், தலைக்காய சிகிச்சை தனிப்பிரிவு, நெஞ்சக சிகிச்சை போன்ற பல்வேறு அறுவை சிகிச்சைப் பிரிவுகள் புதிதாகக் கட்டப்படவுள்ள மருத்துவமனையில் உருவாக்கப்பட்டுள்ளது.



கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் வகையில் 100 படுக்கைகள் கொண்ட பிரிவு உருவாக்கப்படவுள்ளது".

மதுரையில் புறவழிச்சாலை ஏற்படுத்தப்பட்டு மாட்டுத் தாவணியில் மிகப்பெரிய பேருந்து நிலையம் அமைக்கப் பட்டது. மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தை குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால். 2 லட்சம் பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். அப்படி பயன்படுத்தக்கூடிய பேருந்து நிலையத்தை தரமான நிருவாக அமைப்புச் சான்றிதழ் ISO 9001-2000 என்று வழங்கப்பட்டு இருக்கிறது. சர்வதேச அமைப்பு இந்த சான்றிதழை வழங்கி இருக்கின்றது. இந்தியாவிலேயே உள்ளாட்சி அமைப்பால் நிருவாகிக்கப்படும் ஒரு பேருந்து நிலையத்திற்கு இப்படி ஒரு சான்றிதழ் முதல்முறை இந்த பேருந்து நிலையத்திற்கு கிடைத்து உள்ளது.

மேலும் தேசிய நதிநீர் திட்டத்தின் கீழ் மதுரை மாநகரில் இருக்கக்கூடிய கழிவுநீர் வைகை நதியில் கலக்காமல் அந்த கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக பாதாளச் சாக்கடை திட்டம், மத்திய அரசின் வனம், சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிதி உதவியோடு ரூ.165 கோடி மதிப்பில் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதுபோல் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் நிறைவு பெற்றவுடன் மதுரை மாநகரில் இருக்கக்கூடிய 80 சதவிகிதம் பகுதிகள் இந்த வசதியைப் பெறுகிறது. மீதம் இருக்கின்ற 20 சதவிகிதம் பகுதிக்கான அந்தப் பணிகள் ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் 231 கோடி மதிப்பீட்டில் அந்த பாதாளச் சாக்கடைப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

அரசு நலத்திட்ட உதவிகளாய் குறிப்பிட விரும்புவது ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதி ரூ.66.40 லட்சம் வழங்கப்பட இருக்கிறது. மதுரை மாநகராட்சி மூலமாக 500 மகளிர்க்கு திருமணத்திற்கான நிதியுதவி, சமூகநலத்துறை மூலமாக தலா 15,000 வீதம் 1 கோடியே 53 இலட்சத்து 15 ஆயிரம் திருமண நிதி வழங்கப்பட இருக்கிறது. 1,884 பயனாளிகள் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5 கோடியே 72 இலட்சத்து 73 ஆயிரம் மதிப்பில் நிதி உதவி வழங்கிட இருக்கிறது. மகளிர் திட்டம், ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, தாட்கோ, சுகாதார மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டம் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை என 3 மாநகராட்சிகளில் இத்திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றோம். மத்திய அரசின் மூலமாக இத்திட்டத்தைப் பெற்று அத்திட்டத்தின் மூலமாக பலகோடி ரூபாயை பெற்று இதன் மூலமாக இத்திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றோம். அண்மையில் தில்லி மாநகருக்குச் சென்று இருக்கும்போது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் நமது பாரதப் பிரதமர், நிதியமைச்சர், சோனியா அம்மையாரை சந்திக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டபோது இத்திட்டத்தை குறிப்பிட்டுச் சொன்னேன். தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. 3 மாநகராட்சிகளில் மட்டும்தான் இந்தத் திட்டம் வந்து சேருகிறது. மீதமுள்ள சேலம், திருநெல்வேலி, திருச்சி ஆகிய 3 மாநகராட்சிகளையும் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துவிட்டு வந்துள்ளேன். இத்திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால் இந்தியாவில் இருக்கக்கூடிய முக்கியமான மாநகராட்சிகளில் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்து உள்ளது. 63 நகரங்களை மத்திய அரசு தேர்ந்து எடுத்திருக்கிறது. அப்படி தேர்ந்தெடுத்து இருக்கின்ற மாநகராட்சிகளில் தமிழ்நாட்டில் 3 மாநகராட்சிகளில் ஒன்று நமது மதுரை மாநகராட்சி. உள் கட்டமைப்பை மாற்றுவதற்கும் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் மதுரை மாநகராட்சிக்கு பல வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வருவதற்கு இத்திட்டத்தை பயன்படுத்த இருக்கிறோம். இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ.2,361 கோடி மதிப்பீட்டில் திட்டங்களைத் தீட்டி அதற்கான ஒப்புதலை நாம் பெற்று இருக்கிறோம். விரைவில் அந்தப் பணிகள் எல்லாம் தொடங்க இருக்கிறது. 2 அல்லது 3 ஆண்டுகளில் மதுரை நகரமே சிங்கப்பூர் அளவுக்கு வரக்கூடிய சூழ்நிலை உள்ளது என்று மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ரூ.256.87 கோடியில் 11 கால்வாய்களை சீரமைக்கின்ற பணி, ரூ.59.12 கோடியில் வைகை அணையில் இருந்து 600 மி.க. அடி நீரைச் சுத்திகரித்து இந்த மாநகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், மதுரை மாநகரில் இருக்கக்கூடிய 79 குடிசைப் பகுதிகளில் 12,078 குடிசை வீடுகளை கான்கீரிட் வீடுகளாக ரூ.130.42 கோடி செலவில் மாற்றக்கூடிய திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே இருக்கக்கூடிய மேலக்கால், கோச்சடை, மணலூர் ஆகிய இடங்களில் ரூ.5 கோடி மதிப்பிலே தடுப்பணை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை ரூ.74.29 கோடியில் அந்த பணிகளை மேற்கொள்ளுதல், ரூ.26.26 கோடி செலவில் மதுரை மாநகராட்சியில் முந்தைய பாதாளச் சாக்கடை திட்டத்தில் சேர்க்கப்படாத பகுதிகளை அந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறச் செய்வது, மாநகரின் பழமையான பாரம்பரியமிக்க இடங்களை ரூ.117 கோடி செலவில் மேம்படுத்துதல், ரூ.65.65 கோடி செலவிலே காய்கறிச் சந்தையை அமைத்தல், அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைத்தல் ஆகிய பணிகள் எல்லாம் மேற்கொள்ளபட இருக்கிறது. நமது அரசால் பல திட்டங்கள் மதுரையில் மட்டுமில்லாமல் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

மேலும் பெண்கள் புதிய சக்தியுடன் வளர்ச்சி பெறவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பலதுறைகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து எண்ணற்ற திட்டங்களை பெண்களுக்காகச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒதுக்கீடு அடிப்படையில் தமிழகத்தில் உள்ள 6 மாநகராட்சிகளில் 2 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 3 பேர் பெண்கள், நகராட்சிகளில் 152 பேரில் 51 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 60 பேர் பெண்கள். மாவட்ட ஊராட்சிகளில் 29 பேரில் 10 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 11 பேர் பெண்கள், 561 பேரூராட்சிகளில் 187 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 212 பேர் பெண்கள், 385 ஊராட்சி ஒன்றியங்களில் 140 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 173 பேர் பெண்கள், 12,618 கிராமப் பஞ்சாயத்துகளில் 4,275 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 4,968 பேர் பெண்கள் என மகளிர் வளர்ச்சியடைய வேண்டும் என்று சட்டமன்ற, நாடாளுமன்றத்திலும் முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

ரூ.10.50 கோடி மதிப்பீட்டில தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஹார்விப்பட்டியிலும், ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் ஆனையூரிலும் புதிய திட்டப்பணிகளும், 165.00 லட்சம் மதிப்பீட்டில் கள்ளந்திரி, அலங்காநல்லூர் மற்றும் சமயநல்லூர் ஆகிய மூன்று சுகாதார நிலையத்தினையும் மேம்படுத்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்துதல் என மொத்தம் ரூ.42.75 கோடிகள் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளும்,தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையம் மூலம் மாவட்ட விளையாட்டு அரங்கில் ரூ.4.07 கோடி



மதிப்பீட்டில் 400 மீட்டர் சிந்தடிக் ஓடுதள பாதை, சிந்தடிக் கூடைப்பந்து மைதானம், சிந்தடிக் டென்னிஸ் மைதானம், செயற்கை புல் கால்பந்து மைதானம், மைதானத்தைச் சுற்றி இரும்பு தடுப்பு வேலி. ஜிம்னாஸியம் ஆகியவைகளும், ரூ.157.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள், திருமங்கலம், வீரப்பெருமாள்புரம், கருப்பாயூரணி, பேரையூர் ஆகிய கட்டடங்களும், தொழில் நுட்பக்கல்வி கோட்டத்தின் மூலம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அரசு மகளிர் பல்தொழில் நுட்பக்கல்லூரியில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைகள், வரைவு அரங்கம் மற்றும் தளவாடச்சாமான்கள் ஆகியனவாகும், ரூ.65.80 லட்சம் மதிப்பீட்டில் மண்டல நோய் கண்டறிய ஆய்வுக்கூடம், மதுரை, வெள்ளதூர், அவனியாபுரம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தாட்கோ மூலம் ரூ.44.70 லட்சம் மதிப்பில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி கூடுதல் பள்ளிக் கட்டடம், தமிழ்நாடு குடிநீ வடிகால் வாரியம் மூலம் ரூ.22.95 லட்சம் மதிப்பீட்டில் மேலூர், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டப்பணிகள் ஆக மொத்தம் ரூ.7.98 கோடியில் நிறைவுபெற்ற திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன எனவே இந்த அரசு செயல்படுத்தி வரும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு தாருங்கள்," என்று கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றும்போது, இங்கு கலந்துகொண்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக அரசின் செயல்பாடுகளுக்கு மனப்பூர்வமாக பாராட்டுக்களை தெரிவித்தனர். ஒரு தாய் தந்தை எப்படி தனது குழந்தையின் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறார்களோ அதுபோல தமிழச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு தாயாக தந்தையாக இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிகாலை 5.00 மணிக்கு தொலைபேசி அழைப்பு வந்தால் அது மாண்புமிகு முதல்வர் அவர்களாகத்தான் இருக்கும். இரவு 11.00 மணிக்கு தொலைபேசி அழைப்பு வந்தால் அது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களாகத்தான் இருக்கும். இன்றைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நல்ல தலைவர்கள் கிடைத்துள்ளார்கள். அதனால்தான்



# தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்தின் தலைவர் உறுப்பினர்கள் நியமனம்

***மாண்புமிகு தமிழக முதலமைச்சர்***

***கலைஞர் அவர்கள் அறிவிப்பு***

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களைத் தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாடு வீட்டுப்பணியாளர் நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் தலைவராக, தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அரசுப் பிரதிநிதிகளாக, தொழிலாளர் நலஆணையர், நிதித் துறைச் செயலாளர், சட்டத்துறைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோரையும்; வேலையளிப்போர் பிரதிநிதிகளாக, உத்திரமேரூர் திருமதி. க.சு.வசந்தராணி, திருச்செங்கோடு, திருமதிபி.பாப்பாத்தி, தண்டையார்பேட்டை, திருமதி. வண்ணைதேவகி, சீர்காழி திருமதி. ஏ. இறை எழில், சேலம் திருமதி. ஆர். கோவிந்தம்மாள், சென்னை திரு.நாராயணசாமி தொழிலாளர் பிரதிநிதிகளாக, விழுப்புரம் திருமதி. மெரினா இராமலிங்கம், சென்னை திருமதி. டி.ஏ.லதா, டி.இராஜேஸ்வரி, பொள்ளாச்சி திருமதி. கே.சுவர்ணம், தேனி திருமதி. கலைமதி குணசேகரன் ஆகியோரையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இன்றைக்கு திட்டங்கள் எல்லாம் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. நமக்கு நல்ல முதல்வர் கிடைத்திருக்கின்றார். இந்த அரசு எதைச் செய்தாலும் அதை மக்களுக்காகச் செய்கின்ற அரசாக உள்ளது. தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை மதுரைக்கு கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார். மத்திய அரசின் நிதி ரூ.100 கோடியும், மாநில அரசின் நிதி ரூ.30 கோடியும் மொத்தம் ரூ.130 கோடியில் எய்ம்ஸ் மருத்துவமனை மதுரையில் அமைய உள்ளது. இந்தப் பணி ஒரு வருடத்தில் நிறைவடையும். இங்கே ரூ.22 கோடியில் புதிய மருத்துவமனைக் கட்டடம் கட்டப்படவுள்ளது. இதற்கு நவீன உபகரணங்கள் வாங்க ரூ.10 கோடியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார். எனவே இந்த அரசுக்கு அனைவரும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.எஸ்.ஜவஹர்.இ.ஆ.ப., தலைமையுரையாற்றினார். இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் துறைமுக துறை அமைச்சர் வெள்ளக்கோவில் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

* * *

## ஆதிதிராவிட மாணவர்கள் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி படிக்க ரூ.25,000 நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டம் பயின்ற ஆதிதிராவிட மாணவியர் சட்டத் தொழில் தொடங்க, அதாவது கட்டிட வாடகை செலுத்தி, புத்தகங்கள் மற்றும் மரச்சாமான்கள் வாங்க ரூ.5,000 மானியமாக வழங்கும் திட்டத்தினை 1996 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார். அத்திட்டம் கடந்த கால ஆட்சியாளர்களால் நிறுத்தப்பட்டது. பின்னர், 5ஆவது முறையாக பதவியேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் மீண்டும் சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு தொழில் தொடங்கிட மானியம் ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்க ஆணையிட்டு, முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாண்டு முதல் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி ஆகிய தேர்வுகளில் முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட மாணவ மாணவியர் அத்தேர்வில் வெற்றி பெற ஏதுவாக அவர்கள் புத்தகங்கள் வாங்கிடவும், மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.25,000 வீதம் 100 மாணவர்களுக்கு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். ஏழை எளிய மக்களின் பாதுகாவலராக விளங்கக் கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இப்புதிய திட்டத்தின் மூலம் ஏழை ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள் உயர் பதவிகளைப் பெற்றிட அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. ✶

# தமிழக அரசு
# மக்களுடைய எண்ணங்களையும் தேவைகளையும் உணர்ந்து செயலாற்றி வருகிறது

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உரை



திரு. **கே. கண்ணதாசன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல் மாவட்டம்.

**நா**மக்கல் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மற்றும் எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கியும் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தும்–அடிக்கல் நாட்டியும், பல்வேறு துறைகளின் சார்பில் ஏராளமான பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கியும் உரையாற்றினார். நாமக்கல் அரசு மேல் நிலைப்பள்ளி (தெற்கு) மைதானத்தில் **30.8.2007** அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், எரிவாயு இணைப்புகளுடன் இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய கட்டடங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு அரங்கம் அடிக்கல் நாட்டு விழா, கமலாலயக் குளப்பூங்கா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி பொருளாதார கடன் வழங்கும் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோ.சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பேருரையாற்றினார். அவர் பேசியதாவது:–

நாமக்கல் தமிழ்நாட்டிலேயே இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் முதல் மாவட்டமாக விளங்குகிறது என பத்திரிகையில் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன் . இதுபோன்று அனைத்து மாவட்டங்களும் அரசின் திட்டங்கள்ள விரைந்து மக்களுக்குக் கொண்டு செல்வதில் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும். நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கப்படுகின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் அத்திட்டங்களை பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதில் தீவிரம் காட்டி வருவது பாராட்டுக்குரியதாகும். இச்செயல் குறித்து மாவட்ட

ஆட்சியரை மிகவும் பாராட்டுகிறேன் . இவ்விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தாலும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம்தான் ஒரு சீரிய திட்டமாகும்.

**தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றம்**

முதல்வர் கலைஞர் அவர்கள் கடலூரில் நடைபெறும் விழாவில் கலந்துகொண்டு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குகிறார். இதுபோன்ற விழா இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது. எத்தனையோ கட்சிகள் தேர்தலில் பல வாக்குறுதிகளை தேர்தல் நேரத்தில் அறிவித்து ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகு



அதனை மறந்து விடுகிறார்கள். ஆனால் நமது முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை ஆட்சி அமைத்த உடனேயே ஆளுநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்த அதே விழா மேடையிலேயே தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியான ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கான திட்ட கோப்பில் கையெழுத்திட்டார். தொடர்ந்து ஏழை விவசாயிகளின் கடன் ரூபாய் 7 ஆயிரம் கோடியினை தள்ளுபடி செய்யும் கோப்பில் கையெழுத்திட்டார். தேர்தல் வாக்குறுதியில் கூறியதையும் நிறைவேற்றினார். தேர்தல் வாக்குறுதியில் சொல்லாததையும் நிறைவேற்றியுள்ளார் நமது முதல்வர் கலைஞர் அவர்கள். சத்துணவில் வாரம் 2 முட்டை என்பதை மேலும் விரிவுபடுத்தி பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாளாக" அறிவித்து அந்நாளில் மேலும் 1 முட்டை என விரிவுபடுத்தி வாரம் 3 முட்டைகள் சத்துணவில் வழங்கினார்கள். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 2006 – 2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில்; ''வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஒவ்வொருவருக்கும் செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல் படுத்தப்படும்'' என அறிவிக்கப்பட்டது.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

அதன்படி தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 15.9.2006 அன்று அண்ணா பிறந்த நாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்திலுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் முதல் கட்டமாக 30 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கி தொடங்கி வைத்தார். மறுநாள் 16.9.2006 அன்று அமைச்சர் பெருமக்கள் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து சமத்துவபுரம் குடியிருப்புகளுக்கும் நீலகிரி மாவட்ட மக்களுக்கும், சென்னை மாநகரில் இரண்டு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார். மேலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மிகப் பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதில் குறிப்பாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தான் மிகப் பெரிய திட்டமாகும். 5 ஆண்டுகளில் படிப்படியாக

மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இதனால் கிராம ஊராட்சியை சேர்ந்த மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளும் பெறுவார்கள். மேலும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் 2008ல் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மாநிலத்தில் 561 பேரூராட்சிகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. முதற்கட்டமாக 140 பேரூராட்சிகளில் தலா



ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணி நடைபெற உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சிகளில் முதல் 4 பேரூராட்சிகளான ஆர்.புதுப்பட்டிபட்டணம், காளப்பநாய்க்கன்பட்டி, சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. தொடர்ந்து இந்த அரசு பொறுப்பேற்றபின் நகராட்சிகளின் கடன்களை ரத்து செய்துள்ளது. மாநிலம் முழுவதும் ரூபாய் 760 கோடியும், நாமக்கல் மாவட்டத்தில் 4 நகராட்சிகளில் ரூ.37 கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 25 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 19.8.2007 வரை 17 இலட்சத்து 67 ஆயிரத்து 489 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு, இதுவரை 15 இலட்சத்து 32 ஆயிரத்து 370 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவச மாக வழங்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டதில் இதுவரை 6 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 126 கிராம ஊராட்சிகளில் 56,820 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, ஏழை, எளிய தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம் 14.1.2007 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டு, அதே நாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கினார்கள்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்**

20.8.2007 வரை தமிழகம் முழுவதும் 2 இலட்சத்து 94 ஆயிரத்து 690 எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 6,709 பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கப் பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் நவம்பர் 2007 வரை 11,903 பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கடலூரில் 30.8.2007 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு அடுப்புகளையும் ஏழை, எளிய தாய்மார்களுக்கு வழங்கும் விழா நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து இன்று இவ்விழாவில் 4,832 பயனாளிகளுக்கு ரூ.169.12 இலட்சம் மதிப்பில் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டியும், 2,976 ஏழை, எளிய தாய்மார்களுக்கு ரூ.59.52 இலட்சம் மதிப்பில் எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளும் வழங்கப்படுகிறது. இதனைத் தவிர, வருவாய் துறை சார்பில் 1,000 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், ரூ.29.60 இலட்சம் மதிப்பில் 823 பயனாளிகளுக்கு விவசாயத் தொழிலாளர் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது.

**நலத்திட்ட உதவிகள்**

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 2,346 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.175.73 இலட்சம் மதிப்பில் சுழல்நிதி மற்றும் பொருளாதார கடன்களும், மகளிர் திட்டம் சார்பில் 4,195 பயனாளிகளுக்கு ரூ.116.66

இலட்சம் மதிப்பில் சுய உதவிக் குழு சுழல்நிதி எழுத்தறிவுத் திட்டம் மற்றும் தொழிற்பயிற்சியும் வழங்கப்படுகிறது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 7 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு திட்டத்தின் முதல் தவணைத் தொகையாக ரூ.24.41 இலட்சம் வழங்கப்படுகிறது.



மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 11,790 மாணவர்களுக்கு ரூ.207.47 இலட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகையும், 22 பயனாளிகளுக்கு ரூ.42,000 மதிப்பில் இலவச சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்கு ரூ.10 ஆயிரம் மதிப்பில் இலவச தையல் இயந்திரமும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 2,709 மாணவர்களுக்கு ரூ.32.17 இலட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகையும், 156 பயனாளிகளுக்கு ரூ.11.90 இலட்சம் மதிப்பில் இலவசவீட்டுமனைப் பட்டாவும் வழங்கப்படுகிறது. சமூகநலத்துறையின் சார்பில் ரூ.43.07 இலட்சம் மதிப்பில் 250 பயனாளிகளுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவியும், 25 பயனாளிகளுக்கு கலப்புத் திருமண நிதி உதவியும், 5 பயனாளிகளுக்கு விதவைத் திருமண நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

சுகாதாரத்துறை சார்பில் 1,503 நபர்களுக்கு ரூ.90.18 இலட்சம் மதிப்பில் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, மாவட்டத் தொழில் மையம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை சார்பில் 517 பயனாளிகளுக்கு ரூ.28.50 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும், இன்றைய விழாவில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் ரூ.653.114 இலட்சம் மதிப்பிலான 2,243 முடிக்கப்பட்ட பணிகள் துவக்கி வைக்கப்படுகிறது. கல்வித்துறையின் சார்பில் ரூ.691.68 இலட்சம் மதிப்பில் நபார்டு திட்டத்தின் மூலம் 9 பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 163 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், 8 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 39 கழிப்பறைக் கட்டடங்களும், அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் ரூ.83.75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 39 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும் துவக்கி வைக்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் ரூ.126 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 மாணவர் விடுதிக் கட்டடங்கள்; கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் ரூ.78.80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் துவக்கி வைக்கப்படுகிறது.

மேலும் ரூ.36.17 இலட்சம் மதிப்பில் நாமக்கல் நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள கமலாலய குளம் பூங்கா மற்றும் ரூ.8 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக பூங்காக்கள் இன்று துவக்கி வைக்கப்படுகின்றன. இவை தவிர ரூ.1 கோடி மதிப்பில் நாமக்கல் மாவட்ட விளையாட்டு அரங்கம், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் ரூ.45 இலட்சம் மதிப்பில் 3 கே.வி.பி.வி. கட்டடங்கள் மற்றும் ரூ.51.60 இலட்சம் மதிப்பில் 3 கூட்டுறவு வங்கி நவீன அலுவலகக் கட்டடங்களும் இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது. இவ்வாறு தமிழக அரசு மக்களுடைய எண்ணங்களையும், தேவைகளையும் மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள். இதற்கு எடுத்துக்காட்டாக இந்த விழாவில் பல்வேறு துறையின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள ரூ.1677.514 இலட்சம் மதிப்புள்ள 2,502 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டும், ரூ.196.60 இலட்சம் மதிப்பிலான 7 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு திட்டங்களின் கீழ் 35,145 பயனாளிகளுக்கு ரூ.12.63 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் நாமக்கல் மாவட்ட மக்களுக்கு ரூ.31.37 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களும் பயன்களும் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் அனைத்தும் சிறந்த முறையில் மக்களைச் சென்றடைந்துள்ளது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்".

விழாவில் 35 ஆயிரத்து 145 பயனாளிகளுக்கு ரூ.12.63 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கு.கோவிந்தராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.



# நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசுதான் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட விழாவில்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை (3.9.2007)

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தில் மாமல்லபுரத்திலே ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய துவக்க விழா, மாமல்லபுரம் பேரூராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தினுடைய அடிக்கல் நாட்டுவிழா, அதேபோல் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே சுனாமி திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட இருக்கக்கூடிய சிறப்புப் பூங்கா அடிக்கல் நாட்டுவிழா. இந்த மூன்று விழாக்களை இணைத்து அத்துடன் பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய விழாக்களையும் இணைத்து இந்த எழுச்சி மிகுந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விழா சிறப்போடு நடைபெற வேண்டுமென்று இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுத் துறை அலுவலர்கள் இதனை சிறப்பாக தங்களுடைய பணியை நிறைவேற்றித் தந்து அதிலே வெற்றி கண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த விழாவைப் பொறுத்தவரையிலே ஒரு மாற்றத்தை நீங்கள் கண்டிட முடியும். அண்மையிலே நடைபெற்றிருக்கக்கூடிய அரசு விழாக்கள், ஏன் நாம் ஆட்சிப் பொறுப்பேற்று இந்த ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் எத்தனையோ நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறோம், எத்தனையோ தொடக்க விழாக்கள், அடிக்கல் நாட்டுவிழாக்களை நடத்தியிருக்கிறோம். ஆனால் அப்படி நடத்தப்படக்கூடிய நேரத்தில் ஜனநாயக முறையோடு அந்தந்த மாவட்டத்திலே, பகுதியிலே, தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கக்கூடிய பிரதிநிதிகள் அது யாராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி அல்லது உள்ளாட்சி அமைப்பின் பொறுப்பிலே இருக்கின்ற யாராக இருந்தாலும் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் உரிய முறையிலே உரிய வகையிலே விளம்பரப்படுத்தப்பட்டு அந்த அழைப்பிதழிலே அச்சடிக்கப்பட்டு, அந்த வகையிலேதான் தொடர்ந்து நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அப்படி நடத்தப்படுகின்ற நேரத்தில் இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அ.தி.மு.க. இதுவரையிலே நான் பங்கேற்றிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையிலே அந்தக் கட்சியைச் சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு, கருத்தரங்கிற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இதுபோன்ற அடிக்கல் நாட்டுவிழாவிற்கு, தொடக்கவிழாவிற்கு, ஒரு திறப்பு விழா நிகழ்ச்சிக்கு இதுவரையில் வந்திருக்கிறார்களா என்றால், வந்திடவில்லை.

ஆனால் மாமல்லபுரத்திலே அந்த வரலாறு இன்றைக்கு மாற்றப்பட்டு, இந்த நிகழ்ச்சியிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைச் சார்ந்த பேரூராட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார் என்று சொன்னால், நான் அதற்காக இந்தத் துறையின் சார்பிலே அந்தப் பேரூராட்சித் தலைவருக்கு என்னுடைய நன்றியை செலுத்த விரும்புகின்றேன் .

இங்கே வந்திருப்பது மட்டுமல்ல, இன்னொன்றையும் நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். இந்த நிகழ்ச்சி எப்படி நடைபெறுகின்றது என்று பார்வையிட, ஆய்வு நடத்த, அதிகாரிகளோடு கலந்து பேச ஏறக்குறைய மூன்று, நான்கு முறை இந்தப் பகுதிக்கு நான் வந்தேன். அப்படி வருகிறபோதெல்லாம் நம்முடைய பேரூராட்சியினுடைய தலைவர் அவர்கள், ஒவ்வொரு முறையும் தவறாமல் அந்த ஆய்வுப் பணியை நாங்கள் மேற்கொள்கிற நேரத்திலே வந்திருந்து, அதுமட்டுமல்ல இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்கு காரணமாக அமைந்திருக்கக் கூடியவர்களில் அவரும் ஒருவராக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்காக நான் இந்த விழாக் குழுவின் சார்பிலே, இந்தத் துறையின் சார்பிலே என்னுடைய நன்றியை முதலில் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

**பேருந்து நிலையம்**

இன்றைக்கு இந்த விழா சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அம்மையார் யசோதா அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள், நம்முடைய பேரூராட்சியின் தலைவர் அவர்கள் கூட இங்கே பேசுகிற போது ஒரு கோரிக்கையை குறிப்பிட்டு சொன்னார். இந்தப் பேரூராட்சியிலே பல மாநிலங்களிலிருந்து, பல நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் எந்த அளவிற்கு இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள், அப்படி வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக நவீன முறையிலே ஒரு பேரூராட்சியின் பேருந்து நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இங்கே எடுத்து வைத்தார். இங்கே நான் வெளிப்படையாக ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அந்தப் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழாவைக் கூட இந்த விழாவோடு சேர்த்து நடத்த நாங்கள் திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதை தற்காலிகமாக ஒத்தி வைத்திருக்கிறோம். என்ன காரணம் என்று கேட்டால், ஏற்கெனவே பேருந்து நிலையம் இந்த நகரத்திலே இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. மக்கள் நெருக்கடியாக இருக்கக்கூடிய இந்தப் பகுதியிலே பேருந்து நிலையம் இருப்பது என்பது உங்களுக்குத் தெரியும். அந்தப் பேருந்து நிலையத்தை விட்டு, வேறு இடத்திற்கு மாற்றிடக் கூடாது என்று சில கட்சிகளை சார்ந்திருக்கக்கூடியவர்கள், சில வணிகப் பெருமக்கள், குறிப்பிட்ட ஒரு சிலர் அந்தப் பிரச்சினையை எடுத்து வைத்தார்கள்.

அதற்குப் பிறகு நாங்கள் அதிகாரிகளை அழைத்துப் பேசினோம். இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எல்லா கட்சி உறுப்பினர்கள், தலைவர்களை அழைத்து கலந்து பேசி, இன்னும் ஒரு சுமுகமான முடிவுக்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த நிகழ்ச்சியோடு இணைத்து வைக்காமல் அதை தள்ளி வைத்துவிட்டு, ஆனால் நிச்சயமாக உறுதியாக விரைவில் எல்லோருடைய முழு அனுமதியை, ஒத்துழைப்பைப் பெற்று மிக விரைவிலே மத்திய அரசு மூலமாக சுற்றுலாத் துறை மூலமாக பேருந்து நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதியான



கூடிய 7,000 கோடி ரூபாய் கடனை அறவே ரத்து செய்யப்படும் என்று அறிவித்த அறிவிப்பாக இருந்தாலும், சத்துணவிலே வாரத்திற்கு மூன்று முறை முட்டை. ஏற்கெனவே அறிவித்தது இரண்டு முறை தான். ஆனால் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடிட வேண்டுமென்று நம்முடைய அரசு ஆணையிட்டு, அதனுடைய அடிப்படையிலேதான் இன்று வாரத்திற்கு மூன்று முறை முட்டை வழங்கக்கூடிய அந்த திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இரண்டரை கோடி ரூபாயில் நிச்சயமாக அந்தப் பேருந்து நிலையம் விரைவிலே கட்டப்படும் என்பதை நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் ரயில் பாதையைப் பற்றி இங்கே குறிப்பிட்டு சொன்னார். அவர் ஏற்கெனவே இந்தத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பிலே இருந்ததையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் இன்றைக்கு அவர் வகித்தப் பொறுப்பு யாரிடத்தில் இருக்கிறது என்று கேட்டால், அவர் கட்சியைச் சார்ந்த இரயில்வே துறை இணை அமைச்சராக இருக்கக்கூடிய வேலுவிடத்திலே தான் இருக்கிறது என்பதையும் நம்முடைய மூர்த்தி அவர்கள் மறந்துவிடக்கூடாது.

**உறுதிமொழிகள் காப்பாற்றப்படுகின்றன**

எது எப்படியிருந்தாலும் நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசுதான் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாக தெரிவிக்க விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்கள், நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால் என்னென்ன வாக்குறுதிகளை நிறைவேற்றப்போகிறோம் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த உறுதிமொழிகள் எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு காப்பாற்றப்படுகின்றது என்பதை நீங்கள் உணர்ந்திட வேண்டும். ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடிமக்கள் கூட்டுறவு வங்கியில் வாங்கியிருக்கக்

திருமணத்திற்கு உதவித் தொகையாக 15 ஆயிரம் ரூபாய். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச் சத்துக்காக உதவித் தொகையாக 6 ஆயிரம் ரூபாய். இலவச எரிவாயு அடுப்பு ஏழை எளிய மக்களுக்கு வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், பட்டா வழங்கக்கூடிய பணியாக இருந்தாலும், படித்து பட்டம் பெற்று வேலைவாய்ப்பில்லாமல் இருக்கக்கூடிய பட்டதாரி களுக்கு வேலை கிடைக்கிற வரையிலே உதவித் தொகை வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் யார் யாருக்கு இல்லையோ அவர்கள் ரேஷன் கார்டு வைத்திருந்தால் போதும். அத்தனை பேருக்கும் வழங்குவோம் என்று தந்த அந்த உறுதிமொழியாக இருந்தாலும், இன்றைக்கு எந்த அளவிற்கு அவைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகிறது என்பதை நீங்கள் எல்லாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**மிகப் பெரிய திட்டம்**

அந்த அடிப்படையிலேதான், நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற வுடனே முதலில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே ஒரு பெரிய திட்டத்தை அறிவித்தோம். இன்றைக்கு மத்திய அரசின் மூலமாக, மாநில அரசின் மூலமாக எத்தனையோ திட்டங்கள் நமக்குக் கிடைக்கலாம். அப்படி கிடைக்கக்கூடிய திட்டங்களுக்கெல்லாம் பல்வேறு வகையிலே, பல்வேறு தலைப்புக்களில் இன்றைக்கு நிதிகள் வந்து சேர்ந்து கொண்டிருக்கலாம். ஆனால், அது எந்த திட்டமாக இருந்தாலும், அனைத்துத் திட்டங்களையும் வெல்லக்கூடிய வகையிலே, ஒரு மிகப் பெரிய திட்டமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கக் கூடிய திட்டம்தான் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நாம் ஆட்சிக்கு வந்தவுடனே முதல் நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டத்தை அறிவித்தோம்.

இன்றைக்கு தமிழகத்திலே 12,618 கிராம ஊராட்சிகள் இருக்கிறது என்று சொன்னால், அதற்காக 2,536 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த ஐந்து ஆண்டுகளில் 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே, அந்த திட்டத்தை நாம் அறிவித்தோம். அந்த திட்டத்தை கடந்த ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கே சென்று, நெமிலி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருமாகளம்பாக்கம் என்ற அந்த கிராமத்திலேதான் இந்தத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். 2006–2007ஆம் ஆண்டிலே கடந்த ஆண்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2,500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த திட்டம் நடந்திருக்கிறது.

அதேபோல, இந்த ஆண்டு 2007–2008ஆம் ஆண்டு மீண்டும் 2,534 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்காக 507 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு நம்முடைய முதல்வர் அவர்கள் அருகில் இருக்கக்கூடிய குன்னப்பட்டு என்ற கிராம ஊராட்சிக்குச் சென்று, அங்கே அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் சார்பிலே நிறைவேற்றப்பட்டிருக்கிற அந்தப் பணிகளை எல்லாம் நேரடியாகப் பார்த்தார்கள். அங்கே குளம் எழுப்பப்பட்டிருக்கிறது, பள்ளிக் கட்டடங்கள் சீரமைக்கப்பட்டிருக்கிறது, புதிதாக விளையாட்டுத் திடல் உருவாக்கப்பட்டிருக்கிறது, நூல் நிலையம் அமைக்கப் பட்டிருக்கிறது, சிமெண்ட் சாலைகள் போடப்பட்டிருக்கிறது, தெரு விளக்குகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன, ஏன் கடைசியாக மனிதன் போய் சேருகிறானே சுடுகாடு, அந்தச் சுடுகாட்டைக்கூட இன்றைக்கு சீர்படுத்தி அமைக்கப்பட்டிருக்கிற அந்த இடத்தைக்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் பார்த்து விட்டுத்தான் இந்த மேடைக்கு வந்திருக்கிறார்கள்.

### ரூ.250 கோடி நிதிஒதுக்கீடு

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் இப்படி பல பணிகளை நாம் இந்த இரண்டு ஆண்டு காலமாக தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் , இன்றைக்கு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இதை இந்த ஆண்டு அறிவித்தோம். அறிவித்த இந்தத் திட்டத்தை நான்கு ஆண்டு காலத்திற்குள்ளாக நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்று சொல்லி, அந்தப் பணியை இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த வரலாற்று சிறப்புக்குரிய இந்த மாமல்லபுரத்திலே அதை தொடங்கி வைக்க வருகை தந்திருக்கிறார்கள்.

> **“2006–2007ஆம் ஆண்டிலே கடந்த ஆண்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2,500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தத் திட்டம் நடந்திருக்கிறது.**
>
> **அதேபோல, இந்த ஆண்டு 2007–2008ஆம் ஆண்டு மீண்டும் 2,534 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்காக 507 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம்.”**

தமிழகத்திலே எத்தனை பேரூராட்சிகள் இருக்கிறது. 561 பேரூராட்சிகள். இந்த 561 பேரூராட்சிகளுக்கு நான்கு ஆண்டு காலத்திலே எல்லாப் பணிகளை நிறைவேற்றி முடிக்க, அதற்காக 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக 140 பேரூராட்சிகளைத் தேர்ந்தெடுத்து அதற்காக 70 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்த காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான்கு பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அம்மையார் யசோதா அவர்கள் அவருடைய தொகுதியிலே இரண்டு பேரூராட்சிகள் தேர்வாகியிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். ஆம் உண்மைதான். இன்றைக்கு உத்திரமேரூர் பேரூராட்சி, கருங்குழி பேரூராட்சி, குன்றத்தூர் பேரூராட்சி, இடைக்கழிநாடு பேரூராட்சி, மாங்காடு பேரூராட்சி, மாமல்லபுரம் பேரூராட்சி ஆக இந்த 6 பேரூராட்சிகள் இன்றைக்குத் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்சம் ரூபாய் நிதியை இந்தத் துறையின் சார்பிலே ஒதுக்குகிறோம்.

நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். இதுவரையிலே தமிழக வரலாற்றிலே இல்லாத அளவிற்கு ஒரு பேரூராட்சிக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி வருகிறது

என்று சொன்னால், இதுதான் முதல் முறை, இந்த ஆட்சியில்தான் அது நடந்திருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டுக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மாமல்லபுரம் பேரூராட்சியைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு நிறைவேற்றப்பட இருக்கக்கூடிய பணிகள் என்ன. ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக 2 கோடியே 56 இலட்சம். சொர்ண ஜெயந்தி ரோஜ்கார் ரோஜனா திட்டட்தின் கீழ் 3 இலட்சம், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 61 இலட்சம், பாதாளச் சாக்கடை திட்டத்திற்காக 6 கோடியே 8 இலட்சம், சுனாமி அவசர கால உதவி திட்டத்தின் அடிப்படையிலே 3 கோடியே 60 இலட்சம், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 6 இலட்சம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம், பொதுநிதியிலிருந்து 3 இலட்சம், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்திலிருந்து 25 இலட்சம், தனியார் பங்கு மூலமாக 16 இலட்சம் ஆக 13 கோடியே 43 இலட்சம்.

அதேபோல பிறதுறைகள், பொதுப்பணித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், நெடுஞ்சாலைத் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இந்தத் துறைகளின் சார்பிலே 18 கோடியே 12 இலட்சம். ஆக ஒட்டுமொத்தமாக இந்தப் பேரூராட்சியை பொறுத்தவரையிலே நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன் . 31 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியைப் பெற்று இந்தப் பேரூராட்சியில் பல பணிகள் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதைத்தான் இன்றைக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைக்க வருகை தந்திருக்கிறார்கள்.

இந்த மாமல்லபுரத்தைப் பற்றி பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாமல்லபுரம் என்பது வரலாற்றுக்குரிய சிறப்புமிக்க ஊராக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதில் யாருக்கும் மாறுபாடு, வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை. பல்லவர்களுடைய கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை இன்றைக்கும் உலகிற்கு எடுத்துக்காட்டக்கூடிய வகையிலே ஒரு சரித்திரச் சான்றாக இந்த மாமல்லபுரம் விளங்கிக் கொண்டிருக்கிறது. மாமல்லபுரத்திலே பல்லவர்கள் குகைக் கோயில்களை அன்றைக்கு அமைத்திருக்கிறார்கள். மகாபலிபுரம் என்ற பெயரை மாமல்லபுரம் என்று அன்றைக்கு மாற்றி சூட்டியவர் முதலாம் நரசிம்மவர்மன் தான். அன்றைக்கு இந்தப் பெயரையே சூட்டி மகிழ்ந்திருக்கிறான். இந்த ஊரைப் பற்றி இன்னொரு பெருமை என்னவென்றால், இங்கு இருக்கக்கூடிய சிலைகளையெல்லாம் பார்க்கிறோமே செங்கல், சுண்ணாம்பு, மரம், இரும்பு இவைகள் இல்லாமலேயே வெறும் கற்கோயில்களை அமைத்த பெருமை இந்த மாமல்லபுரத்திற்கு உண்டு. அதை அமைத்துத் தந்த பெருமை யாருக்கு என்று கேட்டால் முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் நரசிம்மனையே சாரும். அந்த நல்லாட்சியை தொடரவிடாமல், அன்றைக்கும் பல இடையூறுகள் இருந்திருக்கிறது. வரலாறுகள் சொல்கிறது. அந்த நல்லாட்சியை தொடரவிடாமல் சாளுக்கியர்கள் எதற்கெடுத்தாலும் போர் தொடுத்திருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் ஆக்கிரமித்து பணிகளை எல்லாம் நடக்கவிடாமல் தடுத்த முயற்சிகள் எல்லாம், இடையூறு செய்த அந்தக் கொடுமைகள் எல்லாம் அன்றைக்கும் இருந்திருக்கிறது. அன்றைக்கு இந்தக் கொடுமைகள் இருந்த காரணத்தினால்தான் எப்படியாவது பல்லவர்களுடைய தலைநகரமாக இருக்கக்கூடிய இந்த காஞ்சிபுரத்தை எப்படியாவது பிடிக்க அந்த சாளுக்கியர்கள் முயற்சித்தார்கள். ஆனால் இறுதியிலே என்ன நடந்தது. மகேந்திரவர்மன் சாளுக்கியர்களை விரட்டியடித்து தன்னுடைய தலைநகரமாக இருக்கக்கூடிய காஞ்சிபுரத்தை தக்க வைத்துக்கொண்டான் என்பதுதான் வரலாறு. எனவே பல்லவர்கள் ஆட்சி அமைதியாக நடப்பதற்கு சாளுக்கியர்கள் தொல்லைகள் தராமல் இருந்திருந்தால் பல்லவர்கள் ஆட்சி மேலும் பல சாதனைகளைப் படைத்திருக்க முடியும் என்று தென்னிந்திய வரலாறு நூலிலே ஆசிரியரான நீலகண்ட சாஸ்திரி அவர்கள் இந்த குறிப்பை வெளியிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதேபோலதான் இன்றைக்கு தமிழகத்திலே நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் எந்தத் திட்டங்களைத் தீட்டினாலும், எந்தப் பணிகளை நிறைவேற்றினாலும், அதற்கு வரக்கூடிய இடையூறுகள் எல்லாம் இன்றைக்கு வந்து கொண்டிருந்தாலும், அந்த இடையூறுகளை எல்லாம் தகர்த்தெறிந்து தமிழ்நாட்டு மக்களுக்காக சாதனை புரிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு முதல்வராக இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் அறிவித்ததை சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற அந்த தாரக மந்திரமல்ல. இன்றைக்கு சொல்லாததையும் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறப்பான ஆட்சி தமிழ்நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அதை எடுத்துக்காட்டக்கூடிய வகையிலேதான் இந்த அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கி அந்தப் பணியை மக்களுக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சிக்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய துறையின் சார்பிலே நன்றியை, வணக்கத்தை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன் . ★

# பார்வையற்ற 38 பேருக்கு அரசுப்பணி

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.**பரிதி இளம்வழுதி** அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்



சென்னை அரசு மைய அச்சகத்தில் கண் பார்வையற்ற 9 பேருக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையில், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையில் 769 காலிப் பணியிடங்களை நிரப்ப அனுமதி வழங்கப்பட்டது. அதில் 320 இளநிலை புத்தகம் கட்டுநர் பணியிடங்கள் அடங்கும். அவற்றில் 38 பணியிடங்களைக் கண்பார்வையற்றவர்களைக் கொண்டு நிரப்ப அரசு ஆணையிட்டது. அதனடிப்படையில் அரசு, தொழில்நுட்ப தகுதிகளைத் தளர்த்தி ஆணையிட்ட பின்பு நிலைத் தேர்வுக்குழு 8.8.2007 அன்று கூடி, தகுதி வாய்ந்த 38 நபர்களைத் தேர்ந்தெடுத்தது.

இவர்களில் சென்னை மாநகரில் வசிக்கும் ஒன்பது கண்பார்வையற்ற நபர்களுக்கு அரசு மைய அச்சகத்தில் இளநிலை நூல்கட்டுநர் பணிக்கான பணியமர்வு ஆணைகளை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களால் நேரடியாக வழங்கப்பட்டது.

தேர்வு செய்யப்பட்ட எஞ்சிய 29 நபர்களுக்கு ஆணைகள் தனியே அஞ்சல் வழி அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், 20.8.2007 அன்று, தலைமைச் செயலகத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றனர்.




17.8.2007 அன்று, சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னையில், வள்ளலார், பரிதிமாற் கலைஞர், மறைமலை அடிகளார் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார். உடன் மாண்புமிகு மத்திய தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ.ராசா, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப, பொதுத்துறைச் செயலாளர் திரு.தேவ ஜோதி ஜெகராஜன்,இ.ஆ.ப, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.து.இராசேந்திரன்,இ.ஆ.ப., முதன்மைத் தலைமை அஞ்சல்துறைத் தலைவர் திருமதி.இந்திரா கிருஷ்ணகுமார் மற்றும் முனைவர் திருமதி.சாரதா நம்பி ஆரூரன் ஆகியோர் உள்ளனர்.

# அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி சென்னைப் பெருநகர்ப்பகுதி இரண்டாம் முழுமைத் திட்டம் அமையும்

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்**

**திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் உரை**



சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் 29.8.07 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் ஆற்றிய உரை:-

மனித நாகரிக வளர்ச்சியின் அடையாள மாகத் தான் நகரங்கள் விளங்கி வருகின்றன. மனிதச் சிந்தனையால் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக மனிதன் தனது ஆதி தொழிலான வேளாண்மை யிலிருந்து மெல்ல மெல்ல வளர்ந்து பல்வேறு தொழில்களை உருவாக்கினான். தொழில்கள் நவீன வடிவம் பெற்றவுடனேயே வாழ்க்கை முறையும் வெகுவாக மாற்றமடைந்தது. இந்தத் தவிர்க்க இயலாத மாற்றத்தின் காரணமாக தனது வாழ்விடங்கள் குறித்தும் மனிதன் சிந்தித்தான். அதற்கேற்ப திட்டமிட்டான். வாழ்விடங்கள் குறித்த திட்டமிடுதல் மிகவும் முதன்மையானதாகும். ஏனென்றால் இதற்கேற்பத்தான் நாளைய தலைமுறை வளர்ச்சியடைந்த சமூகமாக உருவாக முடியும்.

அத்தகைய வளர்ச்சியையும், நமது சந்ததியின் வெற்றியையும், குறித்து மிகுந்த அக்கறையோடு இங்கே வருகை தந்து அரசின் இந்த சீரிய முயற்சிக்கு உங்களது பங்களிப்பையும் மேலான ஆலோசனைகளையும் வழங்க வந்துள்ள உங்கள் அனைவருடைய ஆர்வத்திற்கும், கடமையுணர்விற்கும் எனது பாராட்டை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிகழ்காலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மட்டுமே ஒரு அரசின் பணியாக இருக்க முடியாது. எந்த ஒரு அரசிற்கும் தொலைநோக்குப் பார்வை என்பது மிகவும் முதன்மையானதாகும். எதிர்காலம் குறித்த திட்டமிடுதலை திறம்படச் செய்து முடித்து வெற்றி கண்ட அரசு தலைவர் கலைஞரின் அரசு என்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் நமது சென்னைக்கு ஏற்பட்ட பல நன்மைகளில் ஒரு சிலவற்றை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நமது சென்னையின் மத்தியில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலத்தைப் பார்க்கின்றோம். சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் அந்தப் பாலம் உருவாக்கப்பட்டது என்பதை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.



அன்றைய போக்குவரத்தை மட்டும் கருதியிருந்தால் அந்தப் பாலம் உருவாகியிருக்க முடியாது. இன்றைய தினம் பெருகிவிட்ட வாகனங்களுக்கும் போக்குவரத்து நெரிசல்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அண்ணா மேம்பாலத்தை அன்றே கழக அரசு உருவாக்கியுள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல அண்ணா நகரும் அதே காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1901–ஆம் ஆண்டு சென்னையின் பரப்பளவு 68 சதுர கிலோ மீட்டர், 1981–ஆம் ஆண்டில் இது 176 சதுர கிலோ மீட்டராக வளர்ந்தது. இந்தக் கணக்கெடுப்புக்குப் பின்னர் கால் நூற்றாண்டைக் கடந்து இன்றைக்கு நாம் அடுத்தகட்ட வளர்ச்சியைப் பற்றி இங்கே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இதே போல மக்கள்தொகை வளர்ச்சி குறித்தும் எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்த 2001–ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கள்தொகை 43.44 இலட்சம். இதற்கு 95 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, 1905–ஆம் ஆண்டு சென்னையின் மக்கள்தொகை 5 இலட்சத்து 40 ஆயிரம் பேர்கள்தான். இப்படி பலமடங்கு மக்கள் தொகை வளர்ச்சியால் சென்னையின் பரப்பளவு விரிவடைந்து வருவதுடன், நகரின் உள்கட்டமைப்பு களிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

எப்போதுமே சென்னை மாநகரின் வளர்ச்சியைப் பற்றிய தணியாத ஆர்வமும், மேலான அக்கறையும் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், முதன்முதலில் 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1974–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைத் தோற்றுவித்தார்கள். 1975–ஆம் ஆண்டு சென்னை மாநகருக்கான முதலாவது முழுமைத் திட்டத்தை உருவாக்கினார். இன்றைக்கு அதே முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசுதான் சென்னை மாநகருக்கான இரண்டாவது முழுமைத் திட்டத்தைத் தயாரித்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதிலே முனைப்புடன் செயலாற்றிக் கொண்டுள்ளது.

மாநகரின் வளர்ச்சிக்கேற்ப பத்தாண்டுகளுக்கு ஒரு முறை திட்டத்தை மறு ஆய்வு செய்து மாற்றி அமைக்கலாம் என்று சட்டவிதிகளும் பொதுவான நியதிகளும் இடங்கொடுத்தாலும் இடைப்பட்ட காலத்தில் பல்வேறு காரணங்களால் அது மேற்கொள்ளப்படாமல் போயுள்ளது.

வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் வரக்கூடிய இடையூறுகளையெல்லாம் களைந்து, தடைக்கற்கள் உண்டென்றாலும் அதனைத் தகர்த்தெரியக் கூடிய திடத்தோள்கள் உண்டு என்கிற வகையில் நமது அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாற்றுக் கருத்துகளை ஒரு போதும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு புறந்தள்ளியதில்லை. கருத்து வேறுபாடு என்பது தவிர்க்க இயலாததுதான். அத்தகைய மாற்றுக் கருத்துகள் யாருக்கேனும் இருக்குமாயின் தயங்காமல் அரசுக்கு கூறலாம் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டுள்ளேன். மக்களின் நல்வாழ்வும் மாநகரத்தின் வளர்ச்சியும் தான் அரசின் குறிக்கோள் ஆகும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் எல்லோருடைய கருத்துகளையும் கேட்டு நல்ல முடிவையெடுத்து நமது மாநகரின் வளர்ச்சியை எட்ட அரசு உறுதியுடன் உள்ளது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



இன்றைய கால கட்டம் மிகவும் இன்றியமையான சூழலில் சென்று கொண்டிருக்கிறது. உலகமயமாக்கல் பற்றி பேசப்படும் நிலையில் சென்னை மாநகரம் ஒரு பன்னாட்டு நகரமாக உருவெடுத்துவிட்டது. தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு இந்தியாவிலேயே மிக உகந்த இடமாக சென்னை வளர்ந்து வருவதால் பன்னாட்டு நிறுவனங்கள் பல இங்கே வந்துள்ளன. மேலும் பல நிறுவனங்கள் வரவுள்ளன. மோட்டார் வாகனத் தொழில் உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களும், வெளிநாட்டினர் இங்கே வந்து சிகிச்சை எடுத்துக்கொள்ளும் வகையில் செயல்படும் தலைசிறந்த மருத்துவமனைகளும் சென்னையில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சி கடந்த ஆண்டு அமைந்த பின்பு, அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவு சென்னையை நோக்கி வந்துள்ளார்கள். ஏனென்றால் பண்பாட்டுச் சுற்றுலா, இயற்கைச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா என சுற்றுலாத்துறை பல புதிய உத்திகளைக் கையாண்டு பன்னாட்டு மக்களையும் சென்னைக்கு வரவழைத்துக் கொண்டுள்ளது. இப்படி பல முனைகளிலும் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் நாம் சென்னை மாநகரின் ஆதீத வளர்ச்சியைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில்தான் நகரத்திட்டமிடுதலை நாம் மேற்கொள்ள வேண்டும். எனவே அடுத்த 25 ஆண்டுகளுக்குத் தேவையான எதிர்பார்ப்பு, வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கி சென்னை மாநகரைப் பொலிவு பெறச்செய்யும் கடமையும் பொறுப்புணர்ச்சியும் அரசுக்கும் அதே நேரத்தில் பொதுமக்களுக்கும் உள்ளது என்பதை நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். நகரை அழகுபடுத்துவது, உயர் தொழில்நுட்பப் பிரிவுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதோடு அரசின் பணி முழுமை அடையாது. கூடவே நகர்ப்புறங்களில் வாழும் நடுத்தர மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களையும் நடைபாதைவாசிகளையும் உள்ளடக்கி அவர்களுக்கும் அனைத்து வாழ்விட வசதிகளையும் ஏற்படுத்தித் தரும் பணிகளையும் அரசு கருத்தில் கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே முதல்முறையாக குடிசைமாற்று வாரியத்தை ஏற்படுத்திய அரசு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசுதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே எல்லாத் தரப்பு மக்களின் பங்களிப்பையும் ஒருங்கிணைத்து ஒரு முழுமையான திட்டமாக அனைத்து அம்சங்களையும் ஒருங்கே கொண்ட ஒரு விரிவான திட்டமாக இந்த இரண்டாம் முழுமைத் திட்டம் அமையும் வகையில் உங்களது மேலான ஆலோசனைகளையும், கருத்துகளையும் தெரிவிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். ★

# 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு வழங்கும் திரைப்பட விருதுகள்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு



தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்படி, சிறந்த முழுநீள தமிழ்த் திரைப்படங்களுக்கும், நடிகர், நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு பரிசுகளும்; தமிழ்த் திரையுலகில் சாதனை புரிந்தவர்களுக்கு கலைத்துறை வித்தகர் விருதுகளும்; திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

2005 மற்றும் 2006 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் 2004–2005, 2005–2006 ஆகிய இரண்டு கல்வி ஆண்டுகளுக்குரிய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குரிய விருதுகள் ஆகியவற்றைத் தேர்வு செய்து பரிந்துரைகள் வழங்கிட நீதியரசர் ச.மோகன் அவர்களைத் தலைவராகவும், இயக்குநர் எஸ்.பி. முத்துராமன், நடிகர் சிவகுமார், நடிகர் சாருஹாசன், இயக்குநர் பி.அமிர்தம், பாடலாசிரியர் கவிஞர் மு. மேத்தா, சென்னைத் தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர் நடராஜன், இசையமைப்பாளர் தேவா, நடிகர் ஒய்.ஜி. மகேந்திரா, நடிகை திருமதி. ஸ்ரீபிரியா, நடிகர் தியாகு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

தேர்வுக் குழுவினர் 2005ஆம் ஆண்டிற்குரிய 48 திரைப்படங்களையும், 2006ஆம் ஆண்டிற்குரிய 44 திரைப்படங்களையும் பார்வையிட்டு, அரசுக்குப் பரிந்துரைகள் வழங்கியுள்ளனர்.

தேர்வுக்குழு செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2005ஆம் ஆண்டிற்கு அனுமதித்துள்ள பரிசுகளும் விருதுகளும் பின்வருமாறு :–

1. சிறந்த படம் – முதல் பரிசு : சந்திரமுகி, கஜினி ஆகிய இரண்டு படங்கள்
2. சிறந்த படம் – இரண்டாம் பரிசு : அந்நியன்
3. சிறந்த படம் – மூன்றாம் பரிசு : தவமாய் தவமிருந்து
4. சிறந்த படம் – சிறப்புப் பரிசு : பிரியசகி
5. பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படம் – சிறப்புப் பரிசு : கஸ்தூரிமான்
6. சிறந்த நடிகர் : ரஜினிகாந்த் (சந்திரமுகி)
7. சிறந்த நடிகை : ஜோதிகா (சந்திரமுகி)
8. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) : விஜய் (திருப்பாச்சி) சூர்யா (கஜினி)
9. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) : மீரா ஜாஸ்மின் (கஸ்தூரிமான்)
10. சிறந்த குணச்சித்திர நடிகர் : ராஜ்கிரண் (சண்டக் கோழி)
11. சிறந்த குணச்சித்திர நடிகை : கலைராணி (கோடம்பாக்கம்)
12. சிறந்த வில்லன் நடிகர் : பிரகாஷ்ராஜ்
13. சிறந்த நகைச்சுவை நடிகர் : விவேக்
14. சிறந்த இயக்குநர் : சங்கர் (அந்நியன் )
15. சிறந்த கதையாசிரியர்: கரு. பழனியப்பன் (சதுரங்கம்)
16. சிறந்த உரையாடல் ஆசிரியர் : கே.கண்ணன் (அமிர்தம்)
17. சிறந்த இசையமைப்பாளர் : ஹாரிஸ் ஜெயராஜ் (அந்நியன், கஜினி)
18. சிறந்த பாடலாசிரியர் : நா. முத்துக்குமார்
19. சிறந்த பின்னணிப் பாடகர் : ஸ்ரீராம் பார்த்தசாரதி
20. சிறந்த பின்னணிப் பாடகி : மும்பை ஜெயஸ்ரீ
21. சிறந்த ஒளிப்பதிவாளர் : ஆர்.டி. ராஜசேகர்
22. சிறந்த ஒலிப்பதிவாளர் : லஷ்மி நாராயணன்
23. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் :அந்தோணி
24. சிறந்த கலை இயக்குநர் : தோட்டாதரணி (சந்திரமுகி, சிருங்காரம்)

25. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் :
கனல் கண்ணன் (சண்டக்கோழி)
26. சிறந்த நடன ஆசிரியர் : கலா (சந்திரமுகி)
27. சிறந்த ஒப்பனைக் கலைஞர் : சுந்தரமூர்த்தி
28. சிறந்த தையற் கலைஞர் : ருக்மணி கிருஷ்ணன் (சிருங்காரம்)
29. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்): எஸ்.என். சுரேந்தர்
30. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) : சவிதா

**2004–2005ஆம் ஆண்டிற்கு, எம்.ஜி.ஆர். திரைப்படம்** மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் களுக்கு வழங்கப்படவுள்ள விருதுகள் பின்வருமாறு :

1. சிறந்த இயக்குநர் : என். பார்த்தசாரதி
2. சிறந்த ஒளிப்பதிவாளர் : பி. பிரசாத்
3. சிறந்த ஒலிப்பதிவாளர் : ஜே. பிரின்ஸ் டேவிட்
4. சிறந்த படத்தொகுப்பாளர் : எஸ். சண்முகநாதன்
5. சிறந்த படம் பதனிடுபவர் : ஆர்.அன்பு சத்தியன்.

## 2006ஆம் ஆண்டுக்கான விருதுகள்

தேர்வுக்குழு செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006ஆம் ஆண்டிற்கு அனுமதித்துள்ள பரிசுகளும் விருதுகளும் பின்வருமாறு :–

1. சிறந்த படம் – முதல் பரிசு : வெயில்
2. சிறந்த படம் – இரண்டாம் பரிசு : பருத்திவீரன்
3. சிறந்த படம் – மூன்றாம் பரிசு : திருட்டு பயலே
4. சிறந்த படம் – சிறப்புப் பரிசு : இலக்கணம்
5. பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படம்– சிறப்புப்பரிசு : காதலே என் காதலே
6. சிறந்த நடிகர் : கமல்ஹாசன் (வேட்டையாடு விளையாடு)
7. சிறந்த நடிகை : ப்ரியாமணி (பருத்திவீரன் )
8. சிறந்த நடிகர் – சிறப்புப் பரிசு : கார்த்தி (பருத்திவீரன் ) பக்ரு (டிஷ்யூம்)
9. சிறந்த நடிகை சிறப்புப் பரிசு : சந்தியா (டிஷ்யூம்)
10. சிறந்த குணச்சித்திர நடிகர் : நாசர் (எம் மகன் )
11. சிறந்த குணச்சித்திர நடிகை : சரண்யா (எம்மகன் )
12. சிறந்த வில்லன் நடிகர் : பசுபதி (ஈ)
13. சிறந்த நகைச்சுவை நடிகர் : வடிவேலு (இம்சை அரசன் 23ஆம் புலிகேசி)
14. சிறந்த இயக்குநர் : திருமுருகன் (எம் மகன் )
15. சிறந்த கதையாசிரியர் : பேரரசு (திருப்பதி)
16. சிறந்த உரையாடல் ஆசிரியர் : சீமான் (தம்பி)
17. சிறந்த இசையமைப்பாளர் : யுவன் சங்கர் ராஜா
18. சிறந்த பின்னணிப் பாடகர் : மது பாலகிருஷ்ணன்
19. சிறந்த பின்னணிப் பாடகி : ஸ்ரேயா கோஷல்
20. சிறந்த ஒளிப்பதிவாளர் : ரவிவர்மன் (வேட்டையாடு விளையாடு)
21. சிறந்த ஒலிப்பதிவாளர் : யு.கே.ஐ. ஐயப்பன் (திருப்பதி)
22. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் : சுரேஷ் அர்ஸ்
23. சிறந்த கலை இயக்குநர் : பி.கிருஷ்ணமூர்த்தி (இம்சை அரசன் 23ஆம் புலிகேசி)
24. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : சூப்பர் சுப்பராயன்
25. சிறந்த நடன ஆசிரியர் : சிவசங்கர்
26. சிறந்த ஒப்பனைக் கலைஞர் : ரவி (இம்சை அரசன் 23ஆம் புலிகேசி)
27. சிறந்த தையற் கலைஞர் : சாய் (அரண்)
28. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) : கதிர்
29. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) : ஜெயகீதா.

**2005–2006ஆம் ஆண்டிற்கு, எம்.ஜி.ஆர். திரைப்படம்** மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள விருதுகள் பின்வருமாறு :

1. சிறந்த இயக்குநர் : எஸ்.முரளிமனோகர்
2. சிறந்த ஒளிப்பதிவாளர் : ஜீ.சிவராமன்
3. சிறந்த ஒலிப்பதிவாளர் : வி.ஹேமநாதன்
4. சிறந்த படத் தொகுப்பாளர் : என்.ஜான் பால்
5. சிறந்த படம் பதனிடுபவர் : எல்.கே.கீர்த்திபாசு.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

மேலும் 2006ஆம் ஆண்டுக்குப் பின் வருமாறு கலைத்துறை வித்தகர் விருதுகள் தமிழக அரசு சார்பில் வழங்குவதென முடிவெடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார் :–

1. அறிஞர் அண்ணா விருது : இயக்குநர் இராமநாராயணன்
2. கலைவாணர் விருது : நகைச்சுவை நடிகர் விவேக்
3. ராஜா சாண்டோ விருது : இயக்குநர் தங்கர்பச்சான்
4. பாவேந்தர் பாரதிதாசன் விருது : கவிஞர் தாமரை
5. எம்.ஜி.ஆர். விருது : நடிகர் அஜீத் குமார்
6. கவிஞர் கண்ணதாசன் விருது : கவிஞர் பா.விஜய்
7. நடிகர் திலகம் சிவாஜிகணேசன் விருது : நடிகர் விக்ரம்
8. தியாகராஜ பாகவதர் விருது : பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன்.

தமிழக அரசு சார்பில் விரைவில் சென்னையில் நடைபெறவுள்ள விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிசுகளையும், விருதுகளையும் வழங்கி சிறப்பு செய்வார்.

# தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு சிறப்பு வைரப்பரிசு




தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு பண்பாடு மற்றும் கலை நயத்திற்கான சிறப்பு வைரப் பரிசு மாண்புமிகு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி. அம்பிகா சோனி அவர்களால் வழங்கப்பட்டது.

புதுடெல்லியில் இருந்து வெளிவரும் பிரபல சுற்றுலா இதழான 'இன்றைய பயணிகள்' (Today's Traveller) எனும் ஆங்கில இதழ் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களின் சுற்றுலா சேவையைப் பாராட்டும் வகையில் பரிசு வழங்கி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறைக்கு பண்பாடு மற்றும் கலைநயச் சிறப்பிற்கான இந்த இதழின் சிறப்பு வைரப்பரிசினை மாண்புமிகு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி அம்பிகா சோனி அவர்கள் 21.8.2007 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் அதன் இயக்குநர் மற்றும் நிருவாக இயக்குநர் டாக்டர் எம். இராசாராம், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.



# கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**



கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

R.N.I. No:21446/70-Regn.No:TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08




தமிழரசு